REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 30 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 233 | Monday 30, September, 2024 | 20பக்கங்கள் | 50/-



## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு ருவாண்டா அரசு வாழ்த்து



நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ருவாண்டா குடியரசு அரசாங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையே நிலவும் 06

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்படமாட்டாது

## சர்ச்சைக்குரிய 03 வினாக்களுக்கும் புள்ளிகள்

## பிரதமரால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழு பரிந்துரை

### வினாத்தாள் மதிப்பீடுகளை விரைவில் ஆரம்பித்து தாமதமின்றி பெறுபேறுகள் வெளியிடவும் முடிவு

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்பட மாட்டாதென கல்வி அமைச்சும் பரீட்சைகள் திணைக்களமும் நேற்று அறிவித்துள்ளன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பிரதமரினால் நியமிக்கப்பட்ட 07 பேர் கொண்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளின்படி, வினாத்தாள் மதிப்பீடுகளை விரைவில் ஆரம்பித்து பெறுபேறுகளை தாமதமின்றி வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தரவும், கல்வி அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலக்கா ஜயசுந்தரவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தரவும், கல்வி அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலக்கா ஜயசுந்தரவும் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.





பரீட்சையை மீண்டும் நடத்துவது 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் மன நிலையில் கடுமையான தாக்கத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தும். அனைத்து பிள்ளைகளுக்கும் நீதி வழங்குவதும் அவசியம். மிகவும் பொருத்தமான மாற்றீடாக, பரீட்சைக்கு முன் விவாதிக்கப்பட்ட மூன்று கேள்விகளுக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் மதிப்பெண் வழங்குவது சிறந்ததென அந்த நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது. 06

## பிரதமர் ஹரிணி கண்டி விஜயம்





கண்டி, தலதா மாளிகைக்கு விஜயம் செய்த புதிய பிரதமர் ஹரிணி அமரசூரிய, கண்டி, கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்துக்கு சென்று வழிபட்டதுடன், கட்டுக்கலை ஜும்ஆ பள்ளிவாசலுக்கும் சென்று பிரார்த்தனைகளில் கலந்துகொண்டார்.
(படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்)

சுயாதீன தொலைக்காட்சி சேவையில்

## உயர் தரத்திலான சின்னத்திரை சினிமா தயாரிப்புகளுக்கு வாய்ப்பு

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் உயர் தரத்திலான சின்னத்திரை சினிமாக்களை ஒளிபரப்பும் நோக்குடன், புதிய சின்னத்திரை சினிமா படைப்புகளை கொள்முதல் செய்ய சுயாதீன தொலைக்காட்சி சேவை தீர்மானித்துள்ளது.

அதன்படி, சின்னத்திரை சினிமா தயாரிப்பாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் தங்கள் படைப்புகளை சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு விரைவில் அனுப்பிவைக்குமாறு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. முறையான வழிமுறையுடன் தெளிவான 06

## IMF ஆதரவுடனான திட்டங்களுக்கு பாதிப்பின்றி NPP அரசு தொடரும்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல், தேசிய மக்கள் சக்தி திட்டத்தை தொடரும். எனினும் திட்டத்தின் நோக்கங்களை வேறு அணுகுமுறையினூடாக அடைவதற்கு முயல்வோமென,தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவையின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.



முன்னைய அரசாங்கங்களின் அணுகுமுறையிலிருந்து வேறுபட்ட அணுகுமுறையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்பற்றும் என அவர் தெரிவித்துள்ளார். பொருளாதார சுமை களை நியாயமான விதத்தில் 06

## புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கொண்டுவர தயார்

இலங்கையின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கொண்டுவருவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில், கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.



இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் 32ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமெரிக்க வர்த்தக சபை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## காணாமல்போன 4,000 வாகனங்கள்: விசேட கணக்காய்வு ஆரம்பம்

பல அரச நிறுவனங்களில் காணாமல் போன மற்றும் இடந்தவறி வைக்கப்பட்டுள்ள 4,000க்கும் அதிகமான வாகனங்கள் தொடர்பில், விசேட கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.ஜி.சி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக முழுமையான அறிக்கை பாராளுமன்றத்தில் 06

இஸ்ரேலின் வான்வழி தாக்குதல்

## ஹிஸ்புல்லாவின் மற்றொரு தளபதி Nabil Qaouk உயிரிழப்பு



லெபனான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் வான்வழித் தாக்குதலில், ஹிஸ்புல்லா அமைப்பின் மற்றொரு நிறைவேற்றுக் குழுவின் தளபதியான Nabil Qaouk கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு படை (ஐடிஎப்) அதன் எக்ஸ் பக்கத்தில் நேற்று (29) (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டிருக்கும் பதிவில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த கவுக், இஸ்ரேல் அரசு மற்றும் மக்களுக்கு எதிரான தீவிரவாத தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டார். கடந்த 1980 இல், அவர் ஹிஸ்புல்லாவில் இணைந்தார். அவர் நிபுணத்துவம் வாய்ந்த முக்கிய நபர் என இஸ்ரேல் ராணுவத்தின் எக்ஸ் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தபால் மூல வாக்களிப்பு: தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவித்தல்

பாராளுமன்ற தேர்தலில், அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் 2024.10.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024.10.08ஆம் திகதியுடன் முடிவடையும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.2024 வாக்காளர் இடாப்பே இதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது.



கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக அஞ்சல் மூல வாக்கிற்கு விண்ணப்பித்த அனைத்து வாக்காளர்களும் இம்முறை தேர்தலுக்காக மீண்டும் தமது அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கட்டாயமானது.அதன் பிரகாரம், தகைமையுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பங்களும் 2024.10.08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய மாவட்டத்தின் மாவட்டத் தெரிவத்தாட்சி 06

## GCE O/L பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் (2023) பரீட்சைகள் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.



பெறுபேறுகளின் பிரகாரம், காலி சங்கமித்தா மகளிர் கல்லூரி மாணவி ஹிருணி மல்ஷா குமாரதுங்க, நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இரண்டாம் இடத்தை கொழும்பு மியூசியஸ் கல்லூரியின் குலுனி மெத்சரா மற்றும் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியின் விமன்சா ஜயனதி ரத்னவீர ஆகியோர் பெற்றுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் பெறுபேறுகளின்படி, மூன்று மாணவிகள் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளனர். கொழும்பு விஷாகா மகளிர் 06



03
### இந்திய வெளிவிவகா அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வருகை

03
### வாகனங்களில் அரச இலச்சினை மற்றுமொரு விசேட சுற்றறிக்கை

## மிருகக் காட்சிசாலையில் பல நிகழ்வுகள் ஏற்பாடு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் சிறுவர்களுக்கான பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, மிருகக் காட்சிசாலையின் நடவடிக்கை பிரிவு பணிப்பாளர் திருமதி அனோமா பிரியதர்ஷனி தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் முதலாம் திகதி இடம்பெறும் சர்வதேச சிறுவர் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில், 12 வயதுக்குட்பட்ட 06

## அரசியலமைப்பு சபை: ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத்



அரசியலமைப்பு சபையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியலமைப்புக்கு அமைவாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அடுத்த பாராளுமன்றம் கூடும் வரை, சபாநாயகர் தலைமையில் அரசியலமைப்பு பேரவை செயற்படும். இதற்கமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை 06

## அ.இ.ம காவிலிருந்து விலகிய அப்துல்லா

### உத்தியோகபூர்வமாக அறிவித்தார்

கிண்ணியா நிருபர்



முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்தும் கட்சியின் சகல உறுப்புரிமைகளிலிருந்தும் விலகிக்கொள்வதாக, முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார். 06

## பயணித்து கொண்டிருந்த பஸ்ஸின் சக்கரங்கள் கழன்றதால் பரபரப்பு

### சாரதியின் சாதுர்யத்தால் விபத்து தவிர்ப்பு



வெலிமடை பொரலந்த வீதியில் பயணித்து கொண்டிருந்த பண்டாரவளை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியின் பின் சக்கரங்கள், திடீரெனக் கழன்றதால் பாரிய விபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டது. எனினும் சாரதியின் சாமர்த்தியத்தால், விபத்து 06

# நகர்வலம்






## புத்தளத்தில் இடம்பெற்ற ஹோட்டல் முகாமைத்துவ சர்வதேச கல்வி நிலையத்தின் கௌரவிப்பு நிகழ்வு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் ஹோட்டல் முகாமைத்துவ சர்வதேச கல்வி நிலையத்தின் (IAHM) முதலாவது வருட கௌரவிப்பு நிகழ்வுகள் புத்தளம் பிரதேச செயலகத்தின் சுபாஷி மண்டபத்தில், சர்வதேச சுற்றுலா தினமான வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்றது.

புத்தளம் ஹோட்டல் முகாமைத்துவ கல்வி நிலையத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஜீ. சாஹிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் பிரதேச செயலாளர் சம்பத் வீரசேகர கலந்து சிறப்பித்தார்.

புத்தளம் கல்வி வலயத்தின் ஓய்வு நிலை கல்வி பணிப்பாளர் இஸட். ஏ.சன்ஹீர், சிலாபம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவி பணிப்பாளர் மதுர ஏக்கநாயக்க, பிரதேச செயலகங்களின் அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கல்வி நிலையத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஜீ.சாஹிக் வரவேற்புரையை நிகழ்த்தியதை





தொடர்ந்து அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன.இந்த கல்வி நிலையத்தில் அடிப்படை நிலை சர்வதேச சமையல் பாடநெறியை நிறைவு செய்த முதல் தொகுதி 08 மாணவர்களும், இரண்டாம் தொகுதி 15 மாணவர்களுமாக மொத்தம் 23 மாணவர்கள் இதன் போது பிரதம மற்றும் கௌரவ அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு வகையிலும் உதவியாக இருந்தவர்கள் இதன்போது அதிதிகளினால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

### பிரித்தானிய இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவை

## ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க இலங்கையின் 9வது நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதனை யிட்டு பிரித்தானியாவில் உள்ள இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவை தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது. இதனை அதன் தலைவர் ஷகீர் நவாஸ் தெரிவித்தார்.

அவரது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற வெற்றி இலங்கை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது,

அத்தோடு மாற்றத்திற்கான மக்களின் விருப்பம், நம்பகமான அரசியல் கலாசாரம், நல்லாட்சி மற்றும் சமூக நீதி ஆகியவற்றை அது பிரதிபலிக்கிறது.

இந்த சவாலான நேரத்தில், நாட்டை ஒன்றிணைக்கவும், நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பவும், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கி வழி வகுக்கும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தலைவர் இலங்கைக்கு தேவை என பிரித்தானியாவில் உள்ள இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவை நம்புகின்றது.

எனவே ஜனாதிபதி திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டமை ஒரு காலத்திற்கேற்ற தேவையாகவும் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றமாகவும் அது கருதுகின்றது.

இலங்கையின் புலம்பெயர்ந்தோர் நாட்டை மாற்றியமைப்பதற்கும் மீளக் கட்டியெழுப்புவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும் என அது நம்பிக்கை கொண்டுள்ளது

இங்கிலாந்தில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களிடையே ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஓர் அமைப்பாக, பிரித்தானியாவில் உள்ள இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவை இந்த நெருக்கடியான காலகட்டத்தின் போது தனது ஆதரவை வழங்க உறுதி பூண்டுள்ளது.

மீட்சிக்கான பாதையில் அமைதி, பொருளாதார மறுசீரமைப்பு அத்தோடு சமூக நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளில் ஒத்துழைக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

பிரித்தானியாவில் உள்ள இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவை

நமது தாய்நாட்டை ஒரு பிரகாசமான மற்றும் வளமான நாடாக மாற்றியமைக்க ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவை இங்கிலாந்தில் உள்ள இலங்கை முஸ்லிம் சமூகத்தின் நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் முக்கியமான அமைப்பாகும்.

ஒற்றுமையை வளர்ப்பதற்கும், கலாசார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும், அதன் உறுப்பினர்களின் சமூகபொருளாதார நலனை மேம்படுத்துவதற்கும் இந்த அமைப்பு உறுதிபூண்டுள்ளது.

## சமூக தொண்டர் அருளானந்தம் மறைவுக்கு சர்வதேச இந்து மத பீடம் அனுதாபம்

பிரபல வர்த்தகரும் சமூக, சமய சேவையானருமான எஸ் டி எஸ் அருளானந்தம் அவர்களின் மறைவுக்கு சர்வதேச இந்து மத பீடம் இரங்கல் செய்தியை தெரிவித்துள்ளது.

(லீலா குரூப்) அமரர் சின்னத்துரை அவர்களின் மகனாகிய அமரர் எஸ் .டி .எஸ் அருளானந்தம், கப்பிதாவத்தை கதிர்காம யாத்திரை சபையின் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவராகவும் கதிர்காமம் தெய்வையானை நிர்வாக குழு அங்கத்தவராகவும் சிறந்த வர்த்தகராகவும் சமூக சேவையாளராகவும் விளங்கியவர்.

லீலா குரூப் தலைவராகவும் இருந்த இவர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு தங்குமிட வசதி, உணவு போன்ற பல்வேறு நற்பணிகளை செய்து வந்தவர் . யுத்தம் முடிவடைந்த காலத்திலும் தமிழ் மக்களுக்கு பல்வேறு சமூக பணிகளை ஆற்றிய ஒரு நபர்.

அன்னாருடைய மறைவு சமூகத்திற்கு பெரும் இழப்பாக உள்ள நிலையில் அன்னாருடைய ஆத்மா சிவபிராப்தம் அடைய இறைவனை பிராத்திக்கின்றோம் என சர்வதேச இந்து மத பீடம் சார்பாக அதன் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 'இலக்கியகளம் 437'ஆவது நிகழ்வு






சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ' ' சங்கீத கலாபூஷணம் ' ஹம்ஷானந்தி தர்மபாலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சமூக ஆய்வாளர் பூங்கோதை தங்கமயில் "இசையும் திறனாய்வும்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். உரைஞருக்கான நினைவு நூலினை ஹ. தர்மபாலன் வழங்கினார். தலைவி சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவையும் இதில் கலந்து கொண்ட மன்ற உறுப்பினர்களையும் காணலாம்.




பந்தளராஜன் நற்பணி மன்றத்தின் (புனித சபரிமலை யாத்திரை குழு) ஏற்பாட்டில் கொழும்பு, ஜிந்துப்பிட்டி, நீதிராஜா கல்யாண மண்டபத்தில் டாக்டர் குனாளன் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (28) காலை தொடக்கம் மாலை வரையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்து கொண்டோரையும் நோயாளர்களை மருத்துவர்கள் பார்வையிடுவதையும் மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் மருந்து மற்றும் மூக்குக்கண்ணாடி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனத்துடன் இணைந்து 250 கலைஞர்களை கௌரவித்தது. இந் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. 'வாழும் போதே வாழ்த்துவோம்' என்ற தொனிப் பொருளில் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொழிற்சங்க சம்மேளனத்தின் பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இந்த நிகழ்வில் வெலிகம ரிம்ஸா முஹம்மத் கலை இலக்கியத் துறையில் ஆற்றி வரும் பங்களிப்புகளுக்காக இலக்கியத் தென்றல், லங்கா புத்திர, தேசபந்து ஆகிய கௌரவப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதுவரை கலை இலக்கியத் துறையில் 14 நூல்களை வெளியிட்டுள்ள இவர், ஏற்கனவே சாமஸ்ரீ கலாபதி, சாதனைக்குரிய மகளிர், காவியப் பிரதீப, கலாபிமானி, கலைமதி, கவித்தாரகை, கலைச்சுடர் ஆகிய பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து ஆதரவாளர்கள் சிலருடன் ஆலோசனை

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் வடமேல் மாகாண ஆளுநருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தலைமையில் வரப்போகின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர் கொள்வது என்பது குறித்து ஆதரவாளர்கள் சிலருடன் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் ஏறாவூரைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் அரசியல் பிரமுகர்களும் இளைஞர் அணியினரும்



பங்குபற்றியிருந்தனர். எதிர்வருகின்ற பொதுத் தேர்தலுக்குத் தயாராவதற்கான யுக்தித் திட்டமிடல்கள் பற்றி இங்கு விவாதிக்கப்பட்டது.

## ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்பு

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

அனுராதபுரம் பிஹிம்பியகொல்லேவ பினிகல பகுதியில் உள்ள வீடொன்றில் மலசல கூட கழிவு நீர் தொட்டியில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பிஹிம்பியகொல்லேவ பினிகல பகுதியைச் சேர்ந்த எஸ்.கருணாசேன என்ற 54 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். குறித்த வீட்டின் மலசலகூட கழிவு நீர் தொட்டியில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அயல் வீட்டார் சடலமாக மீட்கப்பட்டவரின் மகனிடம் தெரித்துள்ளனர். இதனையடுத்து சடலமாக மீட்கப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாயின் மகனும் தாயும் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் எவரேனும் நபரால் அல்லது குழுவினரால் கொலை செய்யப்பட்டு மலசல கூட கழிவு நீர் தொட்டியில் போடப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கெக்கிராவயில் காட்டு யானை சடலமாக மீட்பு

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

கெக்கிராவ பெல்லங்கடவல பகுதியில் காட்டு யானை ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கனேவல்பொல வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைகளம் தெரிவித்தது. கனேவல்பொல வனஜீவராசிகள் திணைக்கள பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் யானையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவின் தலைமையில் 2024.10.02ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “நானும் ‘யாழ்ப்பாண தமிழ் அகராதி’ உருவாக்கமும்'' என்னும் தலைப்பில் சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நடராசா சிறிரஞ்சன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர் திருமதி வானதி காண்டீபன் தலைமையில் 2024.10.04ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்களம் நிகழ்ச்சியில் “பேராசிரியர் சபா ஜெயராசாவின் ‘ஆடற் கலை’ எனும் நூலை முன்வைத்து...!'' என்னும் தலைப்பில் அபிநயஷேத்ரா நாட்டியப்பள்ளியின் இயக்குனர் திருமதி திவ்யா சுஜேன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## உடப்பு கடற்பரப்பில் ஒரு தொகை பீடி இலைகள்

**(உடப்பு குறூப் நிருபர்)**

உடப்பு கடற்பரப்பில் ஒரு தொகை பீடி இலைகள் (27)வெள்ளிக்கிழமை கரையொதுங்கியது. காலை வேளையில் இவை கடலிலிருந்து மிதந்து வந்ததை பொது மக்கள் அவதானித்ததை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடப்பு காளியம்மன் கோவிலருகில் உள்ளகடற்கரையில் இரண்டு பீடி இலை மூடைகள் கைப்பற்றப் பட்டன. மற்றுமொரு மூடை சற்று தொலைவிலும் கரையொதுங்கியது. இவை ஒவ்வொன்றும் 50கிலோ எடைகொண்டதாக காணப்பட்டது. உடப்பு பொலிஸார் இதனை கைப் பற்றியுள்ளனர். இரவு நேரத்தில்



இவை கடலில் சென்ற கடத்தல்காரர்களினால் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2024 செப்டெம்பர் 30 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.03
அஸர் - 03.16
மஃரிப் - 06.05
இஷா - 07.14

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 14
ராகுகாலம் : காலை : 7.32 - 9.02வரை
சுபநேரம் : பகல் : 12.02 - 1.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அரச அதிகாரிகளுக்கு எதிரான ஊழல்,மோசடி குற்றச்சாட்டுகள்

## முறையான விசாரணையின் பின் நடவடிக்கை

தங்களது அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் ஊழல், மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான விசாரணையின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மல்வத்து அஸ்கிரிய பீடத்தினரைச் சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே, பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ், உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பல அதிகாரிகள் தொடர்பில் குற்றச்சாட்



டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தற்போது வெளியிலிருந்து அரச அதிகாரிகளைக் கொண்டு வர முடியாது.

எனவே, தற்போதுள்ள அதிகாரிகளைக் கொண்டு, முகாமைத்துவம் செய்து நாம் கடமைகளை முன்னெடுத்து வருகிறோம்.

எவ்வாறாயினும், அந்த அதிகாரிகள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், முறையான விசாரணைகளை முன்னெடுத்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வருகை

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார். புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே, அவர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.



இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (04) ஒரு நாள் விஜயமாக இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க. புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ள இச் சந்தர்ப்பத்தில், இந்த உத்தியோகபூர்வ விஜயம் இடம்பெறுகிறது.

06

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன.

பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகள் 'doenets.lk/examresults' தளத்தில் சுட்டெண் உள்ளிட்ட விபரங்களை உள்ளீடு செய்வதன் மூலம் பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியும்.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, கடந்த மே மாதம் 06ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் மொத்தம் 4,52,979 விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுத் தேர்தலை அடுத்து மாகாண சபைத் தேர்தல்

## பிரதமர் ஹரிணி அமரசூரியஉறுதி

பொதுத் தேர்தலை தொடர்ந்து நிச்சயமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம். மாகாண சபைத் தேர்தலை நடத்துவது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது அரசியல் வாக்குறுதியல்ல. அது அவர்களின் உரிமையென்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதியளித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எவ்வித மாற்றமுமில்லாமல் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்துவோம்.

இனப்பிரச்சினைக்கு ஒரு நிலைக்குள் இருந்து கொண்டு மாத்திரம் தீர்வு காண முடியாது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் புதிய சட்ட உருவாக்கம் ஊடாக தீர்வு காணலாம் என்று கருதுகிறார்கள். அதுவல்ல.

அரசாங்கம் செயற்படும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் அரசாங்கம் தம்மையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை உணர வேண்டும். அவ்வாறான வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும்.

சட்ட மாற்றத்தின் ஊடாக மாத்திரம் இதனை மேற்கொள்ள முடியாது. நாட்டை நிர்வகிக்கும் கலாசாரம் மாற்றமடைய வேண்டும். அந்த மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்துவோம்.

மொழி உரிமை, அரச நிர்வாக உரிமை பொதுவான முறையில் உறுதிப்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து அரசியலமைப்பின் ஊடாக மாற்றங்களை ஏற்படுத்துவோம்.

தீர்க்க முடியாத பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அரசியல், கல்வி, சுகாதாரம், சமூகம் சார்ந்த விடயங்கள் உட்பட அடிப்படைத் தேவைகளில் காணப்படும் பிரச்சினைகள் இனப்பிரச்சினைக்கு ஒரு காரணியாக உள்ளது.

யுத்தம் முடிவடைந்துள்ளது. இருப்பினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு

06

# வாகனங்களில் அரச இலச்சினை மற்றுமொரு விசேட சுற்றறிக்கை



அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில், அரச இலச்சினை, திணைக்களம் அல்லது நிறுவனங்களின் பெயரைப் பயன்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கையை மீண்டும் நடைமுறைபடுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

வாகனங்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுக்கும் வகையில், இவ்வாறு செயற்படுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

வாகனங்களுக்கு அரசாங்க இலச்சினை மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்துவதற்கான சுற்றறிக்கையை 2002 இல், பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சீர்திருத்தங்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

அரச சின்னங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக 1992 வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை மீளாய்வு செய்து சுற்றறிக்கை வெளியிட்டிருந்தது.

1992 ஆம் ஆண்டின் சுற்றறிக்கை வாகனங்களில் அரச இலச்சினையைப் பயன்படுத்துவது தொடர்பாக மட்டுமே அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், அந்த அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்படவில்லை என கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய, அரச இலச்சினையுடன் அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் பெயரும் குறிப்பிடப்பட வேண்டும் என திருத்தப்பட்ட சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பாராளுமன்ற தேர்தல்:முதலாவது சுயேச்சைக் குழு நேற்று கட்டுப்பணம்

## கொழும்பில் போட்டியிடுவதாக அறிவிப்பு

பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுவொன்று நேற்று கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

இவ்வருட பாராளுமன்ற தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தும் முதலாவது குழு இதுவென, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர்கள் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பாராளுமன்ற தேர்தல் செலவு குறித்து இறுதி உடன்பாடு எட்டப்படும் என்று கூறப்படுகிறது.

06

# மக்களின் விருப்பத்துக்கேற்ப புதிய தலைமையை ஏற்பது தார்மீக பொறுப்பு

## ஊடகங்களும் நடுநிலையை பேண வேண்டும்

மக்களின் விருப்பத்திற்கேற்ப புதிய தலைமை ஏற்றுக்கொண்டு அரசியல் கலாசாரத்தின் மகிமையை ஒரு போதும் இழந்து விடாமலிருப்பது அனைவரதும் தார்மீக கடமையாகும் என,முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அமைச்சர், மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கொழும்பு மேயர் ஆகிய முக்கிய பொறுப்புகளை வகித்துள்ள கரு ஜயசூரிய தனது 84ஆவது வயதை பூர்த்தி செய்கிறார்.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் மாநாட்டு மண்டபத்தில் இன்று (30) ஆரம்பமாகவிருக்கும் அரசியல் கற்கை பாடநெறிகள் தொடர்பாக அமைப்பாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடலின் போதும், அவரது பிறந்தநாளை முன்னிட்டு சமய வழிபாடுகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மத்தியிலும் கொழும்பு அமரசேகர வீதி சூர்யா பவுண்டேஷன் மண்டபத்தில் வைத்து பேசும்போதே கரு ஜயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள கருத்தில் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப, புதிய சிந்தனையாளர்களுக்கு அதிமுக்கிய கடமை இருப்பதான பிரச்சாரங்களை காண்கிறோம்.



நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களை ஜனநாயக அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

நாட்டின் நிர்வாகம், உற்பத்தி மற்றும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளுக்கு உறுதுணை புரியும் அனைத்து செயற்பாடுகளையும் அரசியல் அதிகாரம் மற்றும் நிர்வாக கட்டமைப்பின் அங்கத்தவர்களே வழிநடத்துகின்றனர். அவ்வாறனவர்களின் பெறுமதியையும், வலிமையையும் நாம் நன்கு புரிந்து கொண்டுள்ளதாலேயே ஜனநாயக ரீதியாக தெரிவாகும் பிரதிநிதிகளை மதிக்கிறோம். இதற்கு நடுநிலையான ஊடக சுதந்திரமும் தேவை.

மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதை ஆட்சியாளர்கள் தங்களது தலையாயக் கடமையாக கருத வேண்டும். 24 மணித்தியாலங்களுக்கான தடையில்லா மின்சார விநியோகம், பால்மா, எரிவாயு உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்கான நியாய விலை நிர்ணயித்தல் துரிதமாக இடம்பெற வேண்டும். அப்போது தொழில்துறை, ஏற்றுமதி மற்றும் சுற்றுலாதுறை ஆகியவை துரித வளர்ச்சியை அடையும்.

கடந்த சில வருடங்களாக கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாக்கங்களையும் உடனடியாக சரி செய்ய வேண்டும்.

06

# துணை முதல்வர் உதயநிதிக்கு வாழ்த்து

தமிழக துணை முதல்வராக தமிழகத்திலுள்ள ஆளுநர் மாளிகையில் பதவியேற்ற உதயநிதி ஸ்டாலினுக்கு, உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.



எதிர்வரும் காலங்களில் தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவாரென்ற நம்பிக்கை உள்ளது. தமிழ்நாட்டு இளைஞர்களின் நம்பிக்கையையும், வருங்கால சந்ததியினருக்கு ஏற்ற வகையில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிடவும், உலகத் தமிழ் சமுதாயத்தின் நன்மைகளையும் பேணிக்காப்பாரெனவும் நம்புகிறோம். உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் செல்வகுமார் அந்த வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்

# 'யுக்திய': மறுசீரமைப்புடன் விரைவில் முன்னெடுக்கப்படும்

## பதில் பொலிஸ் மாஅதிபர்

'யுக்திய' நடவடிக்கையை அமுலாக்குவதிலுள்ள குறைபாடுகளை அவதானித்து, அவற்றை சீர்செய்து, சட்டத்தின் மூலம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வரென பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய, அண்ஸ்ரீமையில் தலதா மாளிகைக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.



அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்:

06

# படுபாதகச் செயல்களை இஸ்ரேல் நிறுத்தாவிடின் பாரிய விபரீதங்கள்

## நஸ்ரல்லாஹ்வின் மரணம் கவலையளிக்கிறது

இஸ்ரேலிய விமான குண்டு வீச்சில் ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹசன் நஸ்ரல்லாஹ் படுகொலை செய்யப்பட்டதை, வன்மையாகக் கண்டிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் விடுத்துள்ள கண்டனச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிர்த் தியாகம் புரிந்துள்ள அஷ் ஷஹீத் ஹசன் நஸ்ரல்லாஹ் அவர்களின் குடும்பத்தினர் , அவரது சகாக்கள் மற்றும் ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தினருக்கு

எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன். லெபனான் மீதான சரமாரியான குண்டுவீச்சுத் தாக்குதல்களை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும். இஸ்ரேலிய தாக்குதல்களில் அங்கு ஏற்கனவே 700 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் லெபனானையும் இஸ்ரேல் குறிவைக்கத் தொடங்கியதையிட்டு மிகவும் வருந்துகிறோம். அஷ் ஷஹீத் ஹசன் நஸ்ரல்லாவின் படுகொலை பலஸ்தீனம் மற்றும் லெபனானில் மட்டுமல்லாது, முழு மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மிகவும் கவலையளிக்கூடியது. இஸ்ரேலின் வெறியாட்டத்தால்

பிராந்தியத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படக் கூடிய அபாயம் நிலவுகிறது.ஹிஸ்புல்லாஹ் தலைவர் நஸ்ரல்லாஹ் மற்றும் தியாகிகளான அவரது அமைப்பினரின் பங்களிப்பு காஸாவை விடுவிப்பதில் மட்டுமல்லாது,

06

# இலங்கையுடன் பேச்சு நடத்தி தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு கடிதம்

## ஜெய்சங்கரிடம் ராகுல்காந்தி கோரிக்கை

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கை உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்தி கைது செய்யப்பட்டுள்ள 37 தமிழக மீனவர்களை விடுதலை செய்வதுடன் அவர்களது படகுகளையும் மீட்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென, எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே, பூம்புகாரை சேர்ந்த 37 தமிழக மீனவர்கள் இரண்டு கண்ணாடி இழைப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்றனர்.இவர்களின் ஒரு படகு கவிழ்ந்ததில் இருவர் உயிரிழந்தனர். இச்சம்பவம் குறித்து இலங்கை கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது.அங்கு வந்த படையினர்,இவர்கள் எல்லை தாண்டியதாகக் கூறி (21) இவர்களைக் கைது செய்தனர்.





இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் தொடர்ச்சியாக இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். மேலும் அவர்களுடைய படகுகள் பறிமுதல் செய்யப்படுவது நியாயமற்றது. இவ்வாறு கைது செய்யப்படும் மீனவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவது கடும் கண்டனத்துக்குரியது.

சம்பவத்தன்று, கடலில் கவிழ்ந்த இலங்கை படகை மீட்க அவர்கள் முயற்சித்துள்ளனர். அவர்களுக்கு உதவி அளிக்கும்படி இலங்கை கடற்படையினரை தொடர்பு கொண்டு தெரிவித்த போதிலும், சர்வதேச கடல் எல்லை தாண்டி வந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக இலங்கை உயர் அதிகாரிகளுடன் பேசி கைது செய்யப்பட்டட 37 மீனவர்களை விடுதலை செய்து, அவர்களுடைய படகுகளை மீட்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இக்கடிதத்துடன் மயிலாடுதுறை எம்பி ஆர். சுதாவின் கடிதம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 14ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 26

### குறள் தரும் சிந்தனை

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது

ஒருவன் பாவங்களைச் செய்யினும்
புறங்கூறாதிருத்தல் நன்று.

## விவசாயம், கடற்றொழில் துறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றும் மானியம்

இலங்கை பொருளாதாரத்தில் விவசாயமும் கடற்றொழிலும் முக்கிய துறைகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

உணவு உற்பத்தி விவசாயத் துறைக்கு அவசியமான மண் வளத்தையும் சீதோஷண நிலையையும் இந்நாடு கொண்டிருக்கிறது.

இப்பின்புலத்தில் ஆரம்ப காலம் முதல் இந்நாடு விவசாயப் பொருளாதார நாடாக விளங்கி வருகின்றது. அத்தோடு இந்நாடு ஐரோப்பியரின் ஏகாதிபத்திற்கு உள்ளாக முன்னர் விவசாயப் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்த நாடாகவும் காணப்பட்டுள்ளது. அத்தோடு ஒரு காலத்தில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாக விளங்கியுள்ள இலங்கை வெளிநாடுகளுக்கும் அரிசியை அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறு தனித்துவம் மிக்க வரலாற்றை கொண்டுள்ள இந்நாட்டில், சுதந்திரத்திற்கு முன்னரான ஐரோப்பிய ஏகாதிபத்திய காலத்திலும் சுதந்திரத்திற்கு பின்வந்த காலத்திலும் தவறானதும் பிழையானதுமான விவசாயக் கொள்கைகள் முன்னெடுக்கப்பட்டன. விவசாய நிலங்கள் நிரப்பப்பட்டு துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதோடு அவற்றில் கட்டிடங்களும் எழுப்பப்படலாயின.

நெல் மற்றும் மரக்கறி வகைளுக்கு உத்தரவாத விலை பெற்றுக் கொடுக்கப்படவும் இல்லை. மரக்கறிகளின் விலைகளை எந்த சூழலிலும் அதிகரித்த நிலையில் பேணுவதற்காக பெருந்தொகையான மரக்கறி வகைகள் தம்புள்ள போன்ற பொருளாதார மத்திய நிலையங்களில் அழிக்கப்பட்டு வந்துள்ளன.

இக்காலப்பகுதிகளில் விவசாயத் துறையை ஊக்குவிக்கவென வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் உணவு உற்பத்தி விவசாயத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டு வீழ்ச்சியடையலாயிற்று. உள்நாட்டு உணவு உற்பத்தி விவசாய துறையில் இருந்து விவசாயிகள் தூரமாகலாகினர். இதன் விளைவாக பெருந்தொகையான வயல் நிலைகளை செய்கை பண்ணப்படாது கைவிடப்படலாகின. அதனால் அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவு பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டது.

இதன் விளைவாக வருடா வருடம் பெருந்தொகையான அந்நியச் செலாவணியை நாடு இழந்து வருகின்றது. உள்நாட்டில் உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய உணவுப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தால் அவற்றை இறக்குமதி செய்யவென அந்நிய செலாவணியை செலவிட நேரிடாது.

இவ்வாறான சூழலில் தான், 'விவசாயத்தில் ஈடுபட ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பயிர்ச்செய்கை காணிகளை வழங்கி அத்துறையை ஊக்குவிக்கவென அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா அண்மையில் அறிவித்திருக்கிறார். மக்கள் இத்திட்டத்தை பெரிதும் வரவேற்றுள்ளனர்.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவென காணியையும் வழங்கி அவர்களது உற்பத்திகளுக்கு உரிய சந்தை வாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்படும் போது விவசாயிகள் நிச்சயம் பயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுவர். அதன் ஊடாக நாட்டின் விவசாய உற்பத்திகளில் நிச்சயம் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படும்.

அந்த வகையில் இந்நாட்டின் நெற்செய்கையை ஊக்குவிப்பது தொடர்பில ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கா விஷேட கவனம் செலுத்தியுள்ளார். அற்கேற்ப 2024/2025 பெரும்போக செய்கைக்கென ஹெக்டேயருக்கு 25 ஆயிரம் ரூபாப்படியும் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியமும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் (நாளை) மானியம் வழங்கப்பட உள்ளது. அதற்கான அறிவுறுத்தலை ஜனாதிபதி திறைசேரிக்கு வழங்கியுள்ளார்.

அதற்கேற்ப இம்மானியம் விவசாயிகளுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் செயற்றிறனுடனும் ஒழுங்குமுறையாகவும் கிடைக்கப்பெறும் வகையில் அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பிட உள்ளது.

ஜனாதிபதியின் இந்த அறிவுறுத்தலை இந்நாட்டின் விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும் பெரிதும் வரவற்றுள்ளனர்.

விவசாயத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் நோக்கில் நியாயமான விலையில் உரம் உள்ளிட்ட விவசாயப் பொருட்களை வழங்குவதற்கும் சிறந்த விவசாய நடைமுறைகளுக்கு அமையவும் இரசாயன மற்றும் சேதனப் பசளை உள்ளிட்ட விவசாயப் பொருட்களுக்கு மானியம் வழங்குவதற்கும் புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்பவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள கடற்றொழில் துறையை ஊக்குவித்து மீளக்கட்டியெழுப்பும் நோக்கிலேயே கடற்றொரழிலாளர்களுக்கும் மானியம் வழங்கப்படுகின்றது.

இதன் ஊடாக கடற்றொழிலை நிறைபேறான மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்தவும் நிர்வகிக்கவும் அதன் ஊடாக மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் நுகர்வோருக்கு மீனைப் பெற்றுக்கொடுக்கவும் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகளின் ஊடாக விவசாயம் மற்றும் கடற்றொழில் துறையில் புத்தெழுச்சி ஏற்படும் எனலாம். அதனால் இந்த மானியங்களை உரிய முறையில் பயன்படுத்தி நெற்செய்கை மேம்பாட்டுக்கும் கடற்றொழில் துறை முன்னேற்றத்துக்கும் பங்களிக்க வேண்டும். இது விவசாயிகளதும் கடற்றொழிலாளர்களதும் பொறுப்பாகும். இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# இஸ்ரேலின் துல்லிய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் மரணம்



இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலைத் தொடர்ந்து 'சையது ஹசன் நஸ்ரல்லா இனி தீவிரவாதத்தால் உலகை அச்சுறுத்த முடியாது' என்று இஸ்ரேலிய இராணுவம் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டது.

ஆனாலும் ஹிஸ்புல்லா அமைப்பு அதனை உடனடியாக உறுதிப்படுத்தவில்லை. நஸரல்லா உடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் ராய்ட்டருக்கு தெரிவித்திருந்தன.

பெய்ரூட்டின் தெற்கு பகுதியிலுள்ள தஹ்யா பிரசேத்தில் அமைந்துள்ள ஹிஸ்புல்லாஹ்வின் தலைமையகம் மீது ஹிஸ்புல்லா தலைவரை இலக்கு வைத்து இத்தாக்குதலை மேற்கொண்டதாகக் குறிப்பிட்ட இஸ்ரேல், இத்தாக்குதலுக்கு பதுங்குழிகளை தாக்கியழிக்கும் 85 குண்டுகள் பாவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டது.

இந்த ஒவ்வொரு குண்டும் ஆயிரம் கிலோ கிராம் எடை கொண்டதோடு ஒவ்வொன்றும் 108 அடிகள் வரை நிலத்துக்குள் ஊடுருவி தாக்கியழிக்கும் திறன் கொண்டது என்று இஸ்ரேலிய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த அறிவிப்பும் நஸரல்லாவுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தமையும் லெபனானில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் தான் மறுநாள் சனிக்கிழமை அவர் கை விரலில் அணிந்திருந்த மோதிரத்தை அடிப்படையாக வைத்து அவர் கொல்லப்பட்டிருப்பதை ஹிஸ்புல்லா உறுதிப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன. கிட்டதட்ட 32 ஆண்டு காலமாக ஹிஸ்புல்லாவை வழிநடத்திய ஹசன் நஸ்ரல்லாவின் இழப்பு, ஹிஸ்புல்லாவுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.



அதேநேரம் இவரது மரணத்தை அறிந்ததும் லெபனான் முழுவதும் மக்கள் கதறி அழுது கண்ணீர் சிந்தியுள்ளதாக லெபனானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இஸ்ரேல் தெற்கு லெபனான் மீது விமானத் தாக்குதல் நடவடிக்கையை கடந்த 23 ஆம் திகதி முதல் கடுமையாக முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில் பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் குடியிருப்புக் கட்டடங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள ஹிஸ்புல்லாவின் தலைமையகத்தின் தரைத்தளத்திற்கு நஸ்ரல்லா வருகை தந்துள்ளதாகக் கிடைக்கபெற்ற தகவலை அடுத்து, அப்பகுதி மீது துல்லிய வான்வழித் தாக்குதல் நடத்திய இஸ்ரேல் இராணுவம் அவர் கொல்லப்பட்டதாகவும் எக்ஸ் தளத்தில் பதிவிட்டது.

நஸ்ரல்லா கொல்லப்பட்டத்தை மறுநாள் உறுதிப்படுத்திய ஹிஸ்புல்லா இயக்கம் வெளியிட்ட அறிக்கையில், "நஸ்ரல்லா தனது சக தியாகிகளுடன் இணைந்து கொண்டார். பலஸ்தீனத்துக்கு ஆதரவான, எதிரிகளுக்கு எதிரான புனிதப் போரைத் தொடர்வதென ஹிஸ்புல்லாகள் உறுதி எடுத்துள்ளனர்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

1960 இல் பெய்ரூட்டின் கிழக்கு போர்ஜ் ஹம்மூத் பகுதியில் பிறந்த ஹசன் நஸ்ரல்லாவின் தந்தை அப்துல் கரீம், ஒரு சிறிய மரக்கறி கடை நடத்தி வந்தவராவார். ஹசனின் இளமைக்காலத்தில் லெபனான் உள்நாட்டு போரில் சிக்குண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, இஸ்ரேல் இராணுவம் லெபனானை ஆக்கிரமித்தது. அந்த ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை பெறவென ஓர் உறுதியான அமைப்பு தேவை என்று முடிவெடுத்த போராளி குழுக்கள் ஹிஸ்புல்லா இயக்கத்தை 1982 இல் உருவாக்கினர். இக்குழுவின் தலைவராக அப்பாஸ் அல்முசாவி இருந்து செயற்பட்டு வந்த சூழலில் 1992 இல் இஸ்ரேலின் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் ஹசன் நஸ்ரல்லா தலைமையில் ஹிஸ்புல்லா தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. ஈரானுடன் நெருக்கமான உறவு கொண்ட நபராக விளங்கிய ஹசன் நஸ்ரல்லா, ஹிஸ்புல்லாவை ஓர் அரசியல் மற்றும் இராணுவ சக்தியாக மாற்றுவதில் முக்கியப் பங்காற்றினார். ஹிஸ்புல்லா குழுவின் ஆதரவாளர்களால் நன்கு மதிக்கப்பட்ட நஸ்ரல்லாவின் தலைமையின்கீழ், பலஸ்தீன ஆயுதக் குழுவான ஹமாஸ் மற்றும் ஈராக், ஏமனில் உள்ள போராளி குழுக்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

என்றாலும் கடந்த கால அனுபவங்களில் இருந்து சர்வதேசச் சூழல் எப்படி மாறுகிறது என்பதை நஸ்ரல்லா தொடராக அவதானித்து வந்தார். அந்தப் பின்புலத்தில் இன்று லெபனான் அரசாங்கத்தை வழிநடத்தும் முக்கிய இடத்தில் ஹிஸ்புல்லா இருக்கிறது. இந்த அமைப்புதான் ஹமாஸை முழுமையான ஆயுதம் தாங்கிய போராளிக் குழுவாக உருவாக்கியது. இவை அனைத்துக்கும் முக்கியப் புள்ளியாக செயல்படுவது ஹசன் நஸ்ரல்லாதான் என்பதை புரிந்துக்கொண்ட இஸ்ரேல், அவரைக் கொல்ல பல ஆண்டுகளாக திட்டம் தீட்டி வந்தது.

கிட்டதட்ட 32 ஆண்டுகளாக ஹிஸ்புல்லாவின் தலைவராக இருந்த ஹசன் நஸரல்லாவின் மூத்த மகன் ஹாடி 2000 இல் இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்ட போதும்கூட தெற்கு லெபனானில் இஸ்ரேலியப் படைகளுடனான போரை நஸ்ரல்லா தொடர்ந்து முன்னின்று நடத்தினார். என்ன நடந்தாலும் 'எல்லா லெபனான் பிரதேசங்களும் மீட்டெடுக்கப்பட வேண்டும்' என்றும் அவர் உறுதியாக செயற்பட்டார். அவர் மதத் தலைவராகவும் அறியப்பட்டார். ஆன போதிலும் இஸ்ரேலின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து 2006 முதல் பொதுவெளிகளில் தோன்றுவதை அவர் தவிர்த்துக் கொண்டார்.

### ஈரானில் ஐந்து நாட்களும் லெபனான், ஈராக்கில் மூன்று நாட்களும் துக்க தினமாகப் பிரகடனம்

இந்நிலையில் கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி காஸா மீது தொடங்கிய யுத்தத்தை நிறுத்துமாறு கோரி மறுநாள் 08 ஆம் திகதி முதல் இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்களை நஸரல்லாவின் உத்தரவின் பேரில் ஹிஸ்புல்லா ஆரம்பித்தது. அதற்கு இஸ்ரேலும் பதில் தாக்குதல்களை தொடங்கியதோடு இஸ்ரேல் - லெபனான் எல்லையில் இரு தரப்பினரும் எல்லை தாண்டிய தாக்குதல்களில் ஈடுபடலாயினர்.

இவ்வாறான சூழலில் ஹிஸ்புல்லாஹ்வின் முக்கியஸ்தர்கள் இஸ்ரேலின் துல்லிய வான்வழித் தாக்குதல்கள் மூலம் கடந்த சில மாதங்களாக கொல்லப்பட்டு வந்த நிலையில்தான் ஹிஸ்புல்லாவின் தலைமையகத்தின் மீது இந்த துல்லிய விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டு நஸ்ரல்லா, அவரது மகள் ஸைனப், ஈரான் குடியரசு படையின் பிரதி தளபதி அப்பாஸ் நெல்பரேசியான் உள்ளிட்ட 20 முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நஸரல்லாவின் மரணத்தையொட்டி ஈரானின் ஐந்து நாட்களும் லெபனான், ஈராக்கில் மூன்று நாட்களும் என துக்க தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஹிஸ்புல்லாவின் தலைவர் நஸரல்லா கொல்லப்பட்டுள்ளதைத் தொடர்ந்து உருவாகியுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை அவசரமாகக் கூட்டுமாறு ஈரான் வேண்டுகோளும் விடுத்துளளது.

மர்லின் மரிக்கார்...

# தமிழ் அரசியல்வாதிகளும் சலுகைகளை அனுபவித்தவர்கள்

கதிரோட்டம்

கனடா உதயன் ஆசிரிய தலையங்கம்

இலங்கையில் கடந்த பல சகாப்தங்களாக ஆட்சி பீடங்களின் அதிகாரக் கதிரைகளை அலங்கரித்தவர்கள் அந்த அதிகார பலத்தை மாத்திரம் காட்டவில்லை. மாறாக, முறையற்ற விதத்தில் அதிகார பலம். பண பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தம்மை தேர்ந்தெடுத்த மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் அனைத்தையும் துஷ்பிரயோகம் செய்தார்கள்.

ஒரு முதலாளித்துவ ஆட்சி முறையில், ஆட்சியாளர்களின் பலமானது வெறுமனே அதிகாரங்கள் மாத்திரமல்ல. அவர்கள் பண பலத்தை அனுபவிக்கின்றார்கள். அதிகார பலத்தை நுகர்ந்து கொள்கின்றனர். அரச வளங்களை தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினரும் அதற்கும் அப்பால் தங்கள் உறவினர் நண்பர்கள் என அனைத்த தரப்பினருக்கும் பங்கு போட்டுக் கொண்டுள்ளார்கள்.

இவ்விடயத்தை நாம் எமது கதிரோட்டப் பக்கத்தில் கடந்த காலங்களில் தொடச்சியாக அழுத்தமாக எழுதி வந்துள்ளோம். தங்கள் அதிகாரங்களுக்கு ஏற்ப சலுகைகளை அதிகளவு அபகரித்து வைத்துக்கொண்டார்கள். அவற்றை விட மக்களைக் காப்பாற்றுவதற்காகவும் அவர்களுக்கு துணையாக இருப்பதற்காகவும் நாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட படைத்தரப்பு பிரிவுகளை தங்கள் பாதுகாப்பிற்காக அதிகளவு பயன்படுத்தி வந்துள்ளார்கள் இலங்கை அரசியல்வாதிகள். முன்னாள் பிரதமர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் அதற்கு முன்பிருந்த தலைவர்கள் உட்பட அனைவரினதும் மாளிகைகளில் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த பாதுகாப்பு படை வீரர்கள் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்றார்கள். யாரிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற இந்த படைத்தரப்பினர் அமர்த்தப்படுகின்றார்கள் என்பதைக் கூட தங்கள் கேள்விகளாக எழுப்ப மக்களோ அன்றி எதிர்க்கட்சிகளோ முன்வந்ததில்லை. ஏனென்றால் அவர்கள் ஆட்சிக்காலத்தில் கூட அதே சுகபோகங்களை அந்த அரசியல்வாதிகள் அனுபவித்து மகிழ்ந்தவர்களாக இருந்திருப்பார்கள்.

உதாரணமாக இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எமது தமிழ் அரசியல்வாதியான மறைந்த சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்த பின்னரும் கூட முன்னர் அனுபவித்த சலுகைகள் அனைத்தையும் உயிர் துறக்கும் வரை அனுபவித்து வந்துள்ளார். அவ்வாறான சலுகைகளை அவருக்கு வழங்கிய மஹிந்தாவும் பின்னர் வந்த கோட்டாபாவும் தொடர்ந்து மக்கள் ஆதரவு இல்லாமலேயே ஜனாதிபதியான ரணில் என்பவர் கூட அனைத்து சலுகைளையும் சம்பந்தருக்கு வழங்கினர். ஆனால் அந்த தமிழ்த் தலைவரின் பதவியினால் தமிழ் மக்கள் எந்த சுகத்தையும் அனுபவிக்கவில்லை. மாறாக சம்பந்தரிடம் உதவி கேட்டுச் சென்ற முன்னாள் போராளிகள் கூட அவரால் அவமானப்படுத்தப்பட்டார்கள், நிராகரிக்கப்பட்டார்கள்.

அப்படியானால் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த முதலாளித்துவப் போக்கு கொண்டு சிங்களத் தலைவர்கள் எந்தெந்த சுக போகங்களை அனுபவித்திருப்பார்கள் என்று அறிந்து கொள்ள முயன்றிருக்க வேண்டும். இந்த விடயங்களையும் அதன் உள்விவகாரங்களையும் நாம் இவ்வாரத்தின் கதிரோட்டம் பகுதியில் எடுத்துக்கொண்டதற்கு காரணம், தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஜனாதிபதி அநுர குமாரவின் அரசின் ஊடாக பல மாற்றங்கள் நிலவும் என்று இலங்கையிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் உள்ள எமது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். அதை விட ஆச்சரியம் எதுவென்றால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவுக்கு வாக்களிக்காமல் ரணிலுக்கும் சஜித்திற்கும் வாக்களித்த பெரும்பாலானோர் மனங்களிலும் 'மாற்றங்கள்' ஏற்பட்டு வருவது தெளிவான உண்மை.

இவ்வாறான ஒரு ஆட்சிக்கு எமது தமிழ் மக்கள் சிறிது கால அவகாசம் வழங்கிப் பார்க்கலாம். அவசரப்பட்டு எதிரான விமர்சனங்களை 'பறக்க' விடுவதிலும் பார்க்க சற்று அவதானத்துடன் இருந்தால் முன்னைய ஆட்சிகள் போல் அல்லாது சற்று 'மூச்சு' விடக்கூடியதான காலம் வரலாம். அரசு என்னும் 'கஜானாவை' பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் 'பாதிக்கு பாதி' இருக்க வேண்டும்.

# மட்டக்களப்பு இலக்கிய எழுச்சிக்கு முன்னின்று உழைத்த முதல்வர் அன்புமணி

'நான்கு ஆண்டுகள்தான் மட்டக்களப்பில் இருந்தேன். இந்த நான்கு ஆண்டுகளும் எனது இலக்கிய ஆர்வத்துக்குத் தீனிகிடைத்த காலமாகும். அன்புமணி இரா. நாகலிங்கத்தின் தொடர்பு எனது இலக்கியவானை விரிவாக்கியது. எனது இலக்கிய விமர்சன நோக்கைக் கூர்மைப்படுத்தியது.

வட இலங்கையில் இரசிகமணியைப் போல கிழக்கிலங்கைக்கொரு அன்புமணி. தனது மலர் சஞ்சிகை மூலம் ஏனைய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தவர். கிழக்கிலங்கையின் இலக்கிய விசையாக அன்புமணி திகழ்கிறார் என்பதை எவரும் மறுக்க முடியாது' எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி முல்லைமணி வே. சுப்பிரமணியம். (மலர் சஞ்சிகையும் மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கமும் கட்டுரை ஞானம் 68 ஜனவரி 2006)

மட்டக்களப்பில் ஆரையம்பதி கிராமத்தில்











இராசையா தங்கப்பிள்ளை தம்பதியருக்கு தலைமகனாக 6.3.1935 இல் பிறந்த நாகலிங்கம், ஆரையம்பதி ஸ்ரீராமகிருஷ்மிஷன் பாடசாலையிலும் காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றவர். 1952இல் லிகிதராக நியமனம் பெற்று, மட்டக்களப்பு அரசினர் கல்லூரி, கல்வித்திணைக்களம், அம்பாறை கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றினார். 1981இல் இலங்கை நிர்வாகசேவைப் போட்டிச் சோதனையில் சித்தியடைந்து, களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர், மட்டக்களப்பு கச்சேரி தலைமையக உதவி அரசாங்க அதிபர், வடக்கு, கிழக்கு மாகாணசபை உள்துறை உதவிச் செயலாளர் முதலிய பதவிகளை வகித்து ஆளுநர் செயலகத்தின் மூத்த உதவிச் செயலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

## மானுடவியல்



183

தவமறைந்து அல்லனசெய்யுஞ் சமணர்கள், பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திலே அக்கினிபற்றும்படி மந்திரஞ் செபித்தார்கள். உயர்வொப்பில்லாத ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதும் மகான்கள் பார்க்குந் திசையிலும் மற்றை மந்திரங்கள் பலிக்குமோ? பலியா. அடியாருடைய திருமடத்திலே தங்கள் மந்திரசாதனைகள் பலியாமையைக் கண்ட சமணர்கள் மனந்தளர்ந்து, "அரசன் இதனை அறியின் நம்மைச் சிறிதும் நன்கு மதியான். நம்முடைய விருத்தியையும் ஒழித்துவிடுவான்" என்று நினைந்து பயந்து, அக்கினியைக்கொண்டுபோய், திருமடப்புறச்சுற்றிலே கொளுத்தினார்கள். அத்தொழில் வெளிப்படுதலும் பரிசனத்தவர்கள் மறுகிப்பதைப்புடனே சிதைத்து நீக்கி, அது செய்தவர்கள் பாதகர்களாகிய சமணர்களென்பதை உணர்ந்து சென்று, பிள்ளையாரை நமஸ்கரித்து நின்று, சமணர்கள் செய்த தீங்கை விண்ணப்பஞ் செய்தார்கள். உடனே பிள்ளையார் "சிவனடியார்கள் துயில்கின்ற இந்தத் திருமடத்திலே பாவிகள் பழுது செய்யலாமோ" என்று பரிந்தருளி, "அவர்கள் என்பொருட்டுச் செய்த தீங்காயினும், சிவனடியார்களுக்கு இப்படி வருமோ" என்று பின்னும் அச்சுற்று மகாகோபங் கொண்டு, "இத்தீங்கு அரசனால் வந்தது" எனத் திருவுளங் கொண்டு, "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகத்தை "அமணர் கொளுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியற்காகவே"என்று பாடியருளினார். சிவபத்தியிற் சிறந்த பாண்டிமாதேவியாருடைய திருமாங்கலியத்தைப் பாதுகாத்தல் வேண்டினமையாலும் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாருடைய அன்பினாலும், அரசனிடத்தில் அபராதம் உறுதலாலும், அவனுக்கு மீண்டும் சைவமார்க்கத்தை அடையும் விதி உண்மையாலும், அவன் வெப்பு நீங்கும்படி தம்முடைய அருமைத் திருக்கரங்களினாலே தீண்டி விபூதி சாத்தும் பெரும்பேற்றை உடையனாதலாலும் தீப்பிணியைப் "பையவே சென்று" என்று அருளிச் செய்தார். திருப்பதிகம் பாடியவுடனே, அக்கினி வெம்மை போய்ப் பாண்டியனை அடைந்தது.

சூரியன் உதித்தபின், பாண்டிமாதேவியார் இரவிலே சமணர்கள் செய்த தீங்கைக் குலச்சிறைநாயனாரோடு கேள்வியுற்று, "திருஞானசம்பந்தப் பிள்ளையாரை இந்தப் பாதகர்களுடைய நாட்டிலே வரவழைத்த நாங்கள் இறப்பதே திண்ணம்" என்று மனமயங்கி அச்சுற்றுப் பதைபதைத்தார். பின்பு திருமடத்திலே தீதின்மையைத் தெளிந்து, "சமணர்கள் செய்த தீங்கு இறுதியில் எப்படி முடியுமோ" என்று நினைக்கும்பொழுது; "அரசனுக்கு வெப்புநோய் அடுத்தது" என்று கஞ்சுகிகள் வந்து சொல்ல; மாதேவியர் பதைபதைத்துச் சென்றார். குலச்சிறைநாயனாரும் விரைந்து போனார். பாண்டியன் வெப்புநோயினாலே மிகவருந்தி, வைத்தியர்கள் வந்து பல வைத்தியங்களைச் செய்யவும் அந்நோய் சிறிதும் நீங்காமல் மேற்பட; அறிவிழந்து பேச்சின்றிக் கிடந்தான். சமணர்கள் அதனைக் கேள்வியுற்று, வெய்துயிர்த்து ஓடிவந்து, அந்நோயின் மூலம் இதுவென்று அறியாமல், தங்கள் மந்திரங்களைச் சொல்லி மயிற்பீலியினாலே தடவ; பீலிகள் பிரம்பினோடு தீய்ந்து, பொரி சிதறி வீழ்ந்தன. அவ்வெப்பின் அதிசயத்தை நோக்கி, தங்கள் கையிலே தூங்குகின்ற குண்டிகையிலுள்ள ஜலத்தை "அருகனே காவாய் அருகனே காவாய்" என்று சொல்லிப் பாண்டியன் மேலே தெளிக்க; அந்தச் சலம் மிகச் சுவாலிக்கின்ற அக்கினியிலே சொரிந்த நெய்போலாக; பாண்டியன் மிகவருந்திச் சமணர்களை நோக்கி, "நீங்கள் ஒருவரும் இங்கே இராமல் போய்விடுங்கள்" என்று சொல்லி அறிவு சோர்ந்தான். பாண்டிமாதேவியார் பயமெய்திக் குலச்சிறை நாயனாரை நோக்கி, "இராத்திரியிலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்குச் சமணர்கள் செய்த தீங்கு இப்படி முடிந்ததோ" என்று சொல்ல; குலச்சிறைநாயனார் வணங்கி நின்று; "அசுரர்களுடைய முப்புரத்தையும் எரித்த சிவபெருமானுடைய அடியாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு இவர்கள் செய்த தீங்கே அரசனிடத்திலே பலித்தது.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## தமிழ்மொழி மூலம் மந்திரங்கள் ஓதி, சமயச் சடங்குளை செய்யும் இலங்கையின் ஒரே இந்து ஆலயம்

# இணுவில், "ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்"

தமிழை "தெய்வத் தமிழ்" என்று அருளாளர்கள் அழைப்பார்கள். வேறெங்கிலும் தெய்வத்தையும் மொழியையும் இணைத்துப் பேசும் இப்படிப்பட்ட வழக்கம் காணப்படவில்லை. இது எம் முன்னோர்கள் காலம் முதல் எம்மொழி உயிரினும் பெரிதாய் நேசிக்கப் பட்டுவருவதற்கு சான்றுரைக்கிறது.

எந்தவொரு பக்தனும் தனது மனவிருப்புக்கள், ஏக்கங்கள், கவலைகளை கடவுளுக்கு எடுத்துச்சொல்வதாலும், கடவுளுக்கு செய்யப்படும் பூஜை, புனஷ்காரங்களாலும் மன நிம்மதியடைவதாக நம்பிக்கைகள் காணப்படுகின்றன. எனவே ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் சடங்குகள் தமது மொழியிலேயே நடாத்தப்படுகின்றபோது அதில் பங்குபற்றும் பக்தர்கள் அதற்கு பொருள்கொள்வதோடு, முழுமனதோடு அச்சடங்குகளிலும் தம்மை ஒன்றிக்கச் செய்து ஆறுதலடைகின்றனர்.

இதற்கு வாய்ப்பளிப்பதாகவே யாழ்ப்பாணம், இணுவில் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலின் வழிபாட்டு முறைகளும் அமையப்பெறுகின்றன.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட அனைவருக்கும் இறைவனாயிருப்பவர் சிவபெருமான். எனவே தமிழில் சொல்லப்படும் மந்திரங்களும், பாடப்படும் தேவாரங்களும் அவருக்கு புரியுமெனவும், அவர் அதனை தமது காதினால் கேட்டு அடியவர்களுக்கு அருள்புரிவார் என்பதால் தமிழ் வழிபாட்டை மீளவும் கொண்டுவரவேண்டும் எனும் நோக்கத்துடன் சுவிஸ்லாந்து நாட்டில் வாழுகின்ற அன்பர்கள், இளைஞர்கள் அனைவரும் எடுத்த பெரும் முயற்சியின் பேறாக "ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் ஆலயம்" எனும் பெயரோடு முதல் இரு ஆலயங்கள் சுவிஸ் நாட்டில் அமைக்கப்பட்டன. இனையடுத்து அங்கு வாழும் அன்பர்களும், நலன்விரும்பிகளும் இணைந்து இலங்கைத் திருநாட்டிலும் தமிழ் வழிபாட்டு மரபு மீண்டும் தோன்றவேண்டும் எனும் நன்நோக்குடன் மேற்கொண்ட பெரும் முயற்சியினாலும், சைவ நெறிக்கூடத்தின் பங்களிப்போடும் யாழ்ப்பாணம், இணுவில் பிரதேசத்திலும் அதே பெயரில் தமிழ் வழிபாட்டுத் திருத்தலமாக ஆலயமொன்றினை அமைத்தனர்.

இலங்கையில் மற்றைய அனைத்து ஆலயங்களிலும் சமஸ்கிருத மொழியிலேயே பூஜைகளும் வழிபாடுகளும் நடாத்தப்படுகின்றபோது வேறெங்கிலும் இல்லாவண்ணம் இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற வழிபாடுகள், சடங்குகள் அனைத்தும் தாய்மொழியாம் தமிழ்மொழியில் நடாத்தப்படுவதுடன், பக்தர்களுக்கு வேறெங்கிலும் வழங்கப்படாத சலுகைகளும் இவ்ஆலயத்தில் வழங்கப்படுகின்றன.

பிராமண அந்தணர்கள் மாத்திரம் ஆலயத்தின் மூலஸ்தானமாம் கருவறைக்குள் நுழையும் வழக்கத்துக்குப் பதிலாக பக்தர்களும் நுழைந்து அங்கு அமையப்பெற்றிருக்கும் சிவலிங்கத்தினை தமது கரங்களால் தொட்டு செந்தமிழிலே தேவாரங்கள், திருவாசகங்களை ஓதி தங்களது மனதிலிருக்கும் குறைளைச் சொல்லி வழிபாடுகளை மேற்கொள்வதற்கும், திருமணம் உட்பட ஏனைய அனைத்து வாழ்வியல் சடங்குளையும் தமிழ்மொழியில் நடாத்தி பக்தர்கள் பலனடைந்துகொள்ளவும் இவ்வாலயமானது வாய்ப்பளிக்கின்றமை ஆலயத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது.

தமிழர் வழிபாட்டு மரபின் தனிப்பெரும் சிறப்புக்களையும், சுவை ததும்பும் தமிழ்மொழியின் இனிமையையும் வலியுறுத்திக்காட்டி நிற்கும் இந்த ஆலயத்தின் வழிபாட்டுமுறைகள் சமஸ்கிருதமயமாக்கலிலிருந்து தமிழ்மொழி மீண்டும் புத்துயுர் பெறுவதற்கான தொடக்கப் புள்ளியாக காணப்படுகிறது.









**கிரிஜா அருள்பிரகாசம்**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழ்மொழி




## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 104

கஷ்ட காலங்களில் மனிதன் வீணாக கலங்கியும், அமைதியின்றியும் தனது ஆற்றலை வீணடித்து விடுகிறான். அவ்வாறு அவன் வீணடிக்கும் ஆற்றலின் ஒரு பகுதியை நிதானமாக அமைதியுடன் சிந்தித்து செயலாற்றினால் எவ்வளவு பெரிய துன்பத்திலிருந்தும் மிக எளிதாக அவன் வெளிவர முடியும். துன்பம் வந்தும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.

வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.



நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள்வெற்றியடையவேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை, உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது.

வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும்.



காக்காதீவு விஹாரையில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்.
(படம்: கொழும்பு வடக்கு நிருபர்)

# உடப்பூர் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கல்







வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பூர் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கல் திருவிழா வெள்ளிக்கிழமை(27)நடைபெற்றது. பிரதான பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் கரகம் இடம்பெற்ற பின்னர் ,மஞ்சள் நீராடல் நிகழ்வு இடம்பெற்றது. ஆலய முன்றலில் பெரிய மண்பானையில் மஞ்சள் நீர் கொதிக்க வைக்கப்பட்டிருக்கும். அதில் காவல் காரர்கள் தென்னம் பாலையில் உரித்த தென்னம்பூவைக் கொண்டு, சூடாகிக் கொண்டிருக்கும் மஞ்சள் நீரை பூசகருடன் , மூன்று பேருமாக சேர்ந்து அள்ளித் தெளித்துக் கொள்வார்கள்.இது பழங்கால மரபாகும்.

அருகில் பூசகர் உடன் காவலாளிகள் சகிதம் கும்மியடிக்கும் நிகழ்வு மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது. பெண்கள் வரிசைக்கிரமமாக இருந்து பொங்கல் பொங்கி வழிபடுவார்கள். அத்துடன் மதிய பூஜை இடம்பெற்று பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. இதில் சகோதர மொழி பேசும் மக்களும் வேறு இடங்களிலிருந்து வந்து கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.மாலை வேளை அருகிலுள்ள கடற்கரையில் செவ்வாய்க் கொட்டி பிரதான கும்பத்தை சமுத்திரத்தில் சொரிவது வழக்கமாகும். இது நிறைவடந்த பின்னர் வாடைக்காற்று ஆரம்பமானதும் கரைவலைத் தொழிலாளர்கள் தமது வள்ளங்களை கடலில் இறக்கி தொழிலை ஆரம்பிப்பர்.

(உடப்பு குறூப் நிருபர்க.மகாதேவன்)

# உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராவதால் தமிழ்நாட்டுக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படாது

## மத்திய இணை அமைச்சர் எல்.முருகன்

'உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராவதால் தமிழ்நாட்டுக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படபோவதில்லை' என மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கூறினார்.

சென்னையில் உள்ள தூர்தர்ஷன் அலுவலகத்தில் 'தூய்மையே சேவை' என்ற பிரச்சார இயக்கத்தை மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் நேற்று தொடங்கி வைத்தார். பின்னர், நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

மத்திய அரசின் மூலம், செப்.18 முதல் அக்.2ஆம் திகதி வரை சேவை வாரங்களாக கடந்த 10 ஆண்டுகளாக கடைபிடித்து வருகிறோம். பெண் குழந்தைகள் உள்ள பள்ளிகள் மற்றும் வீடுகளில் 100 சதவீதம் கழிப்பறை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் நம் நாடு மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. 2047ல் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக மாற உள்ளது. குறிப்பாக, தமிழகத்தில் சென்னை பெங்களூரு, சென்னை விசாகப்பட்டினம் இடையே தொழில் வழித்தடம் அமைக்கப்படுகிறது. அத்துடன், சென்னை, காமராஜர், தூத்துக்குடி வஉசி துறைமுகம் ஆகியவை சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்படுகிறது. சென்னையை அடுத்த திருமழிசையில் சரக்குக் கிடங்கு பூங்கா கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் பிரதமரைச் சந்தித்து கோரிக்கைகளை முன் வைத்துள்ளார். இந்த சந்திப்பின் அடுத்தக் கட்டமாக பிரதமர் அலுவலகம் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டால் தமிழ்நாட்டுக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. திமுக வந்தபின்தான் மதுவும், போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளது. இவ்வாறு கூறினார். முன்னதாக தூய்மை பாரதம் திட்டத்துக்கான உறுதிமொழியை ஊழியர்கள் உடன் எடுத்துக் கொண்டார்.

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் எஸ்.பி.பியின் நினைவு நிகழ்வு



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நேற்று கொழும்பு செட்டியார் தெரு கல்யாண முருகன் மண்டபத்தில் நடத்திய பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் நினைவு நாள் நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை...

அத்துடன், மீண்டும் பரீட்சை நடத்தப்படுவதனால் ஆசிரியர்கள், பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் பாடசாலை முறைமைக்கு கடும் சிரமங்கள் ஏற்படுமெனவும் குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இக்குழுவின் பரிந்துரைக்கமையவே, இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தரவும், கல்வி அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலக்கா ஜயசுந்தரவும் தெரிவித்தனர்.

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 இல், நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள்களில் உள்ளடங்கிய வினாக்கள், பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டதாக எழுந்த முறைப்பாடுகள் தொடர்பில் பரீட்சை திணைக்களம் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தது.

அந்த விசாரணையின் போது, முதல் பகுதி வினாத்தாளில் உள்ளது போன்ற மூன்று கேள்விகள் அடங்கிய ஆவணம் பரீட்சைக்கு முன் விவாதிக்கப்பட்டு, பரீட்சைக்கு முன்னைய தினம் சமூக வலைதளங்களில் பரவியமை தெரியவந்தது.

இதன்படி, ஆரம்ப விசாரணை அறிக்கையின் அடிப்படையில் பரீட்சை திணைக்களம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்து. இதையடுத்து,குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தமது விசாரணைகளின் இடைக்கால அறிக்கையை கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்தது.

சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட ஆவணம் தேர்வுக்கு முன்னதாக விவாதிக்கப்பட்டதாகவும், அதன்படி பரீட்சையின் முதல் தாளின், மூன்று கேள்விகள் பரீட்சைக்கு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளதாகவும் உறுதி செய்யப்பட்டது.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற ஏனைய முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், வேறு கேள்விகள் எதுவும் வெளியானதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

கல்வி அமைச்சரான பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில், இப்பிரச்சினை மற்றும் இப்பிரச்சினைக்கான சாத்தியமான தீர்வுகள் பற்றிய பகுப்பாய்வு அறிக்கை பரீட்சை திணைக்களத்தால் கல்வி அமைச்சின் செயலாளருடாக பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கல்வி அமைச்சர் என்ற ரிதியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர் குழுவொன்று இந்த அறிக்கையை ஆய்வு செய்து, எடுக்கப்பட வேண்டிய மிகவும் பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டது. அக்குழுவில் கல்வியியலாளர்கள், கல்வி உளவியலாளர்கள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் புள்ளியியல் நிபுணர்கள் இதில் அடங்கியிருந்தனர்.

## காணாமல்போன 4,000 வாகனங்கள்...

சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கிய வகையில் விசேட கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை உண்மையில் பயன்படுத்தியவர்கள் யார் என்பதைக் கண்டறிவதற்காக ,தகவல்களை ஆய்வு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 1794 வாகனங்கள் காணபோய் அல்லது இடந்தவறி வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் கண்டறியப்படவுள்ளது.

அத்தோடு இந்த அமைச்சுக்கு உட்பட்ட 679 கார்கள் மற்றும் 1115 மோட்டார் சைக்கிள்கள் காணவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

மேலும், கல்வி அமைச்சுக்கு சொந்தமான 212 வாகனங்கள், நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான 880 வாகனங்கள்.

தபால் துறைக்குச் சொந்தமான 45 வாகனங்கள். காணாமற்போனவை அல்லது இடம்பெயர்ந்தவை என கணக்காய்வு விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய மாவீரர்களுக்கான 1077 வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

## அ.இ.ம காவிலிருந்து...

கிண்ணியாவில் தனது அலுவலகத்தில் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் கடந்த பத்து வருடங்களாகப் பயணித்துள்ளேன்.

ஒன்பது வருடங்களாக தேசிய அமைப்பாளராக இருந்து 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 34,000 வாக்குகளை பெற்று திருகோணமலை மாவட்டத்தில் முதலிடத்தில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகினேன் . முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எனக்குப் பிரதி அமைச்சர் பதவியையும் பெற்றுத் தந்தார்.

மக்கள் பணிக்காக இதனை அர்ப்பணம் செய்து பணியாற்றினேன். இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில், மூதூரில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ஒருவரை களமிறக்கி சஜித்தும் ஹக்கீமும் எனக்கு எதிராகச் செயற்பட்டனர்.

இதனை ரிஷாத்துக்கு எடுத்துக் கூறியிருந்தேன். இருந்த போதிலும் இரண்டு வருடங்களாக திட்டமிட்டு என்னை வெளியேற்ற வேண்டும் என்பதற்காக, வைத்தியர் ஹில்மிக்கு வேட்பாளரைத் தருவதாக கூறி சதி நடத்திவிட்டுச் சென்றுள்ளார்.

இவ்வளவு காலமாக இப்படியொரு பிரதான சூத்திரதாரி இருப்பார் என்று நினைக்கவில்லை. இவர்களது சுயரூபத்தை. தற்போது அறிந்துகொண்டேன். இருந்த போதிலும் எதிர்வரும் 11ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்து பொதுத் தேர்தலில் களமிறங்குவேன்.

## IMF ஆதரவுடனான திட்டங்களுக்கு...

பகிர்ந்துகொள்ளும், வலுவான நிதி ஒருங்கிணைப்பை உறுதி செய்யும் வருமான நடவடிக்கைகளை சமர்ப்பிப்போமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களை சீர்திருத்தும் நடவடிக்கைகள் தனியாருக்கு நன்மையளிக்கும் வகையில் காணப்பட்டன,ஆனால் புதிய அரசாங்கம் பொதுமக்களின் நலனை அடிப்படையாக வைத்து இவற்றை மறுசீரமைக்கும் என என தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவையின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

எனினும், ஹோட்டல்கள் போன்றவற்றை விற்பனை செய்வதற்கு தயாரென அவர் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையில் தாமதமின்றி கைச்சாத்திட விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உயர் தரத்திலான சின்னத்திரை...

மதிப்பீட்டு செயல்முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னத்திரை சினிமா தயாரிப்புகள், சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தொலைக்காட்சி மற்றும் digital space ஊடாக ஒளிபரப்பப்படும். இது பற்றிய மேலதிக தகவல்களை பத்தரமுல்ல,விக்கிரமசிங்கபுர, சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் கொள்முதல் குழுவின் செயலாளரின் 94 76691 3863 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது முகவரியிலோ ஊடாக தொடர்பு கொண்டும் பெறலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## GCE O/L பரீட்சையில்...

கல்லூரியின் செஷானி செஹங்சா ஜயவர்த்தன, நுகேகொட அனுலா கல்லூரியின் மெதுகி சமோதி பெரேரா மற்றும் காலி சங்கமித்த மகளிர் கல்லூரியின் நதுன் பமுதிதா ரணவக்க ஆகியோர் நான்காம் இடத்தை பெற்றுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏழாவது இடத்துக்கு நான்கு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நுகேகொட அனுலா வித்தியாலயத்தைச் சேர்ந்த நெமதினி வொனாரா அதிகாரி, கம்பஹா ரத்னாவலி மகளிர் கல்லூரியின் தத்சரா கவிந்தி, பாணந்துறை ஸ்ரீ சுமங்கல மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த தமாஷி தனஞ்சனா விக்கிரமகே மற்றும் மாத்தறை ராகுல வித்தியாலயத்தைச் சேர்ந்த சகுண சதீஷான் சமரவிக்கிரம ஆகியோர் ஏழாவது இடத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

## மிருகக் காட்சிசாலையில்...

சிறுவர்களுக்கு, தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம்; மற்றும் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா ஆகியவற்றை இலவசமாக பார்வையிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன .

யற்கை வளங்களை பாதுகாத்தல், மனோபாவங்களை மேம்படுத்துதல், திறன் அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சிகள் தெஹிவளை மிருகக்காட்சிசாலை வளாகத்தில் நடைபெற உள்ளன.

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் வருடாவருடம் சர்வதேச சிறுவர் தின கொண்டாட்டம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசியலமைப்பு சபை...

சட்டவாக்க சபைக்கான பிரதிநிதியாக நியமித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி பதவி இழந்ததன் மூலம், அரசியலமைப்பு சபையில் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பதவி இழந்தார். இதற்கமைவாக, புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, அரசியலமைப்பு சபையில் தனது பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத்தை நியமித்துள்ளார்.

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு...

சிறந்த இருதரப்பு உறவுகளுக்கு ருவாண்டாவின் பாராட்டுகளை, இச் செய்தி வெளிப்படுத்தியுள்ளது.

ருவாண்டா மற்றும் இலங்கை குடிமக்களின் நலனுக்காக உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பரஸ்பர நன்மை பயக்கும் பகுதிகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ருவாண்டாவின் உறுதிப்பாட்டை இச்செய்தி மேலும் உறுதிப்படுத்தியது.

# இன்றைய பலன்கள்

## (30.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
மாணவ மாணவிகளுக்கு பெற்றோர் ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு குடும்ப பொறுப்புகள் கூடும். சுப செய்திகள் வந்து சேரும்.

**ரிஷபம் :**
மாணவ மாணவிகளுக்கு எதிர்பார்த்த இலக்கை அடையும் வாய்ப்பு உண்டு. பெண்களுக்கு உறவினர்களால் நன்மை ஏற்படும். வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல் வரலாம். கலைஞர்களின் திறமை பளிச்சிடும்.

**கடகம்:**
கலைஞர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மாணவ மாணவிகள் படிப்பில் அக்கறை காட்டுவர். பெண்களுக்கு தங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

**சிம்மம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகார அந்தஸ்து கிடைக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவ மாணவிகளுக்கு எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வர். கலைஞர்களுக்கு புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:**
வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் உண்டு. கலைஞர்களுக்கு இடமாற்றம் சிந்தனைகள் உருவாகும்.

**விருச்சிகம்:**
மாணவ மாணவிகளுக்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு வரன்கள் வாசல் தேடி வரும். வருமானம் திருப்தி தரும்.

**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்று கொள்ளலாமா என்று சிந்திப்பார்கள். கலைஞர்களுக்கு நட்பால் நன்மை உண்டு. மாணவ மாணவிகளுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மகரம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். கலைஞர்கள் எடுக்கும் முயற்சி வெற்றி பெறும்.

**கும்பம்:**
கலைஞர்களுக்கு விலகிச் சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். ஆசிரியர்களின் ஒத்துழைப்பால் மாணவ மாணவிகள் கல்வியில் அக்கறை செலுத்துவர்.

**மீனம்:**
மாணவ மாணவிகளுக்கு கவன சிதறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பெண்களுக்கு வரவைக்காட்டிலும் செலவு கூடுகிறது என்ற கவலை மேலோங்கும்.

## பொதுத் தேர்தலை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

தீர்வு கிடைக்கவிலலை. இடைக்கால அரசாங்கத்தில் பாரியளவிலான மாற்றங்களை மேற்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

இருப்பினும் அரசாங்கத்தின் செயற்பாட்டு ஒழுங்கு முறையின் ஊடாக காலம் காலமாக காணப்படும் பிரச்சினைகளுக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வினை பெற்றுக் கொடுப்போம்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய வெளிவிவகார... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இலங்கையின் கடந்த ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர், இந்தியாவுக்கு முதலில் பயணம் செய்யும் முறை பாரம்பரியமாக இருந்து வருகின்றது.

அத்துடன், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கான ஒரு நாள் விஜயத்தின் போது, பல இந்திய திட்டங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 'யுக்திய': மறுசீரமைப்புடன்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஏனைய பணிகளில் அமர்த்தப்பட்ட அதிகாரிகளை வழி நடத்துவதன் மூலம், அவர்கள் எதிர்காலத்தில் அதிக திறனுடன் செயல்படுவார்களென நம்புகிறேன். பொலிஸ் அதிகாரிகளில் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த பற்றாக்குறைக்கு மாற்றுத்தீர்வாக, இதுவரை ஏனைய பணிகளில் அமர்த்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு பொதுப்பணியின், குறிப்பாக குற்றச்செயல்களை தடுக்கும் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாராளுமன்ற தேர்தல்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பாராளுமன்றத் தேர்தலுக்காக சுமார்11 பில்லியன் ரூபா செலவிடப்படுமென, அண்ணளவாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மக்களின் விருப்பத்து... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கல்வியை எமது பெறுமதி வாய்ந்த முதலீடாகக் கருத வேண்டும்.

முற்று முழுதாக அழிவை சந்தித்திருக்கும் விவசாய துறையை மீள் கட்டியெழுப்ப வேண்டும். எனவே கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் குறிப்பிடத்தக்க காலவரையறையை முன்னிலைப்படுத்தி தேசிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

## படு பாதகச் செயல்களை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பாலஸ்தீனத்தில் பரவலாக நடந்து வரும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக உலகளாவிய கவனத்தைக் குவிப்பதிலும் பாராட்டைப் பெற்றுள்ளது.

இன்றுள்ள சூழ்நிலையில்,இஸ்ரேலின் போர்க்குற்றங்கள் மற்றும் அதிகரித்து வரும் அந்நாட்டின் ஆக்கிரமிப்புகளுக்கு முகம்கொடுக்கும் வகையில் ஹமாஸ்,ஹிஸ்புல்லாஹ் போன்ற இயக்கங்கள் தொடர்ந்தும் போராடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எல்லா துயரச் சம்பவங்களுக்கும் அப்பால், பாலஸ்தீனத்தின் மீட்சிக்கான எங்களது ஆதரவு எப்பொழுதும் இருக்கும்.

## தபால் மூல வாக்களிப்பு...

அலுவலருக்குக்கு (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

## பயணித்து கொண்டிருந்த...

தவிர்க்கப்பட்டது. இந்த பஸ்ஸில் இருபது பேர் வரை இருந்துள்ளனர். பஸ்ஸை சாரதி நிறுத்தியிராவிட்டால் பாரிய பள்ளத்தில் விழுந்து, விபத்துக்குள்ளாகியிருக்க கூடுமெனவும் பயணிகள் தெரிவித்தனர்.

# சவூதி நிதியத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சவூதிக்கான இலங்கைத் தூதுவர் வாழ்த்து



இலங்கையின் அபிவிருத்திப் பங்காளியான சவூதி நிதியத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சவூதிக்கான இலங்கைத் தூதுவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"ஐந்து தசாப்த கால பூகோள மாற்றத்தின் வெற்றிப்பாதை" எனும் கருப்பொருளின் கீழ் இலங்கையின் நீண்டகால அபிவிருத்திப் பங்காளியான SFD இன் 50 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போது, சவூதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் ஓ. எல். அமீர் அஜ்வத், SFD இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, சுல்தான் அப்துல் ரஹ்மான் அல்மர்ஷத்துடனான சந்திப்பில், அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தை (SFD) பாராட்டினார். பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி பொறி. ஃபைசல் அல் கஃதானியும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார். இந்த சந்திப்பின் போது தூதுவர் அமீர் அஜ்வத் ஐந்து தசாப்த கால பூகோள மாற்றத்தின் சிறந்த சாதனை மற்றும் இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு, அவர்களின் அலாதியான ஆதரவிற்காக பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அப்துல் ரஹ்மான் அல்மர்ஷத் மற்றும் SFD நிர்வாகத்திற்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார். இலங்கையில் அண்மைக்காலமாக பொருளாதார பின்னடைவு ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கையில் நடைபெற்று வரும் திட்டங்களுக்கு தொடர்ச்சியாக நிதியளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தின் பாராட்டுக்களை SFD க்கு தூதுவர் அமீர் அஜ்வத் தெரிவித்தார்கள். இலங்கையின் மிக நீளமான பாலமான கிண்ணியா பாலம் மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நீரோ ட்ராமா (Neuro Trauma) பிரிவு போன்ற SFD நிதியுதவியுடன் 2000 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையில் அவர் சவூதி இராச்சியத்தில் இருந்த போது SFD உடனான தனது தொடர்புகளையும் தூதுவர் நினைவு கூர்ந்தார்.

எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கைக்கும் SFDக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் அவர் உறுதியளித்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக, பிரதம நிறைவேற்று அதிகாரி, சுல்தான் அல்மர்ஷத், சவூதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத்தை வரவேற்றதுடன், தூதுவரின் உணர்வுகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், இலங்கையின் அபிவிருத்திக்கு SFD இன் தொடர்ச்சியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினார். SFD நிறுவனம் 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, சவூதி அரேபியாவின் முக்கிய சர்வதேச மேம்பாட்டுக்கான பிரிவாகும், மேலும் SFD நிறுவனம், பின்தங்கிய சமூகங்கள் மற்றும் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கிலும், வளர்ந்து வரும் நாடுகளில் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் நோக்கிலும் கடன் உதவிகள் மற்றும் மானியங்களை வழங்குகிறது. அபிவிருத்திக்கான சவூதி நிதியம் பல தசாப்தங்களாக இலங்கைக்கு அபிவிருத்தி உதவியாக 1.5 பில்லியன் சவூதி ரியால்கள் (அமெரிக்க $438 மில்லியன்) பெறுமதியான சலுகைக் கடன் உதவிகளை வழங்கியுள்ளது. கொழும்பு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டம் (1981), கிண்ணியா பாலம், இலங்கையின் மிக நீளமான பாலம், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நீரோ ட்ராமா பிரிவு, களுகங்கை அபிவிருத்தி திட்டம், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கான மருத்துவ பீடம், வயம்ப பல்கலைக்கழக டவுன்ஷிப் உட்பட பதினைந்து (15) வெவ்வேறு அபிவிருத்தி திட்டங்கள். பேராதனை பதுளை செங்கலடி வீதி SFD அவர்களின் உலகளாவிய அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்டது. இலங்கையின் முக்கிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதில் SFD இன் பங்களிப்புகள் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றது. தூதுவருடன் ரியாத்தில் உள்ள இலங்கை தூதரகத்தின் அமைச்சர் / தூதரகப் பிரதானி மொஹமட் அனஸூம் கலந்து கொண்டார்.

# கல்முனை கார்மேல் பற்றிமாவின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

## ஊடக மாநாட்டில் அதிபர் ரெஜினோல்ட் தகவல்







**(காரைதீவு குறூப் நிருபர் சகா)**

கிழக்கில் புகழ்பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாத் தொடர் எதிர்வரும் 13 இல் ஆரம்பமாகிறது.

இவ்வாறு நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.ரெஜினோல்ட் தெரிவித்தார்.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125 ஆவது (jubilee) ஆண்டு நிகழ்வுக்கான ஊடக சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்லூரியில் இடம் பெற்றது.

பாடசாலையின் 125 ஆவது (jubilee) ஆண்டு நிகழ்வுகள் தொடர்பாக விழாக்குழுத் தலைவர் அதிபர் ரெஜினோல்ட், செயலாளர் எஸ். சிறிரங்கன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

எதிர்வரும் 13.10.2024இல் 125 ஆவது வருடம் ஆரம்பமாகி 13.10.2025 வரை ஒரு வருடம் 125 ஆவது jubilee ஆண்டாக பிரகடனப்படுத்தப்படுவதாகவும், ஒரு வருடத்தில் ஒவ்வொரு மாதமும் பல நிகழ்வுகள், செயற்றிட்டங்கள் இடம்பெறவுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த நிகழ்வுகள் பாடசாலை கல்வி செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாத வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர் வரும் 13.10.2024 அன்று 125 ஆவது ஆண்டின் theme, theme பாடல், பாடசாலை வரலாறு மற்றும், நிகழ்வு விபரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

உபதலைவர் எஸ்.கோகுலராஜன் ஊடக மாநாடு தொடர்பாக விளக்கமளித்து இணைப்பாளராக செயற்பட்டார்.

45 விழாக்குழுவினர் தொடர்பாகவும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

# பேருவளை சீனன் கோட்டை குட்டிமலை ஜாலிய்யா தர்கா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்த காதிரிய்யா மனாகிப் மஜ்லிஸ்

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை சீனன் கோட்டை குட்டிமலை ஜாலிய்யா தர்கா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்த காதிரிய்யா மனாகிப் மஜ்லிஸ் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 4 ஆம் திகதி அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பமாகும்.

மேற்படி தர்கா ஸாவியா மஸ்ஜிதின் இமாம்களான மௌலவி எம்.டப்லியு.எம் பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி), மௌலவி முஹம்மத் இக்ராம் (நுலாரி) ஆகியோர் தலைமையில் மஜ்லிஸ் ஆரம்பமாவதுடன் தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் இடம்பெற்று தமாம் பெரிய கந்தூரியுடன் நிறைவு பெறும்.

காதிரியா தரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் முஹியத்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களின் ஞாபகர்த்தமாக இந்த மனாகிப் மஜ்லிஸ் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்வில் கலீபாக்கள், உலமாக்கள், சீனன் கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினர்கள் மேற்படி தர்கா ஸாவியா மஸ்ஜித் நிர்வாகிகள் மற்றும் இஹ்வான்கள் ஏனைய தரீக்காக்களின் முரீதீன்கள் பங்கு பற்றுவர்.





கொழும்பு, புறக்கோட்டை அரிமா சங்கம், முகத்துவாரம் தெற்கு அரிமா சங்கத்துடன் இணைந்து நடத்திய உடல் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வும், இலவச மருத்துவ சேவையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் புறக்கோட்டை அரிமா சங்க தலைவர் ஆர். நாராயணசாமி, முகத்துவாரம் அரிமா சங்க தலைவர் எம். திருத்தணீசன், ஞானம் அறக்கட்டளையகத்தின் தலைவர் ஜி. இராஜேந்திரன் மற்றும் மருத்துவர்களான அருள் இராமலிங்கம், நிர்மலா ஸ்ரீனிவாசன் பெஞ்ஜமின் ஆகியோரும் பங்கேற்றனர்.



இலங்கை விமானப்படையின் சேவா வனிதா (மகளிர் பிரிவு) குவான் ரன்திரு சித்தம் சித்திரம் வரைதல் போட்டி ஒன்றை பாடசாலை மாணவர்களுக்கிடையே ஒழுங்கு செய்திருந்தது. 2024 உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு 300 மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசும் விருதுகளும் வழங்கும் நிகழ்வு விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக விமானப்படைத் தளபதி எயார் மார்சல் உதயனி ராஜபக்ச மற்றும் சேவா வனிதா மகளிர் தலைவி இனோக்கா ராஜபக்ச ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 39 மாணவர்களுக்கு பணப்பரிசிலும் சான்றிதழ்களும் வழங்கி வைத்தனர். (படம் அஷ்ரப் ஏ சமத்)

# கொழும்பில் அஹ்லு ஸுன்னா அமைப்பின் மவ்லூத் மஜ்லிஸ்





**பேருவளை விசேட நிருபர்**

இலங்கை இத்திஹாதி அஹ்லு ஸுன்னா வல் ஜமாஅத் நடாத்திய வருடாந்த மீலாதுன் நபி மவ்லிதுன் நபி மவ்லூத் மஜ்லிஸும் மார்க்கச் சொற்பொழிவும் 28 ஆம் திகதி கொழும்பு – 04, பம்பலப்பிட்டியிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

தலைவர் டாக்டர் அல் ஹாஜ் பஹ்மி இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேல் மாகாண ஆளுநராக நியமனம் பெற்றுள்ள அமைப்பின் போசகர் அல்ஹாஜ் ஹனீப் யூஸுப் இதன்போது கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அமைப்பின் முக்கியஸ்தர்கள் தரீக்காக்களின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.






# கிழக்கின் குரல்



## உரமானியக் கொடுப்பனவுகள் அதிகரிப்பு ஜனாதிபதியின் செயற்பாடுகளில் நம்பிக்கை

### விவசாயத்தை மேம்படுத்த இதுவே தருணம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

ஹெக்டயருக்கான உரமானியம் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டமை குறித்து விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இது குறித்து அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகள்,ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

இதுவரை ஹெக்டயருக்கு 15 ஆயிரம் ரூபாவே உரமானியமாக வழங்கப்பட்டுவந்தது.இந்நிலையில் உரமானியக் கொடுப்பனவு, ஒக்டோபர் 01ம் திகதி அமுலுக்குவரும் வகையில் 25 ஆயிரம்

ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது போன்று, உரமானியக் கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார

திஸாநாயக்க அவசர நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். இதற்கு அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

விவசாய மூலப்பொருட்களை உரியவாறு முகாமைத்துவம் செய்யும் நோக்கில்,

நியாயமான விலையில் உரம் உள்ளிட்ட மூலப்பொருட்களை வழங்குவதற்கும் சிறந்த

விவசாய நடைமுறைகளுக்கு ஏற்ப இரசாயன மற்றும் சேதன உரம் உள்ளிட்ட மூலப்பொருட்களுக்கு மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என

புதிய அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் உரமானியக் கொடுப்பனவு ஹெக்டயருக்கு ரூபா 15 ஆயிரம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டது.இருந்த போதிலும் அது



உரிய நேரத்திற்கு விவசாயிகளை சென்றடையவில்லை. இதனால், விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டனர். ஆகையால், அதிகரிக்கப்பட்ட உரமானியக் கொடுப்பனவை பெரும்போக விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேறகொண்டு விவசாயிகளுக்கு உதவ வேண்டும் எனவும் விசாயிகள் கோரிக்கை

விடுக்கின்றனர்.

## கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் 21 மாணவர்களுக்கு (9A)

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் (2023) கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் 21 பேர், ஒன்பது பாடங்களிலும் (9A) சித்திகளைப் பெற்றுள்ளனர். இவர்களுள் ஏழு இரு மொழிப்பிரிவு மாணவர்கள் உள்ளடங்குகின்றனர். சித்தியடைந்த மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் கல்லூரி அதிபர் எம். ஐ. ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

## உதவிக் கல்விப்பணிப்பாளர் சகாதேவராஜாவுக்கு கௌரவம்



( காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜாவுக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு அண்மையில்,வலயக்கல்விப் பணிமனையில் இடம் பெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் நிருவாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்வை.யாசீர் அரபாத் முன்னிலையில், இந்நிகழ்வு இடம்பெற்றது. சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் இதில்,சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், ஓய்வு பெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன் புரி ஒன்றிய உபதலைவரும் ஓய்வு பெறும் உதவிக் பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி. சகாதேவராஜாவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

## ஏத்தாளைக் குளம் பகுதியில் பாரிய தீ

(மட்டக்களப்பு குறூப் நிருபர் )

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏத்தாளைக்குளம் காட்டுப்பகுதியில் ஏற்பட்ட தீவிபத்து, கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏத்தாளைக்குளம் காட்டுப்பகுதியில் இத்தீ, ஏற்பட்டது. ஏத்தாளைக்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதியானது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயமாகவும் பறவைகள் சரணாலயமாகவும் காணப்படுகிறது.

இந்நிலையில் நேற்று அப்பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த களுவாஞ்சிகுடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஆகியோர்,தீயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால், பாரிய சேதகங்கள் தவிர்க்கப்பட்டன. இதையடுத்து,தீ விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## வளத்தாப்பிட்டி சிகிச்சை நிலையம் புனரமைக்கப்பட்டு மீளவும் கையளிப்பு

(பாலமுனை விசேட நிருபர்)

வளத்தாப்பிட்டி சிகிச்சை நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு,மக்களின் பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டது. நன்கொடையாளர்களின் நிதியுதவியுடன் இலங்கை இராணுவத்தினர் இந்நிலையத்தை புனரமைத்தனர்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார். இங்கு கருத்துரைத்த அவர்:மக்களின் சுகாதாரத் தேவைகளுக்காக அரசாங்கம் அதிகமான நிதிகளை செலவிட்டு வருகிறது. இலவச சுகாதார சேவையை பெற்றுக் கொள்ளும் நாம், இங்குள்ள சுகாதார நிறுவனங்களில் சேவையினை பெற்றுக்கொள்வதுடன் மாத்திரம் நின்றுவிடாது அதனை பாதுகாக்கவும் வேண்டும். பயன்படுத்த முடியாத நிலையில்



காணப்பட்ட இந்தக் சிகிச்சை நிலையம் நன்கொடையாளர்களின் நிதியில் இராணுவத்தினரால் சிறந்த முறையில் மீள்புனரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முன்மாதிரியான பணியினை செய்வதற்கு முன்னின்று உழைத்த சுகாதார வைத்திய அதிகாரிகள், இராணுவத்தினர், சமூக சேவையாளர்கள் அதனுடன் சம்மந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும் என்றார்.

## அம்பாறையில் பொதுச் சின்னத்தில் போட்டியிட தமிழரசுக்கட்சி தீர்மானம்

(காரைதீவு குறூப் நிருபர்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் பொதுச் சின்னத்தில் போட்டியிட இலங்கை தமிரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. காரைதீவு முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.தமிழரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்கு இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கட்சிக் கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர், வட்டாரப் பிரதிநிதிகள், வட்டார அங்கத்தவர்கள் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

இம்முறை தேர்தலிலே அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காக, பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்ற கருத்துக்கள் பலமடைந்து வருகின்றன.இது குறித்து பொதுமக்களுடனும், சமூக வலைதளங்களூடாக புத்திஜீவிகளுடனும் கலந்துரையாடப்படுவது குறித்தும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏனைய தமிழ் கட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் பிரதிநிதித்துவத்தை எடுப்பதற்காக போட்டியிடுமாக இருந்தால், இலங்கை தமிழரசுக்கட்சி சார்பாக தாங்களும் போட்டியிட நேரிடும் என்பதை, பகிரங்கமாக அறிவித்துக் கொள்வதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## யானை வெடில்களை வழங்குமாறு கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு, யானை வெடிகள் வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.பிரதேச செயலாளர்களிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள எல்லைக் கிராமங்களிலும் பொது மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் காட்டுயானைகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இதனால், அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இரவு வேளைகளில் பீதியுடன் வாழ்கின்றனர்.

அக்கரைப்பற்று, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நகரங்களுக்குசட செல்லும் பிரதான வீதிகளில் இரவு வேளைகளில் கூட்டமாகவும், தனியாகவும் யானைகள் நடமாடுகின்றன. இதனால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியால், மாலை நேரங்களில்,வீட்டைவிட்டு வெளியேறி,பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர். பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர்,இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைக் கூட்டம் வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வெடிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இலட்சக்கணக்கில் நெத்தலி மீன்கள்: கல்லடிக் கடலில் மீனர்வர் மகிழ்ச்சி

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட கல்லடிக் கடலில், மீனவர்களின் வலைகளில் இலட்சக்கணக்கான மீன்கள் பிடிபட்டுள்ளன. இவற்றைப் பார்வையிடுவதற்கு பிரதேச மக்கள் படையெடுத்தனர்.

கரைவலைகளூடாகவே இவ்வாறு இலட்சக்கணக்கான மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.நெத்தலி மீன்களே அதிகம் பிடிக்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்

மாவட்டத்தில் நிலவிவரும் கடும் வரட்சியால், நீர் நிலைகள் வற்றி வரும் நிலையில், அதிக அளவிலான மீன்கள் பிடிக்கப்பட்டிருப்பது குறித்து மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர் பல கரைவலை



கள் மூலம் என்றும் இல்லாதவாறு இலட்சக்கணக்கான நெத்திலி மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

குறித்த மீன்களை மீனவர்கள் மிகவும் குறைவான விலையில் விற்பனை செய்ததுடன், கருவாடாக மாற்றியும் வருகின்றனர்.

## கல்முனை வலயத்தில் பற்றிமா சாதனை

(காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கில் பூகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில்,முப்பது மாணவர்கள் 9A சித்தி பெற்றுள்ளார்கள்.கல்முனை வலயத்தில் இப்பாடசாலை யிலேயே, கூடுதலான மாணவர்கள் ஒன்பது "ஏ" சித்தி பெற்று சாதனையடைந்துள்ளனர். கடந்த வருடம் 18 மாணவர்கள் இப் பாடசாலையில் 9 "ஏ" பெற்றமை குறிப்பிடத்தக்கது.கல்லூரி அதிபர் அருட்சகோ. எஸ்.இ.றெஜினோல்ட் கூறுகையில்.எமது பாடசாலையில் இம்முறை 30 மாணவர்கள் ஒன்பது ஏ சித்தி பெற்றுள்ளனர். கல்முனை வலயத்தில் அதிகமான மாணவர்கள் 9 A பெற்றுள்ளமை எமது பாடசாலையிலாகும்.இதற்காக ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகள்.

## வாழ்க்கைத்திறன் பயிற்சி பாசறை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவர்களுக்கு வாழ்கைத் திறன் பயிற்சி பட்டறைச் செயலமர்வு நடத்தப்பட்டது. இச்செயலமர்வு, மட்டக்களப்பு விவேகானந்த தொழில் நுட்பவியல் கல்லூரியில் (28) நடைபெற்றது. நேர்மறை எண்ணங்கள் மற்றும் ஊக்கப்படுத்தல் ஆகிய தலைப்பின் கீழ்,இச்செயலமர்வு நடத்தப்பட்டது. விவேகானந்தா கல்லூரியின் பணிப்பாளர் க.பிரதீஸ்வரனின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இந் நிகழ்வில், அதிபர் மற்றும் விவேகானந்த சமூதாய அறக்கட்டளையின் முகாமையாளர், கல்லூரி சேவையாளர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாரை மாவட்ட செயற் குழு கூட்டம்

### தனித்துப்போட்டியிடுமாறு பலர் கோரிக்கை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

பாராளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் (28) மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்பத்தில் இடம்பெற்றது.

அம்பாரை மாவட்டத்தில் தனித்துப்போட்டியிடவுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், வேட்பாளர்களைத் தெரிவு செய்வது மற்றும் தேர்தல் செயற்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. கட்சியின் தேசிய தலைவர் றிஷாத் பதியுதீன் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் தவிசாளர் அமீர் அலி, கட்சியின் தேசிய கொள்கைபரப்பு செயலாளரும் அம்பறை மாவட்ட செயற்குழு தலைவருமான கே.எம்.ஏ. ஜவாத், உயர் பீட உறுப்பினர்கள், அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர், கலந்து கொண்டிருந்தனர்.

## சாரணர் சிரமதான நிகழ்வுகள்



(பாலமுனை தினகரன் நிருபர்)

சாரணர் வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் சிரமதான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.இந்நிகழ்வுகள் அண்மையில்,அம்பாரை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்றிருந்தன. அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் மாவட்ட ஆணையாளர் எம்.ஐ உதுமாலெவ்வையின் வழிகாட்டலின் கீழ், சாரண ஆசிரியர் றிப்கி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான நிகழ்வில் உதவி மாவட்ட ஆணையாளர்கள்,அதிபர், உதவிய திபர்கள், ஆசிரியர்கள், சாரணர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை கடற்படையினர் மீது குற்றஞ்சாட்டுவதை நிறுத்தவேண்டும்

## தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை

(யாழ் . விசேட நிருபர்)

இலங்கை கடற்படையையும், அரசாங்கத்தையும் குற்றஞ்சாட்டுவதை தமிழக முதலமைச்சர் கைவிட வேண்டுமென அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை(27) ஊடகங்களை சந்தித்த போதே இதனை தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முதலமைச்சருக்கு நான் ஒரு கோரிக்கையை முன் வைக்கின்றேன். 2016 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் எடுக்கப்பட்ட உடன்படிக்கையை படித்துப் பாருங்கள். அதன் பின்னர் நீங்கள் இழுவை மடி தொழிலை செய்வதா? நிறுத்துவதா? என்ற நிலைக்கு வர முடியும்.



எமது நாட்டிலுள்ள கடற்படையையும், அரசாங்கத்தையும் குறை சொல்வதை விட்டுவிட்டு வெளிநாட்டமைச்சின் இணைய தளத்தில் இருக்கின்ற அந்த சட்டத்தை படித்துவிட்டு அதற்கு தகுந்தாற் போல் செயல்படவேண்டுமே தவிர, தமிழ்நாட்டு மீனவர்களை காலத்துக்கு காலம் ஏமாற்றுவதை போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிகவும் ஒரு கவலைக்குரிய விடயம்.

இதனையறியாத தமிழ்நாட்டின் மீனவர்களும் உங்களை நம்பி ஏமாந்து கொண்டிருக்கின்றார்களென அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

### சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் :

## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் வரலாற்று சாதனை

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று நள்ளிரவு வெ ளியாகியுள்ளநிலையில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 28 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் ஆ.லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வரலாற்றில் முதல் தடவையாக இந்த சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளதாக அதிபர் சுட்டிக்காட்டினார்.அதன்படி, தற்போது வெளிவந்துள்ள சாதாரண சாதாரண தர பரீட்சை பெறுபேற்றில் 28 மாணவர்கள் விசேட சித்திகளையும் 18 மாணவர்கள் எட்டுப்பாடங்களில் விசேட சித்தியையும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.அத்துடன், இம்முறை அதிகளவான மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கடலுக்குச் சென்றவர் மாரடைப்பால் மரணம்

(யாழ் . விசேட நிருபர்)

கடலுக்கடியில் வலைகளை கட்டுவதற்காக கடலுக்கு சென்ற கடற்தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.யாழ்ப்பாணம் காக்கை தீவு பகுதியை சேர்ந்த 39 வயதுடைய கனகராசா சுரேஷ்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காக்கை தீவு பகுதியிலிருந்து தனது சக தொழிலாளிகள் ஐவருடன் கடலுக்கு படகில் பயணித்த அவர், படகில் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு மயக்கமடைந்துள்ளார். உடனடியாக சக தொழிலாளிகள் படகை கரைக்கு திருப்பி, அவரை வைத்தியசாலைக்கு அழைத்து சென்றபோதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். உடற்கூற்று பரிசோதனையில் இந்த நபர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## யாழ். ஆதரவாளர்களுடன் ஜ.ம.வி.முன்னனி சந்திப்பு



(கரவெட்டி தினகரன் நிருபர்)

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட் ) யாழ். மாவட்ட ஆதரவாளர்களுடனான சந்திப்பு கடந்த சனிக்கிழமை(27) நடைபெற்று. இந்த சந்திப்பு, கந்தரோடையில் அமைந்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்தனின் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கஜதீபன், முன்னாள் சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர் கிஷோர், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ் . பல்கலையில் இருவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு

(யாழ் . விசேட நிருபர்)





முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் வணிகவியல் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் ஒருவரையும், விஞ்ஞான பீடத்தின் பௌதீகவியல் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் சனிக்கிழமை(27) துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இதன்போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் வணிகவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச்செல்வன் ஆகியோரின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அதனடிப்படையில், வணிகவியல் துறைத் தலைவரும், மூத்த விரிவுரையாளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் வணிகவியலில் பேராசிரியராகவும், பௌதிகவியல் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச்செல்வன் இலத்திரனியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## பாராளுமன்ற தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட பு.த.வி.பு. கட்சி தீர்மானம்

(தலைமன்னார் விசேட நிருபர்)




பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கிலுள்ள முன்னாள் போராளிகள், சிவில் அமைப்புக்கள், ஆதரவாளர்கள் மற்றும் புலம்பெயர் மக்களின் ஆதரவுடன் சுயேச்சையாக போட்டியிடவுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கே.இன்பராசா தெரிவித்துள்ளார்.மன்னாரில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அதிகூடிய சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு எமது கட்சியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினர் சுயேச்சையாக போட்டியிட உள்ளோம். தமிழ் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களுக்காக நாங்கள் எங்கள் உயிரையே அர்ப்பணித்தோம். அங்கவீனமாக்கப்பட்டுள்ளோம், அநாதரவாகத் தெருவில் நிற்கின்றோம். எனவே முன்னாள் விடுதலைப் புலிகள் ஆகிய நாங்கள் மக்களுக்காகவே இத்தேர்தலில் களமிறங்கவுள்ளோம். தற்போதைய ஜனாதிபதி, ஊழலை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதனால் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இதேபோன்று வடக்கு, கிழக்கிலும் ஊழல் நிறைந்த அரசியல் வாதிகளைப் புறந்தள்ளி ஒரு புதிய ஊழலற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நெடுந்தீவு பகுதியில் கைதான தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல்





யாழ். நெடுந்தீவை அண்மித்த கடற்பகுதியில் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கைதுசெய்யப்பட்ட 17 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது, யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறிக் மீன்பிடித்துக்கொண்டிருந்த மேற்படி 17 தமிழக மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம்(28) இரவு கைது செய்தனர்.

இதன்போது 02 படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். இந்நிலையில், கைதான மீனவர்கள் தலைமன்னாருக்கு அழைத்து வரப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். இதன்போது, யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் வருகை தந்து மீனவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், 17 இந்திய மீனவர்களும் நேற்று (29)மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது, விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு

## 8 கோரிக்கைகள் முன்வைத்து ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம்

(யாழ் . விசேட நிருபர்)

ஜனாதிபதியிடம் 08 கோரிக்கைகளை முன்வைத்து, குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் கடிதமொன்றை எழுதியுள்ளனர்.

அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

மக்களதிகாரத்தின் ஊடாக ஆணை பெற்று அரச தலைவராக பதவியேற்றிருக்கின்ற தங்களுக்கு, சமூக பொருளாதார ரீதியில் சிதைவடைந்துள்ள இந்நாட்டை துரிதமாக சீரமைக்கும் தலையாய கடமைப் பொறுப்பு இருப்பதை தாங்கள் நன்கறிவீர்கள்.

அந்த வகையில், பல்லின கலாச்சார பண்பாடுகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற இந்நாட்டில், ஆண்டாண்டு காலங்களாக அதிகாரக் கதிரையேறும் எந்த ஒரு அரச தலைவரும், தமிழ் மக்கள் தமது நியாயமான வாழ்வுரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு வழிவகுத்ததில்லை. இதனால்தான் ஒட்டுமொத்த நாடும் அழிவுப் பாதைக்குள் அமிழ்ந்துபோனது. எனினும், தமிழ் மக்கள் மீள் நிரப்ப முடியாத பல்வேறு பேரழிவுகளுக்கு ஆளானவர்களாக இன்றுவரை அடையாளப்பட்டு நிற்கிறார்கள்.



அதன்படி, சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழக்கூடிய சூழலை உறுதிப்படுத்தல், பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக அகற்றப்படல், தமிழ் அரசியல் கைதிகள், ஏதேனுமொரு பொறிமுறையூடாக காலதாமதமின்றி விடுதலை செய்யப்படல், முன்னாள் போராளிகள் உட்பட சிறைகளிலிருந்து விடுதலையான தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வாதாரம் அவர்களின் உடல் உள மேம்பாடுகள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுத்தல், தெருப்போராட்டம் நடத்தும் தாய்மார்களின் கண்ணீருக்கு நிரந்தர தீர்வை பெற்று தரல், தமிழர் பிரதேசங்களின் பெயர்களை சிங்களப் பெயர்களில் மாற்றுகின்ற சூட்சும செயற்பாடுகள் கைவிடல் போன்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

இதுபோன்ற நிஜ மாற்றங்களால் மாத்திரமே இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்பதையும், அதுவே இந்நாட்டை முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும் என்பதை ஒரு சிவில் சமூக அமைப்பாக நினைவுபடுத்த கடமைப்பட்டுள்ளதாக அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுமந்திரன் அணியுடன் ஒருபோதும் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது

### சிறீகாந்தா தெரிவிப்பு

(யாழ் . விசேட நிருபர்)



சுமந்திரன் தலைமையிலான அணியுடன் ஒருபோதும், ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது என தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (29) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் வெளியேறியவர்கள் மீண்டும் இணையவேண்டுமென புன்முறுவலோடு சுமந்திரன் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அவருக்கு நாமும் புன்முறுவலோடு பதிலளிக்க கடமைப்பட்டுள்ளோம்.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை தக்கவைக்க வேண்டும் என்ற அடிப்படையில், தமிழரசுக் கட்சியோடு இணைந்து கூட்டாக செயற்பட ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தயாராகவுள்ளது.

ஆனால், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் கொள்கை ரீதியாகவும், கடந்த கால அனுபவ ரீதியாகவும் பல மனஸ்தாபங்கள் உள்ளன.

எதற்காக இணையுமாறு அழைப்பு விடுக்க படுகிறது ? தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்துடன் சமரசம் செய்துவைப்பதற்காவா? அல்லது இருக்கின்ற பதவிக் கதிரைகளை பறிபோகவிடாமல் தக்கவைப்பதற்காகவா? அல்லது கடந்தகாலம் போல் ஆட்சியாளர்களுடன் மறைமுக சமரசம் செய்வதற்காக? என அவர் கேள்வியெழுபினார்.

மேலும், இலங்கை தமிழரசுக் கட்சியோடு இணைந்து வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடி ஆராயவுள்ளதாகவும், அதில் தமிழ்த் தேசிய கட்சியின் முடிவை உறுதியாக தெரிவிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அஸ்வின், விராஜின் நினைவேந்தல் நிகழ்வு





மறைந்த ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சன் மற்றும் தேசிய பற்றாளர் விராஜ் மென்டிஸ் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (29) நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமாரின் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, அஸ்வினின் திருவுருவப்படத்துக்கு அஸ்வினின் பெற்றோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து தேசிய பற்றாளர் விராஜ் மென்டீஸின் திருவுருவப் படத்துக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி ரகுராமும் ஊடக கற்கைகள் துறை தலைவர் பூங்குழலியும் மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து அஸ்வின் மற்றும் தேசிய பற்றாளர் விராஜ் மென்டிஸ் ஆகியோரின் நினைவுரைகள் இடம்பெற்றன.

இதனைடுத்து, அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸிலிருந்து வந்தவர் உயிரிழப்பு

(யாழ் . விசேட நிருபர்)



பிரான்ஸ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த நபர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இருபாலை பகுதியை சேர்ந்த 58 வயதுடைய விஜயரட்ணம் யோகேஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த நபர் பிரான்ஸ் நாட்டில் நீண்டகாலமாக வசித்து வந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இந்நிலையில், நேற்று(29) தனது வீட்டில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாகவும், மரண விசாரணையில் அவர் மனவிரக்தியில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பசுமாட்டை வெட்டிய மூவருக்கு விளக்கமறியல்

(யாழ் . விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் கன்றுத்தாச்சி பசுமாட்டினை கொலை செய்து இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள புதர் ஒன்றினுள், கடந்த 27 ஆம் திகதி 05 மாத கன்றுத்தாச்சி மாட்டினை வெட்டி இறைச்சியாக்கியதன் பின்னர், இறைச்சி கழிவுகளை வீசுவதற்கு அப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரையும் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின்னர், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, அவர்களை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சரிந்துள்ள கல்வித்துறையை மீள கட்டியெழுப்ப வேண்டும்

## கண்டியில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய







சரிந்துள்ள கல்வித்துறை பற்றிய நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப் பட வேண்டுமென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று முன்தினம் (28) கண்டிக்கு விஜயம் செய்தார்.

இதன்போது, ஸ்ரீ தலதா மாளிகையை தரிசித்ததுடன் மல்வத்தை மகாநாயக்க தேரர் வண திப்படுவாவே சுமங்கள மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கத் தேரர் வண. வரகாகொடை ஞானரத்ன ஆகியோரை சந்தித்து நல்லாசிகளையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, கண்டி, கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்துக்கும் கண்டி, கட்டுக்கலை ஜும்மா பள்ளிவாசலுக்கும் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார். இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய,

நாட்டில் தற்போது கல்வித்துறை தொடர்பாக நம்பிக்கை குறைந்து விட்டது. எமது அரசியல் நோக்கங்களில் கல்வி அபிவிருத்தி மிக முக்கியமானதொன்றாகும். எனவே சரிந்துள்ள கல்வித்துறை பற்றிய நம்பிக்கையை மீள உருவாக்க வேண்டும்.

இதனால் மாணவர், பெற்றோர், ஆசிரியர்கள் முதலான பல தரப்பினரும் மகிழ்ச்சியடையும் ஒரு நிலையை உருவாக்க முடியும்.

அரசினால் வழங்கப்படும் நிர்வாகத்துறை நியமனங்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் பொறுப்பை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்கிறது.ஏனெனில், இதற்கு முன்னுள்ள அதிகாரிகளைக் கொண்டே நாம் எமது ஆட்சி நிர்வாகத்தை மேற்கொள்கிறோம். புதிதாக வெளியிலிருந்து அதிகாரிகளைக் கொண்டுவர முடியாது. உள்ளவர்களைக் கொண்டே அதனை ஈடுசெய்ய வேண்டும்.

ஆனால், அவர்கள் தற்செயலாக ஊழல் மோசடிகளில் ஈடுபட்டால் அதற்கு பதிலளிக்கவேண்டிய கடப்பாடும் எமக்குண்டு. அப்பொறுப்பை ஏற்று நாம் கடும் நடவடிக்கை எடுப்போம்.

ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் ஆணையை மேலும் பலமுள்ளதாக்க பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று வெற்றியீட்ட வேண்டும். அதற்கான ஆணையையும் மக்கள் எமக்கு வழங்குவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மிகச்சிறிய அமைச்சரவையை வைத்துக்கொண்டு எம்மாலான அனைத்து தியாகங்களையும் செய்த நிலையில், நாட்டுக்கு சேவை செய்ய நாம் தயாராகவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.



சப்ரகமுவ மாகாணத்துக்கான புதிய ஆளுநராக பொறுப்பேற்றுக்கொண்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன, ஸ்ரீ பாத ஸ்தானாதிபதி அதி வணக்கத்திற்குரிய பெங்கமுவ தம்மதின்ன தேரர் உள்ளிட்ட சமயத் தலைவர்களை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட போது... (காவத்தை தினகரன் விசேட நிருபர்)

# வீட்டுக்குள் நுழைந்த நபர் ஆயுதத்தால் தாக்கி கொலை

## மனைவியுடன் தகாத உறவு என தகவல்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

தனது மனைவியுடன் தகாத உறவு வைத்திருந்த நபரொருவரை தனது வீட்டுக்குள் வைத்தே கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த கணவன், வீட்டுக்குள் திருடன் நுழைந்து விட்டதாக பொலிஸாருக்க தகவல் வழங்கிய சம்பவமொன்று நேற்று முன்தினம் (28) வாரியபொல பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

119 அவசர தொலைபேசி இலக்கத்துக்கு திருடன் ஒருவன் பிடிபட்டுள்ளதாக தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலம் ஒன்றை மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய நபரே இந்த கொலையை செய்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வாரியபொல, வல்பாலுவ, பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் திருடன் ஒருவனைப் பிடித்து வைத்திருப்பதாக 119 என்ற அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

உடன் விரைந்த பொலிஸார், வீட்டிலிருந்து ஆணொருவரின் சடலமொன்றை மீட்டுள்ளனர்.

சுந்தரகம, அவிலேகம என்ற இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர், வீட்டின் உரிமையாளரின் மனைவியுடன் தகாத உறவை பேணி வந்ததாகவும், அதனை கண்டிபிடுக்கும் முகமாக தனது வீட்டுக்குள்ளேயே மறைந்திருத்த கணவன், அந்த நபர் வீட்டுக்குள் நுழையும் போது, சுத்தியல் ஒன்றினால் தலையில் தாக்கி கொலைசெய்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில், 36 வயதுடைய வீட்டின் உரிமையாளரான சந்தேகநபரை கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# மத்திய மாகாணத்துக்கு மேலதிக மாவட்ட செயலாளர் நியமனம்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

மத்திய மாகாண மற்றும் நுவரெலியா மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளராக சானிகா லிந்தகும்புர கடந்த 27 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார். காணி விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை மாவட்ட செயலாளர் நந்தன கலபொட வழங்கிவைத்தார்.

சானிகா லிந்தகும்புர 2012 ஆம் ஆண்டு இலங்கை பரிபாலன சேவைக்கு உள்வாங்கப்பட்டவர் ஆவார். மத்திய மாகாண உதவி காணி ஆணையாளர், நுவரெலிய உதவி செயலாளர், வலப்பனை பிரதேச செயலாளர், நுவரெலியா மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் போன்ற பல நிர்வாகப் பதவிகளையும் சானிகா லிந்தகும்புர இதற்கு முன்னர் வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுகஸ்தோட்டையில் களவாடப்பட்ட வாகனம் மாவனல்லையில் கண்டுபிடிப்பு

## சந்தேகநபர் ஒருவரும் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)



கட்டுகஸ்தோட்டை பிரதேசத்திலிருந்து களவாடப்பட்ட காரொன்று மாவனல்லை பிரதேசத்தில் நேற்று (28)மீட்கப்பட்டுள்ளதுடன் சந்கேகநபரொருவரையும் மாவனல்லை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தில், கட்டுகஸ்தோட்டை, வத்தேகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த இளைஞன் போதைக்கு அடிமையானவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மாவனல்லை பிரதேசத்தில், வங்கியொன்றின் முன் நிறுத்தப்பட்டிருந்த இந்த கார் தொடர்பாக மாவனல்லை பொலிஸார் சாரதியிடம் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதன்போது, சாரதி வழங்கிய தகவல்களில் சந்தேகம் ஏற்பட்டமையினால், வாகனத்துடன் சாரதியையும் கைதுசெய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டபோது, இந்த கார் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்திலிருந்து களவாடப்பட்ட வாகனம் என தெரிய வந்துள்ளது. இதனையடுத்து, மீட்கப்பட்ட காருடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுகஸ்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு தருமாறு மக்கள் கோரிக்கை



வலப்பனை பிரதேச சபைக்குச் சொந்தமான இராகலை பிரதேசத்தில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வரும் நிலையில், அவர்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு பாரிய பிரச்சினையாகவுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். இதனால் தமது அன்றாட தேவைகளைக்கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாத அவல நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அம் மக்கள் கவலை வெளியிட்டனர். கடந்த ஒருமாத காலமாக இராகலை பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

இதனால், தோட்டப்பகுதிகள் பலவற்றுடன் நகர்புற மக்களும் கிராமபுற மக்களும் முறையாக குடிநீர் கிடைக்காது அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

முன்னதாக தினமும் இருவேளை வழங்கப்பட்ட குடிநீர், கடந்த ஒரு மாதமாக நான்கு நாட்களுக்கு ஒருமுறை மாத்திரமே விநியோகம் செய்யப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் வலப்பனை பிரதேச செயலாளர்கள் காலந்தாழ்த்தாது உடன் நடவடிக்கையெடுத்து குடிநீர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலாங்கொடையில்

# கடும் மழை; மரக்கறி உற்பத்திகள் பாதிப்பு

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடையில் நிலவும் சீரற்ற காலநிலைக் காரணமாக மரக்கறி உற்பத்திகள் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக உற்பத்தி செய்யப்பட்ட போஞ்சி, வெண்டிக்காய், பாகற்காய், தக்காளி மற்றும் கத்தரிக்காய் போன்ற பல மரக்கறி வகைகள் இவ்வாறு பாதிப்படைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த மரக்கறிகளை உற்பத்தி செய்வதற்காக, உரம், விதைகள் மற்றும் கிருமி நாசினிகளுக்கு அதிகளவு பணம் செலவளித்துள்ளதாகவும் மழையினால் தற்போது அவையனைத்தும் அழிவடைந்துள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே, எதிர்வரும் மாதங்களில் இப்பகுதியில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு நிலவக்கூடும் என்பதால் மரக்கறிகளின் விலை அதிகரிக்கலாம் என விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேன் – முச்சக்கரவண்டி விபத்து ; ஒருவர் உயிரிழப்பு, நால்வர் படுகாயம்

## பண்டாரவளையில் சம்பவம்





**(ஊவா சுழற்சி நிருபர்)**

பண்டாரவளையில் இருந்து மொனராகலை தபால் நிலையத்துக்கு தபால் பைகளை ஏற்றிச் சென்ற வேனொன்று, இரு முச்சக்கர வண்டிகளை மோதியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹொரொம்புவ சந்திக்கு அண்மித்த ஹொரோம்புவ வாகன தரிப்பிடத்துக்கருகில் கடந்த சனிக்கிழமை (27) இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பண்டாரவளையில் இருந்து மொனராகலை தபால் நிலையத்துக்கு வழமைப் போன்று தபால் பைகளை ஏற்றிச் சென்ற இந்த வேன், வேகக் கட்டுப்பாட்டினை இழந்து, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு முச்சக்கர வண்டிகளுடன் மோதி பின்னர்,, பஸ்ஸுக்காக வீதியில் காத்திருந்த முன்பள்ளி மாணவர்கள் இருவர் உட்பட தாய் ஒருவரையும் மோதியுள்ளதுடன், வீதிக்கு எதிர் திசையில் அமைக்கப்பட்டிருந்த சிறிய கடையொன்றின் மீதும் மோதியுள்ளது. இந்த விபத்தில் இரு மாணவர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர்கள், மொனராகலை தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில், முச்சக்கரவண்டியின் சாரதி சிகிச்சை பலனின்றி உயி ரிழந்துள்ளதாக தெரிவித்த மொனராகலை பொலிஸார், விபத்து தொடர்பா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியாவில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டு



(நானுஓயா நிருபர்)

நுவரெலியா கஜபாபுர பகுதியில் அமைந்துள்ள நுவரெலியா முன்னால் மாநகரசபை முதல்வரின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள், வீட்டிலிருந்த நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடிச்செல்லப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி 5 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் (28) அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் மேல்மாடியில் ஜன்னல் ஒன்றினை உடைத்துக்கொண்டு கொள்ளையர்கள் வீட்டுக்குள் புகுந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அலுமாரிகள் உடைக்கும் சத்தம் கேட்டு வீட்டின் உரிமையாளர்கள் வந்து பார்த்தபோது ஜன்னல் வழியாக திருடர்கள் இருவர் தப்பி ஓடுவதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து, அயலவர்களின் உதவியை நாடியபோதும் கொள்ளையர்கள் முச்சக்கர வண்டியொன்றில் தப்பி செல்லும் காட்சிகள் வீட்டுக்கருகில் வீதியோரமாக பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

இதனை அடிப்படையாக கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மொனராகலை பிரதேசத்தில் 22 வயதுடைய யுவதி மாயம்

**ஊவா வெல்லஸ்ஸ நிருபர்**

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஸ்ஸபுர ஹுலந்தாவ தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி ஒருவர் கடந்த 27ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக மொனராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது. தனியார் ஆடை தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் இந்த யுவதி கடந்த 27 ஆம் திகதி காலை வேலைக்கு செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

எனினும், இந்த யுவதி அன்று (27) கடமைக்கு வரவில்லையென பெற்றோருக்கு, ஆடை தொழிற்சாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளதாக தெரியவருகிறது. இதனையடுத்து யுவதியின் தாய் தனது மகளுக்கு அழைப்பையேற்படுத்தியபோது,

தான் கண்டி பிரதேசத்துக்குச் செல்வதாகவும், தன்னை தேட வேண்டாமெனவும் கூறிவிட்டு அழைப்பை துண்டித்துள்ளதுடன் தொலைபேசியையும் நிறுத்தி வைத்துள்ளார். இந்நிலையிலேயே யுவதியின் பெற்றோரால் மொனராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்று சின்னக்குளம் அன்னை ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் ஆலய கும்பாபிசேகம்





அக்கரைப்பற்று சின்னக்குளம் அன்னை ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் ஆலய புனருத்தான திருத்தாபன எண்கழிம முப்பத்தாறு தத்துவத்தூண்கள் தாங்கும் பதினேழு குண்ட பிரம்ம சூத்திர பெரும்யாக பெரும் கும்பாபிசேக குடமுழுக்கு பெருவிழா இம்மாதம் 15ஆம் திகதி சுபநேரத்தில் இடம்பெற்றது.

கடந்த 08ஆம் திகதி கர்மாரம்ப கிரியைகளோடு ஆரம்பமான கும்பாபிசேகப் பெருவிழா 09ஆம் 10ஆம் 11ஆம் 12ஆம் திகதிகளில் இடம்பெற்ற கும்பாபிசே வழிபாட்டு கிரியைகளோடும் 13ஆம் 14ஆம் திகதிகளில் இடம்பெற்ற தைலாப்பியாங்கம் என சொல்லப்படும் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவம் நிகழ்வுகளோடும் 15ஆம் திகதி காலை திருகோண நட்சத்திரமும் கன்னிலக்கினமும் கூடிய 6 மணி முப்பது நிமிடம் தொடக்கம் 7 மணி ஐம்பத்தொன்பது நிமிடம் வரையிலான சுபநேரத்தில் அம்மனுக்கும் பரிவார



மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து 14 நாட்கள் மண்டலாபிசேகமும் பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. இன்று 30ஆம் திகதி இடம்பெறும் சங்காபிசேகத்துடன் மண்டலாபிசேகம் நிறைவுறுகின்றது.

**தலபுராணம்**

நிழலான பூவரச மரநிழலை கண்டு

அன்னையே உன் திருமனது மகிழ்ந்து

அழகான கோயிலை அமைத்திடவே எண்ணி

அன்பான சிவராசா உடலது ஏறி

அருளான அருள்வாக்கு அம்மையும் அருள

மக்களும் மனமார இவ்விடம் வந்து

எழிலான சின்னக்குளம் பதியதனில் எங்கள்

அம்மை வீரமாகாளிக்கு ஓர் ஆலயம் கட்டி வைத்தார்கள்.

வரலாற்றுச் சுருக்கம்

சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத்திருநாட்டின் தென்கிழக்கில் வரலாற்றுச் சிறப்புடன் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் அழகிய கிராமம் கருங்கொடியூர் என அழைக்கப்படும் அக்கரைப்பற்று. ஆரம்ப காலத்தில் இப்பகுதியினை கருங்கொட்டி எனும் பற்றைக்காடுகள் சூழ்ந்திருந்ததாகவும் அவற்றை அகற்றி மக்கள் குடியேறியமையால் கருங்கொடியூர் எனவும் கிழக்கே வங்கக்கடலும் ஏனைய மூன்று பக்கங்களில் தில்லையாறும் வளைந்தோடுவதால் தீவு எனவும் முழுதாக இப்பிரதேசம் கருங்கொடித்தீவு என பெயர் பெற காரணமானது என வரலாறு கூறுகின்றது. காலப்போக்கில் கருங்கொடித்தீவு எனும் பெயர் மாற்றம் பெற்று ஒலுவில் கழியோடைப்பாலத்திற்கு தெற்கே அக்கரையில் இருந்தமையால் அக்கரை எனவும் அக்காலத்தில் அப்பகுதியில் இருந்த பத்து கிராமங்களையும் ஒன்றிணைத்து பெரும்பகுதியாக கணிக்கப்பட்ட பகுதி அக்கரைப் பத்து எனவும் இச்சொல் மருவி அக்கரைப்பற்றாக மாற்றம் பெற்றது எனவும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு அருமறைகள் மாட்சிதரும் அக்கரைப்பற்று பெருநகரில் இற்றைக்கு சுமார் 34 வருடங்களுக்கு முன்னர் ஆலயம் அமைந்திருக்கும் இந்த அற்புதசக்தி நிறைந்த இடமோ ஒரு சிறுகுளம். பிள்ளைகளும் பெரியோர்களும் மீன்பிடித்து விளையாடும் சேறு நிரம்பிய சதுப்புநில பிரதேசம். அந்த குளத்தில் மீன் பிடித்து விளையாடிய சிறுவனே சிவராசா எனும் கல்வியினை பூரணமாக கற்காத ஒரு சிறுவன்.

அப்போது நாட்டில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலம். அம்பாரை மாவட்ட தமிழ் மக்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத பல வடுக்களை ஏற்படுத்திய காலப்பகுதி. இதன் உச்ச கலவரம் இடம்பெற்ற 1989 மற்றும் 1990 களில் அனைவரும் இடம்பெயர்ந்து அகதிகளாக திருக்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் தஞ்சம் அடைந்த நேரம். கந்தையா சிவராசா எனும் இறைநம்பிக்கை இல்லாத மீன்பிடி மற்றும் மேசன் தொழில்களை செய்து வந்த 17வயது சிறுவனும் தம்பிலுவில் பகுதியில் தஞ்சம் புகுந்தான். அவ்வேளை ஒரு நாள் அவருடன் இருந்த அனைவரும் உயிராபத்தினை சந்திக்க கூடிய அசம்பாவிதம் ஒன்றில் அகப்பட்டுக் கொள்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த கண்ணகி அம்மனை வழிபடவந்ததாக சிவராசா கூறியதனால் உயிர் பிழைத்துள்ளான்.

அன்றிலிருந்து அம்மனுடைய அருளுடன் அவளை வழிபடவேண்டும் எனும் எண்ணமும் அவனுள் உருவாகத் தொடங்கியது. இக்காலத்தில் அக்கரைப்பற்று வாழ் அனைத்து மக்களின் ஒரே அம்மன் வழிபாட்டுத்தலமாகவிருந்து பல அற்புதங்கள் புரிந்த சரணபாலபுரம் பகுதியில் குடிகொண்டிருந்த விஸ்வகுலமக்களின் குலதெய்வமான அன்னை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் கலவரத்தினால் உடைக்கப்பட்டது. அங்கு குடிகொண்டிருந்த அம்மனுக்கு பூஜை வழிபாடுகள் சில காலம் இல்லாமல் போனது.

இது இவ்வாறிருக்க சில மாதங்களின் பின் அக்கரைப்பற்றிற்கு திரும்பிய சிவராசா மனதில் அம்மனுடைய எண்ணமே அதிகமாக இருந்தது. இப்படியான மனச்சங்கடத்தோடு ஓரிரவு நித்திரையில் தரிசனமளித்த அன்னை காளி 'என்னை ஆதரி உன்னைத்தேடி வந்திருக்கின்றேன் ஓலைக்குடிசையிலாவது என்னை வைத்து வணங்கு' என கூறியுள்ளாள். தொடர்ச்சியாக அன்னையவள் இவ்வாறு கூற தனது சில நண்பர்களுடன் கூடி தனக்கு சொந்தமான மீன்பிடித்து விளையாடும் குளம் போன்ற வளவில் குடிசை அமைத்து வழிபடத்தொடங்கினான்.

இவனது செயல்கண்ட அண்ணன் கட்டிய குடிசையை பிய்த்தெறிந்து அனைத்தையும் அங்கிருந்து அகற்றினார். அன்றிரவு தூங்கமுடியாத அவர் மீண்டும் தன் கைகளாலேயே குடிசையை அமைத்துக் கொடுத்து வழிபடவும் தொடங்கினார்.

முதலாவது பூஜை 1990ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்ற பூஜையுடன் ஆரம்பமானது. அவ்வருடமே அமரர்களான சா.கணபதிப்பிள்ளை, வீ.வீரக்குட்டி ஆகிய இரு பூசகர்களின் உதவியுடன் சடங்கும் நடந்தேறியது.

1991ஆம் ஆண்டு அமரர் க.மாணிக்கன் பூசகரின் உதவியோடு முதலாவது சடங்கும் பக்தி ததும்பும் தீமிதிப்பும் அன்னையின் அருளுடன் நடைபெற்றது. ஓலைக்குடிசையில் ஒய்யாரமாய் அமர்ந்து கொண்ட அன்னை ஸ்ரீ வீரம்மகாளியின் அருள் பெருகியது.

'ஓம் சக்தி துணைகொண்டு ஓடி வந்தோம் உனைத் தேடி வீரம்மா காளியம்மா வெற்றியினை தந்திடம்மா' என அடியவர்கள் தொழுதழுதும் அன்னையின்

ஆலயம் அமைவதில் பல எதிர்ப்புக்கள் உருவானது. சில பெரியோர்கள் தொடக்கம் ஊர் தலைவர்கள் வரைக்கும் எதிர்வலைகள் உருவானது. சில ஆலயங்களும் தடைகள் பல இட்டன. ஆனாலும் தடைகளை ஏற்படுத்திய அனைவரும் அன்னையின் அருளால் அவள் பதம் சரணடைந்தனர். படிப்படியாக பக்தர்கள் கூட்டம் பெருகியது. ஒன்றும் அறியா சிவராசாவும் அம்மன்



அருளால் மந்திரங்களை உச்சரிக்க தொடங்கினான். நிருவாக கட்டமைப்பும் தானே உருவானது. ஆரம்பகால நிருவாகம் அவ்வப்போது ஆலயம் அமைப்பதில் பல்வேறு சிக்கல்களையும் எதிர்ப்புக்களையும் எதிர்நோக்கியது. அன்னையின் அருளால் அவையெல்லாம் தவிடுபொடியாகி ஆலயம் அமைக்கும் பணி மிகவும் வேகமாக நடைபெற்றது.

அப்போது ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டுவந்த பூசகர் அமரர் இளையதம்பி குருக்களிடம் ஆலோசனையினையும் நிருவாகம் பெற்றுக் கொண்டது. பின்பு காலத்திற்கு காலம் தெரிவான நிருவாகங்கள் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டது. அன்னையின் தொண்டன் க.சண்முகத்தின் கைகளால் நடப்பட்டு பராமரிக்கப்பட்ட நிழல்தரும் மரங்கள் இன்று விருட்சமாக காட்சியளிக்கின்றது.

இதற்கிடையே அன்னை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயமும் அக்கரைப்பற்று 7/2 பிரிவில் பத்திரகாளியம்மனுக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்டு மக்களால் வழிபடப்பட்டது. இரு அம்மன் ஆலயங்களிலும் குடிகொண்ட அன்னையவள் இரு கண்களை போல் மக்களை காத்து வருகின்றாள்.



தொடர்ந்து வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மாணிக்கம் பூசகர் இறையடி சேர்ந்தார். அவரது இடத்திற்கு பதிலாக பலரை நியமிக்க அப்போது முடிவு செய்தபோதிலும் அப்போதைய நிருவாகத்தால் அம்மனுக்கு பல வருடகாலம் தொண்டாற்றிய சிவத்திரு யோகானந்தம் (ரவி) அம்மன் அருளால் பூசகராக இணைந்து கொண்டார். இதேநேரம் அம்மனவள் குடிகொண்ட அம்மனுக்கு பணிவிடை செய்து அம்மன் கும்பத்தினை சுமத்து ஊர்வலம் சென்று கொண்டிருந்த சிவராசா அவர்கள் உடல் நலம் குறையவே அவரது இடத்திற்கு அவரது மருமகன் சிவத்திரு ஜெ.ஜெயரூபன் அம்மன் அருளால் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இது இவ்வாறிருக்க அவ்வப்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிருவாகங்களும் அம்மன் ஆலய கட்டட வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது. இதன் அடிப்படையில் அன்னையினுடைய முதலாவது முதலாவது ஜீர்னோத்தாரண பஞ்ச குண்டபட்ஷ மஹா கும்பாபிஷேகம் 2014ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ்வாறான ஆலய வளர்ச்சிப்பாதையில் தவிர்க்க முடியாத சில தடைகளும் 2020 ஆண்டளவில் ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்டது. அப்போது நிருவாகத்தை பொறுப்பேற்க அனைவரும் பின்வாங்கினர்.

ஆனாலும் யாரும் எதிர்பாராத வகையில் தற்போதைய தலைவர் பா.பிரசாத் தலைமையிலான செயலாளர் வ.யோகானந்தம் பொருளாளர் பே.பிரதீபன் ஆகியோரை உள்ளடக்கிய நிருவாகம் அப்போதைய பிரதேச செயலாளர் வி.பபாகரன் முன்னிலையில் பலத்த இழுபறிக்கு மத்தியில் பொறுப்பேற்றது.

இருந்தாலும் இரு ஆண்டுகளின் பின்னர் செயலாளராக வி.நிராஜ் பொறுப்பேற்றார். இதன் பின்னராக இடைவிடாத இந்த நிருவாகத்தின் முயற்சியால் இழக்கப்பட்ட அம்மன் சொத்துக்கள் நீதிமன்றம் ஊடாக அறவீடு செய்யப்பட்டது. முதல் தடவையாக அம்மன் ஆலயத்திற்கு சொந்தமாக மூன்று ஏக்கர் காணியும் கொள்வனவு செய்யப்பட்டது.

வாச்சிக்குடா
*வி .சுகிர்தகுமார்*

# ஆம் ஆத்மி கட்சிக்கு அக்னி பரீட்சை




இந்தியத் தலைநகர் டெல்லியில் கடந்த பத்தாண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஆம் ஆத்மி கட்சி தற்போது அக்னி பரிச்சையில் தன்னை சோதித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. டெல்லி மாநில மதுபானக் கொள்கை வழக்கில் முறைகேடு செய்திருப்பதாக ஆம் ஆத்மி கட்சியின் தலைவரும், டெல்லி மாநில முதலைமச்சருமான அர்விந்த கேஜ்ரிவால் கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் 155 நாட்களாக இருந்து கடந்த 13ஆம் திகதி பிணையில் விடுதலையானார்.

வழக்கு இன்னும் முடிவடையாத நிலையில் முதமைச்சர் அலுவலகம் செல்லக் கூடாது கோப்புகளில் கையொப்பம் இடக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியிருக்கிறது. ஊழலுக்கு எதிரான கட்சியாக செயல்படும் என்று ஆட்சியைப் பிடித்த ஆம் ஆத்மி கட்சியின் முதலைமைச்சரே இன்று ஊழல் வழக்கில் கைதாகியிருப்பது அரசியல் மட்டத்தில் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது. திட்டமிட்டு சதி செய்து வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ளதாக ஆம் ஆத்மி கட்சியினர் குரல் கொடுத்தாலும், தங்கள் மேல் பூசப்பட்டுள்ள கறையை எவ்வாறு துடைக்கப்போகிறார்கள் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

பா.ஜ.கவுக்கு ஆதரவு இல்லாத மாநில முதலைமைச்சர்கள் மீது தொடர்ந்து பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கப்பட்டு பழிவாங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருந்தாலும் அர்விந்த் கெஜ்ரிவால் எவ்வாறு தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து விடுபட்டு தன்னைக் குற்றமற்றவர் என்று மக்கள் மத்தியில் நிரூபிக்கப் போகிறார்? நிறைய



போராட வேண்டியிருக்குமே? என்ற நிலையில் இது தனக்கான அக்னிப் பரீட்சை என்று அவரே தெரிவித்திருக்கிறார்.

இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு முதலைமைச்சர் பதவியிலிருந்து விலகி தான் குற்றமற்றவன் என்று நிரூபித்து, மீண்டும் மக்களைச் சந்தித்து வெற்றி பெற்ற பின்பே முதலைமைச்சர் நாட்காலியில் அமர்வதாக சபதம் ஏற்றிருக்கும் அவரது துணிச்சலைப் பாராட்ட வேண்டும். துணை முதலைமைச்சராக இருந்த மணீஷ் சிசோடியாவும் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டு தற்போது அவரும் பிணையில் இருப்பதால், அவரும் மக்கள் மன்றம் சென்று தன்னை குற்றமற்றவர் என்று நிரூபிக்கப் போவதாக உறுதி எடுத்துள்ளார்.

இவர்கள் இருவருமே பதவியில் நீடிக்க முடியாதசூழல் இருப்பதால் கட்சியின் அரசியில் விவகாரக்குழு கூடி, விவாதித்து கல்வித்துறை அமைச்சராக பதவி வகித்து வந்த ஆதிஷி சிங் மர்லேனாவை முறைப்படி தேர்வு செய்து டெல்லியின் முதலைமைச்சராக்கியிருக்கிறது.

தற்போது டெல்லியின் முதலைமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் ஆதிஷி டெல்லியின் முதல் இளம் வயது (43) முதல்வர் என்பதோடு, மூன்றாவது பெண் முதல்வர் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறார் . டெல்லியின் முதல்வர்களாக ஏற்கனவே பா.ஜ.க.வின் சுஷ்மா ஸ்வராஜ், காங்கிரஸ் கட்சியின் ஷீலா தீட்சித் ஆகியோர் பதவிவகித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு பெப்ரவரியில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சிக்காலம் நிறைவடைகிறது. எனவே வரும் பெப்ரவரி மாதம் வரையில் ஆதிஷி சிங் மர்லேனா தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்.

பா.ஜ.க கொடுத்து வரும் நெருக்கடியில் இருந்து எப்படி வெளியே வந்து வெற்றி பெறுவது என்பது தான் அர்விந்த் கெஜ்ரிவாலுக்கு தற்போது இருக்கும் சவால், நடந்து முடிந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

ජාතික භාෂාව අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

National Institute of Language Education and Training

NILET

## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள இணைப்பு உதவியாளர் பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இணைப்பு உதவியாளர் பதவி (தற்காலிக அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சேர்த்துக் கொள்ளல்)

1. **வேலைகள்**
2007 இல. 26 தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் மூலம் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகள் மற்றும் அரச மொழிக் கொள்கையை செயற்பாட்டுடன் செயற்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்தல் அந் நிகழ்ச்சித்திட்டத்தை இணைத்தல் மற்றும் பின்னணியை ஆராய்தல்

2. **நியமனத் தன்மை**
வெற்றிடப் பதவி இரண்டாகும். இந் நியமனம் தற்காலிகமானது. ஒரு வருட காலத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு உரித்தாகும்.

3. **சம்பளம்**
MA 3 முறையின் கீழ் அடிப்படைச் சம்பளத்துடன் அரசு அனுமதித்த கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

4. **கல்வித் தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

4.1 **மேலதிக தகைமைகள்**
I. பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மொழி மூலத்திற்கு மேலதிகமாக சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி பற்றிய அதிகூடிய திறன் பெற்றிருத்தல்
II. தகவல் தொழில்நுட்பம் பற்றிய அனுபவத்தைப் பெற்றிருத்தல்

5. **வயது**
21 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முறை**
சுயதரவு விபரங்கள் மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர், தொ.பே. இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் தபால் முகவரி உட்பட தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம், கல்வி/தொழில்சார் சான்றிதழ் பிரதியுடன் 2024.10.14ம் திகதி அல்லது அதற்கு முன்பு குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**இல. 321/1A, ஹைலெவல் வீதி,**
**மாகும்புர, பன்னிப்பிட்டிய.**



சுகாதார சேவைகள் திணைக்களம்

தேசிய வைத்தியசாலை, காலி

## மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் உருப்படிகளை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்படும் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி மாதிரிப் படிவங்கள் காலி, தேசிய வைத்தியசாலையின் கேள்விச் சபையின் தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படும் திகதி மற்றும் நேரம் | கேள்வி கோரும் முடிவுத் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| Word Monitor | 10 | 2024-09-30ஆம் திகதி முதல் 2024.10.19ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை | 2024-10-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |
| ECG Machine | 02 | | |
| USS Machine | 01 | | |
| ICU Beds | 20 | | |
| Defibrillator | 02 | | |
| Multi Monitor With Capnography | 03 | | |
| Diathermy Machine | 01 | | |
| Patent Warmer | 02 | | |
| DVT Pump | 01 | | |
| Wall Suction – Regulation | 13 | | |
| ICU Monitor | 04 | | |
| Infusion Pump | 05 | | |
| Syringe Pump | 20 | | |
| Suction Apparatus | 02 | | |
| Blood Warmer | 01 | | |
| High Power Laser for Urology | 01 | | |

இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட மேற்படி சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏக நியமனம் பெற்ற அங்கீகாரம்பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே மேற்படி விலை கூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

2024-09-25ஆம் திகதி முதல் 2024-10-30ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் காலி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து கேள்வி மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி வாய்ந்த கேள்விதாரர் முகவரொருவரினால் அல்லது கேள்விதாரரினால் நியமிக்கப்பட்ட நபர் மூலம் பெற்றுக்கொண்ட கேள்வி மாதிரிப் படிவங்களை பூரணப்படுத்தி முத்திரை பொறித்து இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்களுக்கமைய அவை இடம்பெறல் வேண்டும்.

**கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில்**

a. காலி தேசிய வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதம்
b. சகல கேள்வியின் பொருட்டும் மீளளிக்கப்படாத 5000.00 ரூபா ரொக்கப் பணத்தை காலி தேசிய வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இது மீளளிக்கப்பட மாட்டாது.
c. சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியுடனான வியாபார பதிவுச் சான்றிதழ்
d. வெளிநாட்டு வியாபார நிறுவனத்தினால் உள்ளூர் முகவராக நியமிக்கப்பட்டதற்கான வழங்கிய ஒரு சான்றிதழ்/கடிதம்/அட்டோர்ணி அதிகார ஆவணம்.

**கேள்விப்படிவங்களைச் சமாப்பிக்கும் வேளையில்**

a. 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கொழும்பு டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, 'சமாகம் மெதுர' வில் உள்ள அரச ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் நிலையிலுள்ள பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். (5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக மட்டும் / Tender File Number FK/25/2024)
b. கேள்விப் பெறுமதியின் 2% பெறுமதியைக் கொண்ட இலங்கையில் அனுமதிப்பத்திரம் மற்றும் பதிவுசெய்துகொண்ட (CBSL யினால்) வர்த்தக வங்கியொன்றில் சகல கேள்விகளையும் உள்ளடக்கும் வகையில் கேள்வி பாதுகாப்பொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன் அது கேள்வியின் முடிவுறுத்தல் நாள் முதல் 150 நாள் வரையில் (2025-03-20) செல்லுபடியாதல் வேண்டும். அது கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்பட்டுள்ள கேள்வி பாதுகாப்பு மாதிரிக்கு சமனானதாக இருக்க வேண்டும்.
c. CDDA பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2024 ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு காலி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்வி முடிவுறுத்தப்பட்டதன் பின் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரினால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்டு அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில் கேள்விகள் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரங்களை காலி, கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அல்லது பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 0912232159
தொலைநகல்: 0912227638

கேள்வி ஆவணங்கள் 2025-02-17ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில்)

மேற்கூறிய பொருட்களின் பொருட்டு ஆர்வம் காட்டும் கேள்வி தரர்களுக்கான கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று காலி, தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் 2024 ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கான இறுதித் தீர்மானமாகும்.

ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்தவொரு வேளையிலும் இந்தக் கேள்விகளை இரத்துச் செய்வதற்கு அல்லது அகற்றிக்கொள்வதற்கு சேவை வழங்குநருக்கு உரிமை உண்டு.

**தலைவர் / பணிப்பாளர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை, காலி.**



சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LI-0200 EICHER, 2011, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ. பே - 0714-542958 / 0711210810 066037


# கவிஞர் புத்தளம் மரிக்காரின் இரு நூல்களின் வெளியீட்டு விழா

*புத்தளம் தினகரன் நிருபர்*

இலங்கை தேசிய வானில் பிரகாசிக்கும் இலக்கிய உறவுகளின் வருகையில், கவிஞர் புத்தளம் மரிக்கார் முதன் முதலாக எழுதியுள்ள இரு நூல்களின் வெளியீட்டுவிழா புத்தளம் நகரில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வானது அக்டோபர் மாதம் 05 ஆம் சனிக்கிழமை மாலை 06.15 மணிக்கு புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி ஷாமில் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அஷ்ரப் சிஹாப்தீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமத் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட அதிதிகளாக வலம்புரி கவிதா வட்டம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன், புத்தளம் ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர், வரலாற்று ஆய்வாளர் இஸட்.ஏ.சன்ஹீர், கவியரங்க நெறியாளர், தமிழ்த் தென்றல் கவிஞர் எஸ்.எம்.அலி அக்பர், கவிஞர், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், வலம்புரி கவிதா வட்டம் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக கவிஞர், பன்னூலாசிரியர் கலாபூஷணம் ஜவாத் மரிக்கார், கவிஞர், நாடகக் கலைஞர் அப்துல் லதீப், இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகம் தலைவர் நெய்னார் இம்ரான், எழுத்தாளர், பன்னூலாசிரியர் ஸாக்கிரா இஸ்ஸதீன், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி கலாபூஷணம் நூருல் அய்ன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்ச்சித் தொகுப்பினை புத்தளம் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ஏ.என்.எம். பாத்திமா ரிஸ்கியா மற்றும் ஊடகவியலாளர் எம்.எச். முஹம்மத் ஆகியோர் வழங்கவுள்ளனர்.


## பெறுகை அறிவித்தல்

### இலகு தன்னியக்க மின்ஜக்கார்ட் இயந்திரங்களை கொள்வனவு செய்தல்

### மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்

மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் நெசவு நிலையங்களுக்கு தன்னியக்க மின் ஜக்கார்ட் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக கீழ்க்காணும் மாதிரிகளுக்கு அமைவாகக் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | இயந்திரம் | அளவு |
|---|---|---|
| 1 | ரேபியர் லூம் இயந்திரம் (Rapier loom) | 2 |
| | வோபிங் இயந்திரம் (Warping machine) (ரேபியர் லூம் இயந்திரத்திற்கு) | 1 |
| | வைன்டின் இயந்திரம் (Winder) (ரேபியர் லூம் இயந்திரத்திற்காக) | 1 |
| 2 | மின் ஜக்கார்ட் (Electric Jacquard) | 2 |
| | வோபிங் இயந்திரம் (Warping machine) (ஜக்கார்ட் இயந்திரத்திற்காக) | 1 |
| | வைன்டின் இயந்திரம் (winder) (ஜக்கார்ட் இயந்திரத்திற்காக) | 1 |
| 3 | போர்க் லிப்ட் (Folk lift) | 2 |

- விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக தேவையான கேள்வி ஆவணங்களை தன்னியக்க மின்ஜக்கார்ட் இயந்திரத்திற்காக ரூ. 5000/- மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024.09.30 முதல் 2024.10.14 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கைத்தொழில் திணைக்களத்தின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2024.10.14 பி.ப. 2.00 இற்கு முன்பு தலைவர், பெறுகைக்குழு கைத்தொழில் திணைக்களம் (மே.மா.) புதிய மாகாண சபைக் கட்டிடம் 3ஆம் மாடி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பொறியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அவ் அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) இன் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2024.10.14 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு.**
**கைத்தொழில் திணைக்களம் (மே.மா.),**
**204, மாகாண சபைக் கட்டிடம்,**
**3ம் மாடி, பத்தரமுல்ல.**
**011 2092595, 011 2092591.**



## பெறுகை அறிவித்தல்

### போதனா வைத்தியசாலை, குருநாகல்

இந்த வைத்தியசாலையின் பிரேத அறையில் உரிமை கோரப்படாது எஞ்சியிருக்கும் உடல்கள், குழந்தைகளின் உடல்கள் மற்றும் உடல் பாகங்களை அகற்றுவதற்கு 2024.12.01 ஆம் திகதி தொடக்கம் 2025.11.30 ஆம் திகதி வரையான காலத்திற்கு குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவரினால், ஆர்வம் காட்டுகின்ற மற்றும் தகுதியுடைய இறுதிச் சடங்கு சேவை உரிமையாளர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கூறுவிலைகளை சமர்ப்பிக்க வேண்டியது கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.

01. இலாபரீதியில் தயாரிக்கப்பட்ட பிரேதப் பெட்டி ஒன்றில் வைத்து உடல் மற்றும் உடல் பாகங்களை அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
02. இவ்வாறு அகற்றப்படும் உடல் மற்றும் உடல் பாகங்களை ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காம் வாரத்தின் வெள்ளிக்கிழமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
03. தேவையான பணியாளர்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்ள முடியுமாக இருத்தல் வேண்டும்.
04. கூறுவிலைகளை சமர்ப்பித்த பின்னர் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் வைத்தியசாலையுடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும் என்பதோடு, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை அந்த வகையிலேயே மேற்கொள்வதற்கு கடப்பாடு பெற்றிருத்தல் வேண்டும்.
05. ஒவ்வொரு கேள்விமனு விண்ணப்பத்துடனும் வர்த்தகப் பெயர் பதிவு சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
06. கேள்விமனுதாரருக்காக ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் நிழற்பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்.

கூறுவிலைகளை ஏற்கும் இறுதித் திகதி தொடக்கம் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு, அனைத்துக் கூறுவிலைகளுடனும் 15,000.00 ரூபா பெறுமதி கொண்ட மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை ஒன்றை இணைத்திருத்தல் வேண்டும். விலைமனு பிணையை குருநாகல் போதனா வைத்தியசாலை சிறாப்பருக்கு ரொக்கப்பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்களை 2024.10.22 ஆம் திகதி பி.ப. 3.00 வரை வைத்தியசாலை காசாளருக்கு மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின் கேள்விமனுக்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

2024.10.23 ஆம் திகதி பி.ப. 2.00 வரை கேள்விமனுக்கள் கோரப்படுவதோடு, கேள்விமனுக்களைத் திறப்பது அன்றைய தினம் அந்த நேரத்திற்கு பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் மேற்கொள்ளப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

விலைமனுக்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வைத்தியசாலை பிரேத அறையில் உரிமை கோரப்படாத உடல்கள் மற்றும் உடல் பாகங்களை அடக்கம் செய்தல்" என்று தெளிவாகக் குறிப்பிட்டு, உங்களது கூறுவிலைகளை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது தலைமை கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு கொண்டுவந்து இடுவதற்கு முடியும் என்பதோடு, இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவையெனில் 037-2233905 என்ற இலக்கத்திற்கு அழைத்து நிர்வாக அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பில் ஏதேனும் சிக்கல் எழுந்தால் பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவு என்பதை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, குருநாகல்.**


# கும்பம் சொரிதல்

*உடப்பு குறூப் நிருபர்*

உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவம் நிறைவடைந்து, கும்பம் சொரிதல் நிகழ்வு (27) ஆண்டிமுனை ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் செவ்வாய்க் கொட்டி இடம்பெற்றது. பின்னர் கடற்கரையில் கும்பம் சுமந்த பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் உட்பட கடலில் நீராடி கும்பத்தைச் சொரிந்தனர்.

## ஆம் ஆத்மி கட்சி... (11 ஆம் பக்க தொடர்)

மக்களவைத் தேர்தலில் டெல்லியில் ஆம் ஆத்மி கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்காத நிலையில், மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைந்து வருகிறதோ என்ற ஐயமும் இருக்கிறது.

பா.ஜ.க காங்கிரஸ் இரண்டு கட்சிக்கும் மாற்றாக டெல்லி மக்களிடையே வரவேற்பைப் பெற்ற ஆம் ஆத்மி கட்சி மீதான ஊழல் குற்றச் சாட்டு மக்களிடத்தில் மதிப்பைக் குறைத்துள்ளதோ என்றும் அவதானிக்க வேண்டியுள்ளது.

எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் சவாலாக ஏற்றுக்கொண்டுமுறியடிக்க வேண்டும் என்பதில் முனைப்போடு அர்விந்த் கெஜ்ரிவால் மக்கள் மன்றத்திற்கு வந்திருக்கிறார். அண்மையில் நடந்த ஒரு பொதுக்கூட் டத்தில் அவர் பேசும் போது பிரதமர் நரேந் திர மோடி குறித்து ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத்திடம் ஐந்து கேள்விகளை முன்வைத்திருக்கிறார்.

பா.ஜ.க.வில் 75 வயதுக்குப் பிறகு பொறுப்பிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்ற விதி மூத்த தலைவர் எல்.கே அத் வானிக்கு கடைப்பிடிக் கப்பட்டது. ஆனால், மோடிக்கு ஏன் இந்த விதி கடைப்பிடிக்க

வில்லை. மோடி எதிர்க்கட்சிகளை உடைத்து அக்கட்சி உறுப்பினர்களை தன் கட்சியில் சேர்க் கிறார். இதற்கு அமுலாக்கத் துறை சி.பி.ஐ ஆகிய அமைப்புகளை அவர் பயன் படுத்துகிறார். அவரது இந்த நடவடிக்கை சரியானதா?ஊழல் வாதிகள் என்று தான் குற்றம் சாட்டிய தலைவர் களை .இப்போது அரசியல் லாபத்துக்காக மோடி தன் கட்சி யில் சேர்த்து வருகிறார். மோடியின் இந்த அரசியலுடன் ஆர்.எஸ்.எஸ் உடன்படுகி

றதா? பா.ஜ.க தேசியத் தலைவர் நட்டா. பா.ஜ.க.வுக்கு இனி ஆர் எஸ் எஸ் தேவையில்லை என்று கூறியது குறித்து ஆர். எஸ். எஸ். அமைப்பு என்ன நினைக்கிறது ? ஆர். எஸ்.எஸ் அமைப்பிலிருந்து உருவான கட்சி தான் பா.ஜ.க. பா.ஜ.கவின் தவறுகளை என்றாவது ஆர்.எஸ். எஸ் தடுத்திருக்கிறதா? என்று அர்விந்த் கெஜ் ரிவால் கேள்வி எழுப் பியிருக்கிறார். ஆனால், இந்தக் கேள்விக ளுக்கான பதில் பா.ஜ.கவிடம் இருந்தோ

ஆர்.எஸ்.எஸிடம் இருந்தோ வரப்போவதில்லை என்றாலும். பா.ஜ.க மீதான தனது விமர் சனத்தின் மூலம் தன் மீதான குற்றச் சாட்டு நியாயமில்லை என்பதை மக்களி டத்தில் எழுத்துரைக்க முயற்சி செய்கிறார் என்று புரிந்து கொள்ளலாம். என் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் என்னைக் காயப் படுத்தின. அதன் காரணமாகவே நான் முதல்வர் பதவியை இராஜினாமா செய்கி றேன். கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் நான் மக்களிடம் மரியாதையைத்தான் சம் பாதித்துள்ளேன் பணத்தை அல்ல. எனவே வரும் டெல்லி சட்ட மன்ற தேர்தல் எனக்கு சவாலானதாக இருக்கும். ஆனால், நிச்ச யம் வெற்றி பெறுவார் என்று நம் பிக்கை யோடு களத்தில் நிற்கிறார்.

அர்விந்த் கெஜ்ரிவாலின் அரசியல் எதிர்

காலத்தை ஒன்றுமில்லாமல் ஆக்கவேண் டும் என்று பா.ஜ.க பல நெருக்கடிகளை கொடுத்து வந்தாலும், மக்கள் அவரைக் கைவிட மாட்டார்கள் என்று அவர் நம் பிக்கையோடு இருக்கிறார். தன்னுடைய கடந்த பத்தாண்டு காலத்தில் மக்களுக்கு செய்துள்ள நன்மைகளை மக்கள் மறந்து விட மாட்டார்கள் என்று அவர் எண்ணுகி றார். இந்தியா கூட்டணியில் ஆம் ஆத்மி கட்சி இருந் தாலும் டெல்லிசட்டமன்றத் தேர் தலில் தனித்தே போட்டியிட்டு தன்னை நிரு பிக்கவேண்டிய கட்டாயமும் இருக்கிறது. ஆனால், ஆளும் கட் சியான பா.ஜ.கவின் வியூகங்களை அது எப்படி முறியடிக்கும் என்ற சாவாலும் ஆம் ஆத்மிக்கு இருக் கிறது. அதிகார பலம், பணபலம் இரண் டுமே பா.ஜ.கவிடம் கூடுதலாக இருக்கும்

போது தேர்தல் நேரத்தில் இன்னும் பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருக் கும். அதை எல்லாம் எவ்வாறு முறியடித்து வெற்றி பெறும் என்பதே அனைவரின் எதிர் பார்ப்பாக இருக்கிறது. ஆம் ஆத்மியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தியாகவே பெப்ரவரியில் வர இருக்கும் டெல்லி சட்ட மன்றத் தேர்தல் இருக் கும் என்பதே அர சியல் விமர்சகர்களின் எதிர் பார்ப்பாகவும் இருக்கிறது. தேர்தல் நேரத்து மக்களின் மனநிலையைப் பொறுத்தே மாற்றம்வ ரும் என்பதே கடந்தகால அரசியல் தீர்ப்புகளாக இருந்திருக்கிறது.

எனவே டெல்லி மக்கள் என்ன செய்யப் போகி றார்கள். ஆத்மி கட்சி மீண்டும் டெல் லியைக் கைப்பற்றுமா? என்று பொறுத்தி ருந்து பார்ப் போம்.

# பெரும்போக விவசாய செய்கைக்காக நாச்சியாதீவு விவசாய பிரிவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி





*( திறப்பனை தினகரன் நிருபர் )*

2024/2025 பெரும்போக பருவகாலம் தொடர்பான அநுராதபுர மாவட்டத்தின் முதலாவது கன்னி கூட்டம் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில்

அண்மையில் இடம் பெற்றது. இக் கூட்டம் இரண்டு பகுதிகளாக துருவில நீர்த்தேக்கப் பிரிவு மற்றும் நாச்சியாதீவு நீர்த்தேக்க பிரிவு என வகைப்படுத்தப்பட்டு இடம் பெற்றது. நாச்சியாதீவு விவசாயப் பிரிவின் ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவு அலுவலகத்தில் நாச்சியாதீவு பிரதேச பெரும் போக விவசாய உற்பத்தி கூட்டம் இடம் பெற்றது.

நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமானது 31850 ஏக்கர் அடியாக இருப்பதால் இம்முறை பெரும் போகத்தின் போது 6500 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கையை மேற் கொள்ளவும் மேலதிக உணவுப் பயிர் உற்பத்திக்காக 500 ஏக்கர் நிலப்பரப்பை பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உரிய நீர்த்தேக்கங்களில் இருந்து இவ்வருடம் அக்டோபர் 15 தண்ணீர் திறந்து விடப்பட்டு, 2025 மார்ச் 05 அறுவடை செய்து முடிக்க வேண்டிய காலப்பிரிவாகும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பணிப்புரைக்கு அமைய கடந்த பருவத்திற்கு அமைவாக அரசாங்கம் உரத்திற்கான பணத்தை இம்முறையும் வழங்குவதெனவும் அதன் ஊடாக விவசாயிகள் தமக்குத் தேவையான பசளைகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்குப் பொறுப்பான அதிகாரி இங்கு தெரிவித்தார். அநுராதபுர மாவட்ட உர செயலக உதவிப் பணிப்பாளர் ஆர்.டபிள்யூ. பந்துல குமார குறிப்பிடும்போது தரமான உர வகைகள் விவசாயிகளின் கைகளில் கிடைப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான ஒழுங்குமுறை தற்சமயம் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும், தரத்தில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி அவற்றை நிவர்த்தி செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

40000 ரூபாய் இலவச காப்புறுதி முறை நடைமுறையில் உள்ளதாகவும், உற்பத்திச் செலவுக்கு ஏற்ப பணம் செலுத்தி காப்பீட்டு முறைகளைப் பெறலாம் என்றும் வேளாண்மை காப்புறுதி உதவி இயக்குநர் நீல் பண்டார ஏக்கநாயக்க இங்கு குறிப்பிட்டார்.

# தோட்டாக்களுடன் நான்கு மெகசின்கள் கைப்பற்றல்

*அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்*

அலயாப்பத்துவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட இல 304 கல்கடவல மல்வத்து ஓயா அணைகட்டின் கீழ் 120 ரீ 56 வகை தோட்டாக்களுடன் நான்கு மெகசின்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

மல்வத்து ஓயா கல்கடவல பகுதியைச் சேர்ந்த ஒருவர் குறித்த பகுதிக்கு மீன் பிடிக்க சென்ற போது நீர் வாய்க்காலில் சேற்று குட்டையில் இந்த நான்கு மெகசின்களை கண்டுள்ளார்.

பின்னர் இது தொடர்பில் கல்கடவல கடற்படை முகாம் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். இதனையடுத்து கடற் படையினர் தோட்டாக்கள் அடங்கிய நான்கு மெகசின்களை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த தோட்டாக்களை இந்த இடத்தில் வைத்த நபர் தொடர்பில் இதுவரைக்கும் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு இலக்கிய... (04ஆம் பக்கத் தொடர்)

பின்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி தங்கேஸ்வரி கதிராமனின் செயலாளராகப் பணியாற்றினார்.

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் 1961 ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்டபோது, செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் பணியாற்றிய இவர், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தின் தலைவர், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் போஷகர் ஆகிய பதவிகளிலும் பணியாற்றியுள்ளார்.

இவரின் முதல் ஆக்கம் 'கிராம்போன் காதல்' எனும் தலைப்பில் கல்கி இதழில் 1954இல் பிரசுரமானது. அன்றிலிருந்து 500க்கும் மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நாடகங்கள், நாவல் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவரின் ஆக்கங்கள் தமிழக சஞ்சிகைகளான கல்கி, கலைக்கதிர், புதுமை ஆகியவற்றிலும் இலங்கையில், வெளிவரும் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

இவரது முதற் கவிதை 'பச்சை வயல் ஈழத்து வார ஏடான சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமானது. அன்புமணி, அருள்மணி, தமிழ்மணி ஆகிய புனைபெயர்களிலும் இவர் எழுதியுள்ளார். இவரது எழுத்தை மதித்து அவ்வப்போது கடிதம் எழுதிக் கதை கோரியவர்கள், கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி சரவணபவன் சுதந்திரன் ஆசிரியராக இருந்த எஸ். டி. சிவநாயகமும் ஆவர். அன்புமணி தன்னை சுதந்திரன் பண்ணையில் வளர்ந்த எழுத்தாளராளகவே பதிவு செய்துள்ளார்.

பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே பல நாடகங்களில் முக்கிய வேடங்களில் இவர் நடித்துப் புகழ்பெற்றார். ஆரையம்பதியில் 1952ஆம் ஆண்டில் 'மனோகரா' எனும் மேடை நாடகத்தின் மூலம் ஒரு நடிகராகவும், தயாரிப்பாளராகவும் அறிமுகமானார். இவரின் 'சூழ்ச்சி வலை' எனும் மேடை நாடகமும் பெரும் வரவேற்பைப் பெற்றது. 'அமரவாழ்வு', 'ஏமாற்றம்', 'பிடியுங்கள் கலப்பையை' போன்ற ஓரங்க நாடகங்கள் இவரால் மேடையேற்றப்பட்டன.

இலங்கை வானொலியில் இவரது வானொலி நாடகங்கள் பல ஒலிபரப்பாயுள்ளன. இவரது வானொலி நாடகங்களில் ஒன்றான 'நமது பாதை 1967 தை முதல் மூன்று மாதங்களுக்கு தொடர் நாடகமாக ஒலிபரப்பப்பட்டது. வேறு பல நாடகங்களும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. இவரது வானொலி நாடகங்களில் ஒன்றான 'ஆத்ம திருப்தி என்ற நாடகம் 'தியாக தீபம்' என்ற தலைப்பில் நாடகமாக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1972இல் இவரால் எழுதப்பட்ட 'திரைகடல் தீபம்' எனும் நாடகப் பிரதியாக்கத்திற்கு இலங்கை கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் முதற்பரிசு கிடைத்தது. இவர் நாடகப் போட்டிகள் பலவற்றில் நடுவராகக் கடமையாற்றியுமுள்ளார். அத்தோடு கொழும்பில் நடைபெற்ற சில நாடகக் கருத்தரங்குகளில் பங்களிப்புச் செய்துள்ளார். இவர் ஒரு நாடக விமர்சகருமாவார்.

இவர் 'மலர் என்ற இலக்கிய இதழை 1970 முதல் 1972 வரை வெளியிட்டு நாடளாவிய ரீதியில் பல எழுத்தாளர்களுக்கு களமமைத்துக் கொடுத்துள்ளார். மலர் முதிர்ந்த எழுத்தாளர்களுக்கும் இளம் எழுத்தாளர்களுக்கும் இடமளித்தது. இளம் எழுத்தாளர்களை ஊக்கவித்துப் பிரபலமாக்கியது.

மலர் சஞ்சிகை வெளியீடுபற்றி அன்புமணி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'எனது எழுத்துலகில் மலர் வெளியீடு ஒரு மைல்கல் ஒரு முக்கிய திருப்பம் அது ஒரு தனிநபர் முயற்சி. மிக நீண்ட காலமாக, தரமான இலக்கிய சஞ்சிகையை நடாத்த வேண்டும் என்ற எண்ணம் என் நெஞ்சில் கனலாகக் கனன்று கொண்டிருந்தது. நா.பார்த்தசாரதியின் தீபம் சஞ்சிகையைப் பார்த்ததும் அந்தக் கனல் இன்னும் அதிகமாகியது. ஈழத்தில் அரசியல் கலப்பின்றி கோஷ்டி மனோபாவம் இன்றி பிரதேச வேறுபாடின்றி இனமத வேற்றமையின்றி அனைவரையும் அணைத்துக் கொண்டு வெளிவந்த ஒரே சஞ்சிகை மலர் எனலாம். ஈழத்தின் முக்கிய எழுத்தாளர்கள் பலரும் அதில் எழுதினார்கள். அப்துல்ஸமது, வ.அ. இராசரத்தினம், அருள் செல்வநாயகம், எஸ்.பொ., மஹாகவி, அண்ணல், திமிலைத்துமிலன், யூ.எல். தாவூத், தெணியான், வை. அஹமத், கு.இராமச்சந்திரன், சேகு இஸ்ஸத்தீன் (வேதாந்தி), நிதானி, அருள் சுப்பிரமணியம், பெனடிக்ற்பாலன், கவிதா, செ. யோகநாதன், கரவையூர்க் கிழார். செங்கை ஆழியான், அன்பு முகைதீன், எம். ஏ. ரஹ்மான், முதலிய எழுத்தாளர்கள் பலர் இதில் அடங்குவர்.

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுக்கு மலர் இலவச விளம்பரம் வெளியிட்டது. ஒவ்வொரு ஆக்கத்துடனும் அதை எழுதியவரின் படமும் குறிப்புகளும் வெளியிடப்பட்டன. வாசகர்களை ஊக்குவிக்கும் வகையில் 'மாதாந்த விமர்சனம், 'ஓர் அனுபவம் 'எனக்குப் பிடித்த பாத்திரம் முதலிய அம்சங்கள் இடம்பெற்றன. வெற்றி பெற்றோருக்கு ஈழத்து நூல்கள் அனுப்பப்பட்டன. சினிமா விஷயங்கள் தவிர்க்கப்பட்டன. ஒவ்வொரு மாதமும் ஆணித்தரமான தலையங்கங்கள் எழுதப்பட்டன. அட்டைப்படம் மற்றும் உள்ளே சில படங்கள் முதலியவற்றை நானே வரைந்தேன். ஏனையவற்றை ரமணி, கிருஷ்ணா (திமிலைத்துமிலன்) முதலியோர் வரைந்தனர். ஒவ்வொரு மாதமும் கொழும்பு சென்று 'புளொக் செய்தல், விளம்பரம் சேகரித்தல், என்பன தனித்துவ முயற்சிகள் ஆகின. மலர் வெளிவந்த காலத்தில் அஞ்சலி, கற்பகம், செம்பருத்தி முதலிய பல ஈழத்து இலக்கிய ஏடுகள் வெளிவந்தன. எவ்வித பொறாமையும் இல்லாமல், அவற்றின் ஆசிரியர்கள் நட்புறவுடன் மலரை அணுகினர். பரஸ்பரம் நல்லுறவு வளர்ந்தது'. அன்புமணி தனது 'அன்பு வெளியீட்டகம் மூலம் ஒன்பது பிற எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டுள்ளார். மலர் சஞ்சிகை நடத்திய காலத்தில் செ. யோகநாதனின் 'ஒளி நமக்கு வேண்டும். அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது', முல்லைமணி வே. சுப்பிரமணியத்தின் 'அரசிகள் அழுவதில்லை' என்பன அவற்றுட் சிலவாகும்.

அன்புமணியின்; நூல்களாக, 'இல்லத்தரசி (சிறுகதை1980) வரலாற்றுச் சுவடுகள் (சிறுகதை1992) ஒரு தந்தையின் கதை (நாவல் 1989) ஒரு மகளின் கதை (குறுநாவல் 1995) தமிழ் இலக்கிய ஆய்வு (2007) எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் (2007), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (2007) ஆகியவை வெளிவந்துள்ளன.

அன்புமணி அவர்கள் 1964இல் ஆரையம்பதியைச் சேர்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியையான பார்வதியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஏழு மகன்களும் ஒரு புத்திரியும் பிள்ளைகளாயினர்.

அன்புமணியின் பணிகளைப் பாராட்டி பின்வரும் நிறுவனங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. (1)'தமிழ்மணி' இந்துசமய விவகார அமைச்சு 1992 (2) வடக்கு, கிழக்கு ஆளுனர் விருது 2001 (3) 'கலாபூஷணம்' – 2002 (4) 'பல்கலை வித்தகர் சிந்தனைவட்டம் 2008. இவை தவிர பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் பல்வேறுபட்ட இலக்கியச் சங்கங்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்தியும், கௌரவப் பட்டங்கள் வழங்கியும் கௌரவித்துள்ளன. ஞானம் சஞ்சிகையின் 69ஆவது இதழில் இவர் அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கப்பட்டார். அன்புமணி 12.01.2014இல் அமரரானார்.


## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

### 2025ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

**(B/62/2024)**

2025ஆம் வருடத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்து கொள்ள ஆர்வம் காட்டும் கீர்த்தி வாய்ந்த உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், வியாபாரிகள், ஒப்பந்தக்காரர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அ. பொருட்கள்**

1. வளிச்சீராக்கி உபகரணங்கள்
2. பெற்றரிகள் (வாகனம்/ மீள்சக்தியூட்டக்கூடியவை)
3. படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், டீ-சேர்ட்கள், வாகனங்களை பளபளப்பூட்டும் துணி (Polishing Cloths), பருத்திக் கழிவுகள் (Cotton Waste)
4. கணனி பாவனைப் பொருட்கள் (டோனர்கள், கார்ட்ரிஜ்கள், பென்டிரைவ்கள், ரிப்பன்கள் இன்னும் பல)
5. கணனிகள் மற்றும் வலையமைப்பு உபகரணங்கள்
6. கணனி துணைப்பாகங்கள் (அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், யூபீஎஸ்கள் இன்னும் பல)
7. அட்டைப் பெட்டிகள்
8. மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் (தொலைக்காட்சிப்பெட்டி, மின்விசிறிகள், கேத்தல்கள், கல்குலேட்டர்கள், கமராக்கள் இன்னும் பல)
9. மின்சார மற்றும் இலத்திரன் உருப்படிகள் மற்றும் துணைப்பாகங்கள் (சுவிட்சுகள், பல்புகள், வயர்கள் இன்னும் பல)
10. பொதுவான கனரகப் பொருட்கள் (செரமிக் ஓடுகள், குளியலறை பொருத்தல்கள் மற்றும் துணைப்பாகங்கள், போல்டுகள், நட்டுகள், ஜீ.ஐ. குழாய்கள், எம்.எஸ். பிளேட்டுகள், பீவீசீ குழாய்கள் மற்றும் பொருத்திகள், நிறப்பூச்சுகள் (அனைத்து வகையான நிறப்பூச்சுகள், எனாமல், இமல்ஷன் மற்றும் தினர் இன்னும் பல)
11. இலகுரக இயந்திராதிகள் மற்றும் கருவிகள்
12. அலுவலக உபகரணங்கள் (கூட்டல் பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், நகல் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள்)
13. அலுவலக தளபாடங்கள் (மரம்/ உருக்கு)
14. அலுவலக காகிதாதிகள் (பேனாக்கள், பென்சில்கள், கடித உறைகள், காகிதங்கள் இன்னும் பல)
15. தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்
16. மேற்கத்திய மருந்து வகைகள்
17. பிளாயஸ்டிக் பொதிகள் (பொலி கேன்கள்/ பொலித்தீன் பைகள், அலுபொய்ல் பைகள் மற்றும் பொலித்தீன் பை அச்சிடல்)
18. அச்சு வேலைகள்
19. சப்பாத்துகள் (பாதுகாப்பு சப்பாத்துகள், பம்ப் சப்பாத்துகள், வேலைத்தள பூட்கள், கம் பூட்கள், Sandals இன்னும் பல)
20. பாதுகாப்பு சீருடைகள் (தலைக்கவச வகைகள், இடுப்புப் பட்டி, பெஜ் முதலியன)
21. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (வேன், கார், ஜீப், லொறி, முச்சக்கர வண்டி)
22. டயர்கள் மற்றும் டியூப்கள்
23. சீருடைத் துணிகள் (காற்சட்டை மற்றும் சேர்ட் துணிகள்)

**ஆ. வேலைகள் / சேவைகள்**

1. கட்டிடங்கள், நுழைவுப் பாதை மற்றும் யார்ட் நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்த்தல், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பழைய இரும்புத் தொட்டிகளை அகற்றுதல், தொட்டிகளை அமைத்தல் குழாய் பதித்தல் மற்றும் இரண்டு (02) மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த பெறுமதி கொண்ட மற்ற சிவில் பொறியியல் வேலைகள்.
2. வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு (மோட்டார் வாகனங்களுக்கான பொறிமுறை / மின்னியல் / தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் / வாகன வளிச்சீராக்கி / இருக்கை மேலுறை இடுதல்/ மற்றும் உட்புற பற்றி நிற்கும் வேலைகள் (அப்ஹோல்ஸ்டரி) / மோட்டார் வானங்களுக்கான கெசட் இயந்திரம்/ ரிவேஸ் கெமரா பொருத்தல்/ சக்கர சமச்சீராக்கள் வேலைகள்)
3. அனைத்து வகையான மோட்டார் வாகனங்களுக்கான நாளாந்த சுத்திகரிப்பு வேலைகள் (பூரணமான/ அரைவாசி)
4. சின்க் / அலுமினிய கட்டமைப்பு வேலைகள் (உள்ளக பகுதி பிரிப்புகள் - கதவு, ஜன்னல் மற்றும் சீலிங்)
5. காணி மற்றும் கட்டிடங்களுக்கான அளத்தல் வேலைகள்
6. மத்திய வளிச்சீராக்கி முறைமையின் சேர்விஸ் வேலைகள்
7. ஸ்பிலிட் வகையான வளிச்சீராக்கி முறைமையின் சேர்விஸ் வேலைகள்
8. நிலச்சீராக்கம் / இன்டர்லொக் பதித்தல்
9. கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
10. தீ மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள்
11. நிலக்கீழ் தாங்கிகளைச் சுத்தம் செய்தல் (300 IG, 5000 IG)
12. விளம்பரப்படுத்தல் (விளம்பரங்கள் மற்றும் மேம்படுத்தல் பொருட்கள், நிகழ்வு முகாமைத்துவம் மற்றும் பொதுமக்கள் உறவு, வடிவமைப்பு, அச்சிடல் வேலைகள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல்)

**விண்ணப்பதாரர்களுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

a) பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள், அதிகாரம் வாய்ந்த விற்பனையாளர், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மட்டுமே விலைகள் கோரப்படும். எவ்வாறாயினும் ஏனைய தேவையான வேளைகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்து கொள்ளப்படாத அதிகாரம் வாய்ந்த விற்பனையாளர், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

b) 2024ஆம் வருடத்திற்காக தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள வழங்குநர்கள், அதிகாரம் வாய்ந்த விற்பனையாளர், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் 2025ஆம் வருடத்தின் பொருட்டு பதிவுசெய்து கொள்வதற்காக மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.

c) விலைகளைச் சமர்ப்பிக்காத மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் அல்லது உரிய தரமற்ற பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்படும்.

d) மேல் மாகாணத்தில் பதிவு செய்துகொண்டுள்ள கராஜ் மற்றும் வாகன சேவை நிறுவனங்கள் மாத்திரம் பி – 2,3 (கராஜ் மற்றும் வாகன சேவை) பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும்.

e) சகல வழங்கல் மற்றும் சேவைகளுக்காக முப்பது (30) நாட்களுக்குள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் / சமர்ப்பித்தல்**

a) வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது கடிதத் தலைப்பில் முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியம்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன் தாம் பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் உருப்படிகளை வெவ்வேறாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

b) விண்ணப்பப் படிவங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம், முதலாம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

c) விண்ணப்பப் படிவங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் www.ceypetco. gov.lk/ public tenders/registration forms எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

d) விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி: 2024.11.14

e) பெறுமதி சேர் வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் ஏனைய இயைபுடைய ஆவணங்கள் சகிதம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024 நவம்பர் மாதம் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்), பெறுகை மற்றும் களஞ்சியங்கள் பிரிவு, முதலாம் மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இல. 609, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

f) தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள்**

a) வழங்கல் மற்றும் சேவைகளுக்கு பதிவு செய்துகொள்வதற்கு ஒரு உருப்படிக்கு மீளளிக்கப்படாத 300.00 ரூபா செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட ஒவ்வொரு உருப்படிக்கும் 300.00 ரூபா வீதம் செலுத்துதல் வேண்டும்.

b) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு கொடுப்பனவைச் செலுத்தலாம்.

**ஏதாவது தெளிவுபடுத்தல்களை 0117-296333/4 என்ற தொலைபேசி இலக்கம் மற்றும் (தொலைநகல் 0112-106769) அல்லது supplies@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக என்னை அழையுங்கள்.**

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்),
பெறுகை மற்றும் களஞ்சியங்கள் பிரிவு,
முதலாம் மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 09.**



## கண்டி மாநகர சபை

### 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

1. ஆயுர்வேத மருந்து வகைகள்
2. மேல்நாட்டு மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
3. ஆய்வுகூட உபகரணங்கள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள்
4. தீயணைப்புக் கருவிகள் (பொருத்துதல் உட்பட)
5. பொதுவான களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜீஐ குழாய்கள், கம்பிகள், குளியலறை மற்றும் மலசலகூட உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் நீர்த்தாங்கி, கொம்போஸ்ட் பீப்பாய்கள், கூரைத் தகடுகள்)
6. நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள்
7. சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் (ஈர்க்கிள், தும்புத்தடி, பிரம்புக் கூடைகள், பிளாஸ்டிக் குப்பைக் கூடைகள், விம், ஹார்பிக், சவர்க்கார வகைகள், பைனோல், கையுறைகள் போன்றன)
8. காலணிகள், சப்பாத்து, காலுறைகள் போன்றன
9. சீருடைக்குத் தேவையான துணி வகைகள் மற்றும் டீ சேர்ட்
10. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள்
11. டயர், டயர் டியூப் மற்றும் பெட்டறி (வாகனங்களுக்கானவை)
12. வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (வேன், மோட்டார் சைக்கிள், டிராக்டர், கல் உருளை, டிப்பர், முச்சக்கர வண்டி, பெகோ உட்பட சகல வாகனங்களுக்குமான பாவித்த மற்றும் புதிய உதிரிப்பாகங்கள்)
13. அலுவலக மின் உபகரணங்கள் (கூட்டல் இயந்திரம், கேத்தல், மின் விசிறிகள்)
14. CCTV கெமரா, விரல் ரேகை பதிவு இயந்திரம் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள்
15. அலுவலக உபகரணங்கள் மரம் மற்றும் உருக்குத் தளபாடங்கள் (ராக்கைகள் / அலுமாரிகள் / மேசை / பைல் கெபினெட்டுகள், பிளாஸ்டிக் கதிரைகள், பல்லூடக புரஜெக்டர் இயந்திரங்கள் போன்றன)
16. கணனி இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், நகல் பிரதி இயந்திரங்கள்
17. மின்சார சேவைகளை வழங்குவதற்குத் தேவையான துணைப்பாகங்கள் (வயர் / சுவிட்ச் / பல்ப் / பிளக் போன்றன)
18. அலுவலக காகிதாதிகள், கணனி ரிபன் கார்ட்ரிச், டோனர் போன்றன
19. அச்சு வேலைகள் (அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் புத்தகங்கள், திகதி முத்திரைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள்)
20. கட்டிடப் பொருட்கள் (மணல் / கல் / மெட்டல் போன்றன)
21. ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், எல்லைக் கற்கள், சீமெந்து புளொக் கற்கள், கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள்
22. சீமெந்து, கொங்கிறீட் முன் கலவை (Ready mix), பிரீமிக்ஸ் போன்றன.
23. அரியப்பட்ட மரம் (பலகை, தீராந்தி போன்றன)
24. உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள்
25. இமல்ஷன் தார்
26. உரங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் (இரசாயன உரங்கள் மற்றும் மிருக உரங்கள்)
27. நீரை சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்கள் (ஹைட்ரேட் லைம், அலுமினியம் சல்பேற், குளோரின், டீ.சீ.எல் தூள்கள் போன்றன)
28. நீரிறைக்கும் இயந்திரத்திற்கான பெயாரிங்
29. பீவீசீ உபகரணங்கள் (சீ.ஐ.ஜீ.ஐ. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்)
30. நீர் மானிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் / நீர் மோட்டர்கள், நீரைச் சுத்திகரிக்கும் மின் உபகரணங்கள் / நீர் சுத்திகரிப்பு முறைமைக்குத் தேவையான உபகரணங்கள் போன்ற பொருட்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள்
31. புத்தகங்கள் / புதினப் பத்திரிகைகள் / சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல்
32. பாதுகாப்பு உபகரணங்கள் (அங்கிகள், ஹெல்மெட் போன்றன)
33. தோட்டத்திற்குத் தேவையான மர வகைகள், மலர்க் கன்றுகள் மற்றும் புல் பற்றைகள்
34. மேற்கவிகைகள், கூடாரத் துணிகள் மற்றும் திரைச்சீலைகள் போன்றன.
35. பதக்கங்கள், கவசங்கள், பித்தளை பெயர்ப் பலகைகள், விருதுகள்
36. மின்சார வலுசக்தி தொகுதிகள் (மின்சார வாள், டிரில் போன்றன)

**02. சேவைகள்**

37. நீர்ப் பம்பிகள், நீர் மோட்டர்கள், நீரைச் சுத்திகரிக்கும் முறைமைகளின் திருத்தவேலைகள்
38. ரோணியோ இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
39. கணனி இயந்திரங்கள் மற்றும் அச்சுப்பொறிகளின் திருத்தவேலைகள்
40. கதிரை பின்னுதல் மற்றும் குஷன் செய்தல் மற்றும் திருத்தவேலைகள்
41. விரல் ரேகை பதிவு இயந்திரம், CCTV கெமரா திருத்தவேலைகள்
42. வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (டிராக்டர் / பயணிகள் வாகனங்கள் / டிப்பர் / கம்பெக்டர் வாகனம் / மரம் வெட்டும் இயந்திரம் போன்றன)
43. டயர்களை மீள நிரப்புதல் மற்றும் பழைய டயர்களைக் கொள்வனவு செய்தல்
44. இயந்திரங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்
45. சம்பத் பியஸ பொருட்களை விற்பனை செய்தல் (காட்போர்ட், இரும்பு, பித்தளை, பிளாஸ்டிக் மற்றும் துண்டாக்கப்பட்ட பிளாஸ்டிக் போன்றன)
46. மேற்கவிகைகள், கதிரைகள், பீங்கான்கள் போன்ற உற்சவப் பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
47. வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள்
48. ஏனையவை.

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவையின் பொருட்டும் வெவ்வேறாக பதிவு செய்து கொள்வதற்காக ஒரு உருப்படியின் பொருட்டு 2360.00 ரூபா வெட் வரி உள்ளடங்கலான கட்டணம் அறவிடப்படும். இதற்கு பணம் செலுத்துவதற்குத் தேவையான விபரங்கள் பின்வருமாறாகும். 2024.10.02ஆம் திகதி முதல் 2024-11-04ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மாநகர சபையின் வழங்கல் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லாவிடில் எமது http//kandy. mc.gov.lk எனும் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-11-04ஆம் திகதியாகும். விண்ணப்பப் படிவத்துடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் வேண்டுகோள் கடிதம் மற்றும் வெட் வரி செலுத்துபவரானால் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| பணம் செலுத்தக்கூடிய வங்கி | - இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் |
| கணக்கின் பெயர் | - மாநகர ஆணையாளர், மாநகர சபை, கண்டி |
| கணக்கிலக்கம் | - 0000032764 |
| | வங்கி பற்றுச்சீட்டில் உள்ள ''வைப்புத் தேவைப்பாடு'' எனும் பகுதியில் Supp/Reg 2025 எனக் குறிப்பிடவும். |

மேற்கூறிய விபரங்களைக் குறிப்பிட்டு ரொக்கப் பணமாக மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கணக்காளர் (வழங்கல்), மாநகர சபை, கண்டி எனும் முகவரிக்கு 2024-11-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வருடாந்த வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2025 எனக் குறிப்பிடுதல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

i. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு புறம்பாக தேவையான வேளைகளில் ஏனைய பெறுகை முறைகளைக் கையாண்டு பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்த சபைக்கு / மாநகர சபை ஆணையாளருக்கு உண்டு.

ii. தேவையான வேளைகளில் மாதிரிகளை சமர்ப்பிக்காத மற்றும் தருவித்தற் கட்டளையின் பிரகாரம் உரிய நேரத்திற்கு, தரம் மற்றும் உயர்ந்த குணவியல்புகளைக் கொண்ட பொருட்களை வழங்காத வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.

iii. பொருட்கள் வழங்கிய நாள் முதல் குறைந்தபட்சம் 45 நாட்களுக்கான கடன் வசதியை வழங்குநர்கள் வழங்குதல் வேண்டும்.

iv. உரிய வகையிலான தரம் மற்றும் குணவியல்புகளைக் கொண்ட இயைபுடைய விபரக்குறிப்புகளுக்கு அமைவாக பொருட்களை வழங்குதல் வேண்டும். எந்தவொரு வேளையிலும் வழங்குநர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து 081-2232071 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம். வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மாநகர ஆணையாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**ஏ.எம்.எம். இந்திகா குமாரி அபேசிங்க,
மாநகர ஆணையாளர்.**

2024-09-24ஆம் திகதி
**மாநகர சபை, கண்டி.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## இணைப்பாக்கம் உள்ளடங்களான அபிவிருத்தி செயற்றிட்டம்

## விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| LK-RDA-405500-CW-RFB | வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழுள்ள சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு - மருதன்கேணி தெல்லிப்பளை, உடுவில், பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் கராச்சி, மற்றும் பூநகரி பிரதேச செயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் என்பவற்றின் கீழுள்ள 37.60 கி.மீ கிராமிய வீதிகளின் புனர்நிர்மாணம் / மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு. |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 30 செப்டெம்பர் 2024 தொடக்கம் 30 ஒக்டோபர் 2024 வரை www.rda.gov.lk & www.mohsl.gov.lk என்ற RDA இன் இணையதளங்களைப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக**
**அமைச்சக கொள்முதல் குழு**

---

# கேள்வி அறிவித்தல்

## புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தில் நிறுவப்பட்டுள்ள ஆனால் பாவிக்கப்படாத பின்வரும் உருப்படிகளை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பொருள் வகை |
|---|
| நிமிடத்திற்கு 60 லீற்றர் நீரிறைக்கக்கூடிய பம்பி சகிதம் (with automatic diesel gun and diesel meter) 7000 லீற்றர் எரிபொருள் களஞ்சியப்படுத்தக் கூடிய தாங்கி (solex) |

மேற்கூறிய உருப்படியைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் 5,000.00 ரூபா மீளளிக்கப்படும் வைப்பு மற்றும் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா தொகையை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் தலைமை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் பெறுகைப் பிரிவிலிருந்து குறித்த விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2024-09-30ஆம் திகதி முதல் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குறித்த உறுப்படியை பிட்டகோட்டேயில் அமைந்துள்ள தலைமை அலுவலக வளவில் பரீட்சித்துப் பார்க்கலாம். இதில் ஆர்வம் காட்டும் தரப்பினர் குறித்த விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து 2024-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் அந்த விலைமனுக்களை ''தலைவர், பெறுகைக் குழு, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம், இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள குறித்த கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் டீசல் தாங்கி மற்றும் எரிபொருள் பம்பிக்கான விலைமனு எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

---

# விலைமனுக்கோரல் அழைப்பு

## மேல் மாகாண கல்வித் திணைக்களம்

### வினாத்தாள் மற்றும் அது சார்ந்த எழுது பொருட்களை கணினிப்படுத்தல், அச்சு மற்றும் விநியோகித்தலுக்கான விலைமனுக் கோரல்

### ஆண்டு இறுதி மதிப்பீடும் – 2024

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்வி பணிப்பாளரின் பெறுகைக் குழுவினால் மேல் மாகாணத்திற்குள் அமைந்துள்ள பதிவு செய்யப்பட்ட அச்சு நிறுவனங்களிடம் இருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி மு.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

| திட்டம் | உருப்படி | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) | விலைமனு பிணை (ரூபா) (பணமாக அல்லது பிணை மூலம்) |
|---|---|---|---|
| P1 | 06,07,08 மற்றும் 09 ஆம் தரங்களின் ஆண்டிறுதித் தவணைப் பரீட்சை வினாத்தாள் மற்றும் அது சார்ந்த எழுது பொருட்களை கணினிப்படுத்தல், அச்சு மற்றும் விநியோகித்தல் - 2024 | 10,000.00 | 470,000.00 |
| P2 | 10 மற்றும் 11 ஆம் தரங்களின் ஆண்டிறுதித் தவணைப் பரீட்சை வினாத்தாள் மற்றும் அது சார்ந்த எழுது பொருட்களை கணினிப்படுத்தல், அச்சு மற்றும் விநியோகித்தல் - 2024 | 10,000.00 | 430,000.00 |

- ஒவ்வொரு திட்டத்திற்காகவும் வெவ்வேறாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியான விலைமனுக் கோரல் நடைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

2. மேல் குறிப்பிடப்பட்ட விலைமனுக்களுக்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமை பெற்ற விலைமனுதாரர்களுக்கு மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம் II) இடமிருந்து (தொலைபேசி இலக்கம்: 0112875722) மேலதிக விபரங்களை பெற முடியும் என்பதோடு, 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் 2024.10.23 ஆம் திகதி வரை கடமை நாட்களில் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை அலுவலக நேரங்களில் விலைமனுக் கோரல் ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
3. ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு, நிர்வாகப் பிரிவுக்கு (இரண்டாவது மாடி) விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத தொகையை மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நிர்வாகப் பிரிவுக்கு சமர்ப்பித்த பின் 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் 2024.10.23 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை குறித்த விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
4. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று (Pre-Bid Meeting) 2024.10.16 ஆம் திகதி மு.ப. 10.00க்கு மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் நான்காவது மாடியின் கேட்போர் கூடத்தில் நடைபெறுவதோடு, ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு இதற்காக பங்கேற்க முடியும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2024 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர், மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மூன்றாவது மாடியில் தலைமை கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கேட்பு பெட்டிக்கு இடுவது அல்லது மேல் மாகாண கல்வித் திணைக்களம், இல. 89, ரன்மகபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் 2024.10.24 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு தனிப்பட்ட முறையில் வருகை தந்து பங்கேற்கும் விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட வகையில் விலைமனு பிணையை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. இந்த விலைமனுக் கோரலை, இரத்துச் செய்தல் அல்லது வேறு ஏதாயினும் மாற்றங்கள் செய்வது தொடர்பிலான அதிகாரம் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழு வசமானது.

**பீ.ஆர். தேவபந்து**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மேல் மாகாண கல்வித் திணைக்களம்,**
**இலக்கம் 89, 'ரன்மகபாய', பத்தரமுல்ல.**
2024 செப்டெம்பர் 30 அன்று

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# கேள்விக்கான அழைப்பு (IFB)

| உருப்படி இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|
| 01 | அதிவேக வீதி செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் கடவத்த முதல் கொடகம வரையான பகுதியில் மின் பராமரிப்பு விடயங்களுக்காக தொழிலாளர்களை (தகைமை கொண்ட மின் தொழில்நுட்பவியலாளர்கள்) ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்<br>ஒப்பந்த இல. RDA/EOM&M/ELEMNT/SE&OCH/2024/40 |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 செப்டெம்பர் 30 முதல் 2024 ஒக்டோபர் 21 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அதிவேக வீதி செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும்**
**முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

---

# 2025ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல்

## ஆணமடுவ பிரதேச சபை

2025ஆம் ஆண்டில் பின்வரும் பதார்த்தங்களை மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள தகைமை பெற்ற வழங்குநர்களிடமிருந்து மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள்/தளபாடங்கள்/உருக்குத் தளபாடங்கள்/பிளாஸ்டிக் பண்டங்கள்
02. எழுது கருவிகள் மற்றும் கடதாசிகள்
03. மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்கு உபகரணங்கள்
04. கொங்கிறீட் பண்டங்கள்/ஹியூம் குழாய்கள்/சீமெந்து கல்
05. டயர்/டியூப்/பெற்றறிகள்
06. வாகன இயந்திராதிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்கள்
07. கணனிகள் மற்றும் கணனி துணை உறுப்புக்கள்
08. மின்னியல் தட்டச்சுகள்/தட்டச்சு பொறிகள்/ நிழற்படபிரதியிடும் இயந்திரங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ டுப்ளோ இயந்திரங்கள்
09. விளையாட்டுப் பண்டங்கள்/ விளையாட்டு உபகரணங்கள்
10. சீருடைகள்/பாதணிகள்/திரைச்சீலைகள்
11. நூலகப் புத்தகங்கள்/சஞ்சிகைகள்/ செய்தித்தாள்கள்
12. கல்/மணல்/சீமெந்து/ செங்கற்கள்/கருங்கல்/கண்ணாடி உற்பத்திகள்/அலுமினியம் கட்டமைப்புக்கள்/ இரும்பு உட்பட கட்டிடப் பொருட்கள்
13. தார்/ சரளைக்கற்கள் உட்பட வீதிப்பராமரிப்புப் பதார்த்தங்கள்
14. முன்பள்ளி விளையாட்டு உபகரணங்கள்
15. அறிவித்தல் பலகைகள்/கட்டவுட்/ பெனர்கள்/ ஸ்டிக்கர்கள்
16. கூட்டுமாருகள்/ தூரிகைகள்/ கூடைகள்/ கால்துடைப்பான்கள்/ கிருமி நாசினி கழுவும் திரவங்கள்
17. செடிகள்/ பசளை/ எண்ணெய் உட்பட பூங்கா அலங்கரிப்புப் பதார்த்தங்கள்
18. பாடசாலைப் புத்தகங்கள்/ பாடசாலைப் பைகள்/ பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள்
19. கைத்தொழில் நிர்மாணத்திற்கான துணை உறுப்புக்கள்
20. மின்பிறப்பாக்கி இயந்திரங்கள்/புல் வெட்டும் இயந்திரங்கள்/ மரம் வெட்டும் இயந்திரங்கள்
21. பொலித்தீன்/அச்சிட்ட பொலித்தீன்/ உறைகள் மற்றும் பசளை உறைகள் (பொலிசெக்) வழங்கல்
22. சமையல் எரிவாயு (GAS) மற்றும் எரிவாயு சிலிண்டர்கள்
23. வெட்டப்பட்ட மரங்களை வழங்கல் (பலகை/பராள/ ரீப்ப போன்றவை)

**சேவைகளை வழங்கல்**

1. அச்சு வேலைகளை வழங்கல்
2. மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கல்
3. வாகனங்களிற்கான சேர்விஸ் வழங்கல்
4. வாகன இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களைப் பழுதுபார்த்தல்
5. கணனி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல்/ வலையமைப்பை ஏற்படுத்தல்
06. டயர் மீள் நிரப்பல்
07. நில அளவையாளர் சேவைகளை வழங்கல்
08. வளிச்சீராக்கி இயந்திரங்களைப் புதுப்பித்தல்/ தீயணைப்பு உபகரணங்கள்
09. கட்டிடங்களைப் புதுப்பித்தல்
10. வீச்சுக் கத்தி/ கத்திகள்/முள்ளுகள்/ இரேக்கைகள்/ குப்பைத் தொட்டிகள் உட்பட உபகரணங்கள் மற்றும் புதுப்பித்தல்
11. மோட்டார் கிரேடர்/ பெக்கோ இயந்திரங்கள்/ வீதிப்பராமரிப்புக்கான சேவைகளை வழங்குதல்
12. பயனிகள் போக்குவரத்து/ நிர்மாணப்பண்டங்களை எற்றி இறக்கல் உட்பட போக்குவரத்து சேவைகளை வழங்கல்
13. உள்ளகத் தொலைபேசி தொகுதி CCTV கெமராத் தொகுதிகளைப் புதுப்பித்தல்
14. கம்மல்வேலைகள் சார்ந்த சேவைகளை வழங்கல்

**நிபந்தனைகள்**

01. அதற்கான விண்ணப்பங்களை 2024.12.20 இற்கு முன்னர் 'செயலாளர், பிரதேச சபை, ஆணமடுவ' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் முடியும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2025ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
02. அனைத்து விண்ணப்பங்களுடனும் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 உடன் பதிவுக்கட்டணம் ஒன்று அனுப்பப்படல்வேண்டுமென்பதுடன் இதற்காக காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம் பணம் செலுத்தாலாமென்பதுடன் அவை 'செயலாளர், பிதேச சபை, ஆணமடுவ' என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
03. பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து இதற்காக விலைமனுக் கோரப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பதிவு செய்யப்பட்டிராத வழங்குநர்களிடமிருந்தும் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை சபைக்கு உரித்தாகும். (பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.)
04. பல் வகைப் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உரியவாறு வழங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் சபைக்கு உரித்தாகும்.
05. கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத்தவறும் மற்றும் கட்டளையிடப்பட்டதும் பண்டங்களை வழங்கத் தவறும் வழங்குநர்களினதும் உரிய தரத்தில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்களினதும் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டு அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படுவர்.
06. பதிவுக்கான விண்ணப்பப்படிவங்களைத் தாமாகவே தயரித்துக் கொள்ளல்வேண்டும்.
07. மேற்படி ஒவ்வொரு வகுதிகளிற்கும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவற்றிற்கான தனித்தனியான கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

**தகவுத் திறன்கள்**

01. கூட்டுத்தாபனமொன்றெனின் அதற்கான சான்றிதழ் (சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்)
02. தனியார் வியாபாரமொன்றெனின் அதற்கான பதிவுச் சான்றிதழ் (சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்)
03. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பதிவுச் சான்றிதழ் (சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)
04. பெசேவ (VAT) செலுத்துபவராயின் அதற்கான பதிவுச் சான்றிதழ்/சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)

**எச்.ஜே.எம்.எம்.எஸ். ஜயசுந்தர**
**செயலாளர்,**
**ஆணமடுவ பிரதேச சபை.**
2024.09.19

**ஆணமடுவ பிரதேச சபை அலுவலகத்தில்**
**தொ.பே. 032-2263275**

---

## கொபெய்கனே பிரதேச சபை 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட வரைவு

கொபெய்கனே பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆவணம் 2024 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 25 ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் கொபெய்கனே பிரதேச சபை அலுவலகத்தில் பொதுமக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகளின் 10.2 (ஆ) ஆம் விதி பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ஏ.எஸ்.எம். பிரனாந்து**
**செயலாளர்**
**கொபெய்கனே பிரதேச சபை.**

**கொபெய்கனே பிரதேச சபை அலுவலகம்,**
**கொபெய்கனே,**
**2024 செப்டெம்பர் 25 ஆம் திகதி**

---


OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements**
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Gampaha - 033 22 23 464**
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

**Wattala - 011 2 937 989**
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

**Nilpanagoda - 077 8 627 321**
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

**Wattala - 011 2 932 511**
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

**Kochchikade - 031 22 78 359**
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

**Batuwatta - 071 8 921 271**
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

**Dunagaha - 077 3 517 752**
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

**Ja-Ela - 011 2 947 379**
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

**Negombo - 071 480 43 55**
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

**Katunayake - 077 4 115 998**
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

**Kandana - 011 2 233 651**
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

**Minuwangoda - 011 2 297 881**
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

**Katana - 031 2 241 687**
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

**Ja-Ela - 071 8 571 713**
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

**Kotugda - 011 2 290 815**
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

**Negombo - 071 552 22 40**
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

**Udugampola - 071 4 554 696**
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

**Ganumulla - 076 2 217 181**
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

**Indigolla - 033 5 613 736**
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

**Kelaniya - 011 2 947 379**
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

**Malwana - 011 2 487 560**
1461 - G. Shamila Vithana - No. 549/5, 'Dilsha' Walgama, Malwana.

**Kadawatha - 011 2 902 092**
1434 - M. M. S. Damayanthi Herath - Adz soon Advertising, 137/1, Kandy Road, Kadawatha.

**Dompe - 071 7 186 955**
1498 - S. A. C. Senadheera - 'Jayanthi', Dompe.

**Kiribathgoda - 077 3 719 282**
1499 - P. A. Priyani Peliarachchi - New Samanala Book Shop, No. 181, Kandy Road, Kiribathgoda.

**Yakkala - 077 3 475 696**
1561 - W. Mudalige - Ruhunu Hardware Stores, No. 50 A, Kirindiwela Road, Yakkala.

**Kirindiwela - 077 2 047 350**
1607 - D. M. Sarath Premathilake - Chandana News Center, Radawana Road, Kirindiwela.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**



To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz Auto Focus



Magazine Issued with Sunday Observer

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want



- Auto Focus

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com



The Housewives' companion
Classifieds on
Daily News

# NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
### VACANCIES

The University of Vavuniya will entertain applications from suitably qualified persons for the following posts up to 16th October 2024.

1. Director / Physical Education (Contract Basis)
2. Chief Security Officer (Contract Basis)
3. Assistant Registrar (Contract Basis)
4. Assistant Internal Auditor (Contract Basis)
5. Assistant Registrar / Legal & Documentation (Contract Basis)

**Common Facts :**
Appointment will be made initially for a period of six months and extendable for a further period.

**Salary :**
- Director / Physical Education (Contract Basis) - Rs. 118,700/- p.m. (Fixed)
- Chief Security Officer (Contract Basis)
- Assistant Registrar (Contract Basis)
- Assistant Internal Auditor (Contract Basis)
- Assistant Registrar / Legal & Documentation (Contract Basis)

} Rs. 96,200/- p.m. (Fixed)

**Method of Recruitment :** Selection by a structured interview

Application Form and other details are made available in the University website.

Applicants who are interested in the above post are requested to visit University of Vavuniya Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**REGISTRAR / UNIVERSITY OF VAVUNIYA**
**27.09.2024.**

# பெறுகை அறிவித்தல்
## லக்கல பள்ளேகம பிரதேச சபை
### தேசிய போட்டி ரீதியில் விலைமனு கோரல் (NCB)

1. லக்கல பள்ளேகம பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தகுதிகளைக் கொண்டுள்ள நிர்மாண விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன என்பதுடன் மேற்கூறிய வேலைகள் அதற்கு இயைபான பொறியியல் அளவுப்பத்திர தொகை மற்றும் ஒப்பந்தக் காலம் என்பன பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| தொ. இல. | வேலை | பொறியியல் அளவுப்பத்திர சராசரி மதிப்பீடு (வெட் இன்றி) ரூபா | CIDA/ ICTAD பதிவு | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி அல்லது ரொக்கப் பணம் | | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ரொக்கப் பணமாக வைப்புச் செய்ய வேண்டிய பெறுமதி ரூபா | செல்படியாக வேண்டிய திகதி | | |
| 01. | கிரி அம்மா உல்பத்தவில் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல் (வாகனங்கள் நிறுத்தும் முற்றவெளி, இரண்டு பிளாஸ்டிக் நீர்த் தொட்டிகளை வைப்பதற்கான ஆதாரமொன்றை நிர்மாணித்தல் மற்றும் வீதிக்கு கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்தல்) | 5.0 மில்லியன் | C6 C7 | 75000.00 | 37500.00 | 2025-02-04 | 45 நாட்கள் | 2500.00 |

2. குறித்த வேலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நாளதுதரவேற்றம் (CIDA) செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

3. இது தொடர்பான மேலதிக விபரங்களை லக்கல பள்ளேகம பிரதேச சபை அலுவலகத்திலிருந்து (தொலைபேசி இலக்கம் - 0662275075) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்த அலுவலகத்திலேயே குறித்த ஆவணங்களை 2024.09.30ஆம் திகதி முதல் 2024-10-21ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. உரிய விலைமனு ஆவணக் கட்டணத்தை லக்கல பள்ளேகம பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை லக்கல பள்ளேகம பிரதேச சபை அலுவலகத்திற்குச் சமர்ப்பித்ததன் பின் விலைமனு ஆவணங்களை 2024-09-30ஆம் திகதி முதல் 2024-10-21ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

5. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-10ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு லக்கல பள்ளேகம பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் '' கிரி அம்மா உல்பத்தவில் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல் - CPC/LPPS/NCP/2024/01" எனக் குறிப்பிட்டு 2024-10-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை லக்கல பள்ளேகம பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலை கேட்புப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, லக்கல பள்ளேகம பிரதேச சபை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்த நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

7. மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு லக்கல பள்ளேகம பிரதேச சபை செயலாளரின் பெயரில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியத்தில் (CGF) மூலம் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறி அல்லது லக்கல பள்ளேகம பிரதேச சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை சகல விலைமனுவுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விலைமனு ஆவணங்களில் கேட்கப்பட்டுள்ள தொழில்நுட்ப, நிதி மற்றும் ஏனைய தகைமைகள் சகிதமான ஆவணங்களின் பிரதிகளுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. உரிய தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்திராத விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

10. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. இந்த விலைக்கோரல் அழைப்பு தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் செயற்படுத்தப்படும்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**லக்கல பள்ளேகம பிரதேச சபை,**
**லக்கல.**

**தொலைபேசி இல. 066-2275075**
**மின்னஞ்சல் முகவரி: pslaggalapallegama@gmail.com**

2024-09-30.

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch
Acc. No. 000000377

# இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்
### முடிவுறுத்தல் திகதி: 2024-10-30

2025ஆம் வருடத்தில் பின்வரும் வகுதிகளையுடைய பொருட்கள் மற்றும் சேவைகளை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்காக அரச நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள், இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் ஏனைய புகழ்வாய்ந்த கம்பனிகள் அவர்களை பதிவு செய்வதற்காக அழைக்கப்படுகின்றனர்.

**பண்டங்கள் மற்றும் பொருட்கள் :**
**உருப்படி**

**இல. உருப்படி**
01) கட்புல / செவிப்புல உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
02) ஒளிபரப்பிகள் மற்றும் தொடர்பாடல் வாங்கிகள் மற்றும் துணைப்பாகங்கள்
03) வீடியோ புகைப்படக்கருவிகள் மற்றும் துணைப்பாகங்கள்
04) மின்னொளி வழங்கும் உபகரணங்கள் மற்றும் மின்குமிழ்கள்
05) செவிப்புல / கட்புல ஒலிநாடாக்கள் / இறுவட்டு / டிவிடி / விசிடி / XDCAM Discs
06) பிலிம்கள் மற்றும் புகைப்படப் பொருட்கள்
07) ஒப்பனைச் சாதனங்கள்
08) கிரபிக் பொருட்கள் மற்றும் படம்வரைதல் உபகரணங்கள்
09) கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள்
10) நிழற்படபிரதியாக்கல் இயந்திரங்கள் மற்றும் ஏனைய வகை அலுவலக இயந்திரங்கள்
11) அலுவலக உபகரணங்கள் மற்றும் இணைப்புகள்
12) மரத் தளபாடங்கள் (அலுவலக மற்றும் வீட்டுப்பாவனை) / தளபாடங்களை ஒழுங்குமுறையில் நிறுவுதல்
13) மின்னியல் பொருட்கள் மற்றும் கேபிள்கள்
14) TV / VCR உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள்.
15) மின்சார விசிறிகள் உட்பட இலத்திரனியல் / மின்சார பாவனைப் பொருட்கள்
16) தொலைபேசி உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்.
17) தீயணைப்பு மற்றும் இடர்காப்பு உபகரணங்கள்.
18) அரியப்பட்ட பலகை / ஒட்டுப்பலகை.
19) கட்டிடப் பொருட்கள்.
20) வாகனங்களுக்கான டயர்கள் மற்றும் டியுப்புகள்
21) வாகனங்கள் / UPS இன்னும் பலவற்றிற்கான மின்சேமிப்புக்கலங்கள்.
22) கணனி காகிதாதி, ரிப்பன்கள் மற்றும் கார்ட்ரிச்கள்
23) காகிதாதி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள்
24) அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டும் வேலைகள்
25) டிஜிட்டல் அச்சடித்தல் (Flex மற்றும் ஸ்டிக்கர்கள்)
26) கனரகப் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுகள்
27) இசைக்கருவிகள் (மேலைத்தேயம் மற்றும் கீழைத்தேயம்)
28) பாதுகாப்பு உபகரணங்கள்.
29) உள்ளக அலங்கரிப்புகள்.
30) சீருடை பொருட்கள்.
31) நினைவுச்சின்னங்கள் மற்றும் பதக்கங்கள்.
32) வளிச்சீராக்கிகள், கொம்ப்ரஸர்கள் மற்றும் வளிச்சீராக்கி உதிரிப்பாகங்கள்.
33) அனைத்து வகையான பெயாரிங்ஸ்.
34) இரசாயனங்கள் - (கொ-கொண்டக் (Co-Contact) சுத்தம் செய்யும் சாதனம் மற்றும் ஏனைய சுத்தம் செய்யும் இரசாயனங்கள்)
35) அனைத்து வகையான UPS
36) ட-சேட்டுக்கள், தொப்பிகள், கொடிகள் மற்றும் பதாகைகளை வழங்குதல்
37) வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல்

**சேவைகள் மற்றும் ஒப்பந்தங்கள்**

**பிரிவு "A" - நிகழ்ச்சிகளுக்கான பொருட்களின் வழங்கல் (வெளிநாடு மற்றும் உள்ளூர்)**
i) பண்பியல்பு படங்கள் / திரைப்படங்கள்.
ii) உயிரோட்டமுள்ள தொடர்கள் நிகழ்ச்சிகள்
iii) சிறுவர்க்கான தொடர்கள்.
iv) விளையாட்டுத்துறை நிகழ்ச்சிகள்.
v) நகைச்சுவை நிகழ்ச்சிகள்
vi) துப்பறியும் தொடர்கள்.
vii) வீரச்செயல்கள் தொடர்கள்.
viii) இசை நிகழ்வுகள் / நிகழ்ச்சிகள்
ix) ஏனைய விஷேட நிகழ்ச்சிகள்.

**பிரிவு "B" நிர்மாண வேலைகள் :**

| # வகுதி | ICTAD வழிகாட்டிகளுக்கமைவாக தேவையான தரம். |
|---|---|
| i) கட்டிட நிர்மாணங்கள்<br>ii) அலுமீனிய பகுதிபிரிப்புகள்<br>iii) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு<br>iv) பாதுகாப்பு வேலி நிர்மாணம்<br>v) சிறிய திருத்த வேலைகள் மற்றும் பேணல் | C8, C9 மற்றும் C10 |

**பிரிவு "B" இல் "I" இலிருந்து "V" வரையிலான நிர்மாண வேலைகளுக்கு கொழும்பு-07, விஜேராம மாவத்தை, 123ஆம் இலக்கத்திலுள்ள ICTAD அலுவலகத்தினால் வழங்கப்பட்ட பதிவுப் புத்தகத்தின் நிழற்படப்பிரதியொன்றுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலேயுள்ள வேலைகளுக்காக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் ஏற்கனவே பதிவு செய்துள்ள நபர்கள் மேலேயுள்ள ICTAD பதிவுடன் 2025ஆம் வருடத்திற்கான புதுப்பித்தலுக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.**

**பிரிவு "C" தொலைக்காட்சி தயாரிப்புகளுக்காக உபகரணங்கள் மற்றும் தொடர்புற்ற சேவைகளை வாடகைக்கமர்த்தல்**
**வகுதி**
**எண் வகுதி**
01. கட்புல செவிப்புல உபகரணங்களை வாடகைக்கமர்த்தல்
02. செவிப்புல ஸ்டுடியோக்களை வாடகைக்கமர்த்தல்
03. மின்பிறப்பாக்கிகள் மற்றும் பாரந்தூக்கிகள் போன்றவற்றை வாடகைக்கமர்த்தல்
04. Gantries / Scaffolding போன்றவற்றை வாடகைக்கமர்த்தல்
05. கூடாரங்களை அமைத்தல்
06. கெமரா Tracks மற்றும் Dollies / Jib Arms வாடகைக்கமர்த்தல்
07. ஒளி முறைமைகள் - ஒளியேற்றும் விசேட effectsகளை வாடகைக்கமர்த்தல்
08. செட்டுகள், மேடைகள், ஒப்பனைகள், தளபாடங்கள் வாடகைக்கமர்த்தல்
09. ஒலி உபகரண முறைமைகளை வாடகைக்கமர்த்தல்
10. இசைக்கருவிகள் / இசைக்குழுக்களை வாடகைக்கமர்த்தல்
11. அரங்கு / செவிப்புல / குரல்பதிவு ஸ்டுடியோக்கள் (ஒலி ஸ்டுடியோ பதிவு செய்யும் வசதிகள்)
12. வீடியோ கெமராக்கள், Coptercams, தொகுக்கும் வசதிகள் & OB வசதிகள்
13. இயந்திரங்களை (மழை, காற்று, பனி, நுரை, புகை போன்றவை) வாடகைக்கமர்த்தல்
14. ஒலிபெருக்கி சாதனங்கள் / நடமாடும் PA ஸ்டுடியோ ஊக்குவிப்பு வண்டிகள் போன்றவற்றை வாடகைக்கமர்த்தல்
15. வீடியோ புரொஜெக்டர்கள், திரையிடல், LED மதில்கள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்
16. 8 மணித்தியால Call sheet பிரகாரம் புகைப்பட கலைஞர்கள், ஒலியிடல் தொழில்நுட்பவியலாளர்கள், ரெக்கோடிங்குகள் போன்றோரை வாடகைக்கமர்த்தல்
17. தயாரிப்பு குழுவினருக்கான தங்குமிட வசதிகள்

**"மாகாண மட்டத்தில் (நாடு முழுவதும்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பிரிவு C" கீழாக, வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் பதிவுசெய்து கொள்ளப்படுவதுடன் நிகழ்சி தயாரிப்பு பகுதிகளில் வசிக்கும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**பிரிவு "D" வாகனங்களை புதுப்பித்தல் மற்றும் அது சார்ந்த வேலைகள்**

| **வகுதி**<br>**இல வகுதி** | **குறிப்பு** |
|---|---|
| 01 மோட்டார் வாகன திருத்தவேலைகள்<br>02. மோட்டார் வாகன சேர்விஸ்கள்<br>03. தகர வேலை மற்றும் நிறப்பூச்சு வேலைகள்<br>04. மோட்டார் வாகனங்களின் Upholstery வேலைகள்<br>05. வாகன வளிச்சீராக்கல்கள்<br>06. வாகன மின்சார வேலைகள்<br>07. இயந்திரம் Rebuilder<br>08. கடைசல் இயந்திர வேலைகள் | கொழும்பு, தெஹிவளை, கல்கிசை மற்றும் கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள திருத்தகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

**பிரிவு "E" ஏனைய சேவைகள்**
**வகுதி**
**இல வகுதி**
01. அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்
02. உருக்குத் தளபாடங்களின் திருத்தவேலைகள் - கபோர்ட்கள் மற்றும் கெபினட்டுகள் உட்பட
03. அலுவலக தளபாடங்களின் திருத்தவேலைகள்
04. Colour processing and developing of films
05. வாகனங்களை வாடகைக்கு பெறல், வேன் வண்டிகள், கார்கள், ஜீப் வண்டிகள் மற்றும் லொறிகள்
06. தளபாடங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்
07. கொடி கம்பங்களை (G.L.) வாடகைக்குப் பெறல்
08. தொழிலாளர்களை வாடகைக்கமர்த்தல் (திறனுள்ள மற்றும் திறனற்ற)
09. அச்சுகோர்ப்பு - நிறம் பிரித்தெடுத்தல் (Screen Printing)
10. கட்அவுட்கள் / Billboard / பதாகைகள் / டிஜிட்டல் திரைகள் என்பவற்றை எழுப்புதல்
11. உயிரோட்டமுள்ள திரைபடங்கள் (Animation)
12. DVD மற்றும் VCD என்பவற்றை பிரதியீடு செய்தல்.
13. பீடைகளை கட்டுப்படுத்தல்

ஒவ்வொரு உருப்படி வகுதிக்குமான (நிர்மாண வேலைகள் நீங்கலாக) தனித்தனியான விண்ணப்பங்களை பின்வரும் விபரங்களுடன் பதிவுத் தபாலில் **"2025ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்"** என குறிப்பிடப்பட்டு 2024.10.30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பணிப்பாளர் நாயகத்தை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். இப்பத்திரிகை அறிவித்தல் நியதியின் பிரகாரம் 2024ஆம் வருடத்திற்கு பதிவு செய்தவர்களும் புதிய பதிவிற்காக மீள்விண்ணப்பம் செய்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வகுதி உருப்படிக்கும் பதிவுக் கட்டணமாக 500.00 ரூபாவிற்கான காசோலையொன்றை தயவு செய்து அனுப்பவும். கீழே குறிப்பிட்டுள்ளவாறு காசோலைகள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பெயரில் வழங்கப்பட்டு விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு : ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளுக்கு விண்ணப்பித்தால், கொடுப்பனவுகளை ஒரே காசோலை மூலம் செலுத்துதல் வேண்டும்.**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

01) உருப்படியின் வகுதி மற்றும் உருப்படி இல. ............... (தயவு செய்து இருப்பிலுள்ள உருப்படிகளின் பட்டியலை இணைக்கவும்)

02) வியாபார பதிவு (தயவு செய்து பிரதியொன்றை இணைக்கவும்)

03) பெசேவ பதிவெண்:

04) பெசேவ இற்கு பதிவில்லையெனில் -

(கம்பனியானது பெசேவ இற்கு பதிவு செய்யப்படவில்லையென உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றை தயவு செய்து இணைக்கவும்)

05) நீங்களொரு உற்பத்தியாளர் அல்லது உற்பத்தியாளரினால் நியமனம் செய்யப்பட்ட முகவரொருவரெனின், தயவுசெய்து இதற்கான ஆவணச் சான்றை இணைக்கவும்.

06) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :

07) தொலைபேசி இல.: ........................ தொலைநகல் இல.:......................மின்னஞ்சல்: ..................

08) வங்கியாளர்கள் : .......................................................

09) கிடைக்கத்தக்க கடன் வசதிகள் (கடன் வசதிகள் ஆகக் குறைந்தது 30 நாட்களுக்காவது இருத்தல் வேண்டும்)

10) கிடைக்கத்தக்க விநியோக வசதிகள் :

11) விண்ணப்பத்துடன் கம்பனியின் விபரங்களை சமர்ப்பிக்கவும்.

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி :

***குறிப்பு: இந்த விளம்பரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மாத்திரமே விலைமனுக் கூறுகளைக் கோர வேண்டுமென்ற கடப்பாடு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு இல்லை.***

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம், கொழும்பு - 07.**

# நியூசிலாந்தை இன்னிங்ஸால் வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை அணி

*கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடிய நிஷான் பீரிஸின் ஆறு விக்கெட்டுகளின் உதவியோடு நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 154 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி 15 ஆண்டுகளின் பின்னர் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஒன்றை 2–0 என முழுமையாகக் கைப்பற்றியது.*




தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

காலியில் நடந்த இந்த டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்ப்பதற்கு 514 ஓட்டங்களைப் பெற வேண்டிய நெருக்கடியுடன் ஆட்டத்தின் நான்காவது நாளான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணி 81.4 ஓவர்களில் 360 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது நிஷான் பீரிஸ் 33.4 ஓவர்களில் 170 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த டெஸ்டில் மொத்தமாக 9 விக்கெட்டுகளை வீழ்த்திய அவர் தனது கன்னி டெஸ்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை வீரர்கள் வரிசையில் பிரபாத் ஜயசூரிய (12) மற்றும் பிரவீன் ஜனவிக்ரமவுக்கு (11) அடுத்து மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.

இந்த டெஸ்ட் போட்டியில் கமிந்து மெண்டிஸ், தினேஷ் சந்திமால் மற்றும் குசல் மெண்டிஸின் சதத்தின் உதவியோடு இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 602 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 88 ஓட்டங்களுக்கு சுருண்டதால் அந்த அணி இரண்டாவது இன்னிங்ஸுக்கு பலோ ஒன் செய்ய வேண்டி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் தனது புள்ளி விகிதத்தை 50 இல் இருந்து 55.55 ஆக அதிகரித்துக்கொண்டதோடு தொடர்ந்து மூன்றாவது இடத்தில் நீடித்து வருகிறது. மறுபுறம் நியூசிலாந்து நான்காவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்திற்கு சரிந்துள்ளது.

## முழுநேர பயிற்சியாளராக சனத் ஜயசூரிய நியமனம்



இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால பயிற்சியாளராக செயற்பட்ட முன்னாள் அணித் தலைவர் சனத் ஜயசூரியவை ஓர் ஆண்டு காலத்திற்கு முழு நேர பயிற்சியாளராக இலங்கை கிரிக்கெட் சபை நியமித்துள்ளது. நடந்து முடிந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை அடுத்து அவரது பதவிக் காலம் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை அணியின் அண்மைய செயல்பாடுகள் மற்றும் அணியில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கிலேயே ஜயசூரியவுக்கு முழு நேர பயிற்சியாளர் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் வட்டாரம் தெரிவித்துள்ளது.

இலங்கை அணியின் பயிற்சியாளராக செயற்பட்ட இங்கிலாந்தின் கிறிஸ் சில்வர்வுட்ட தனது ஒப்பந்தத்தை நீடிக்காமல் இருக்க தீர்மானித்ததை அடுத்தே கடந்த ஜூலையில் ஜயசூரிய இடைக்கால பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அவரின் பயிற்சியின் கீழ் கடந்த ஓகஸ்டில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்ற இலங்கை அணி, இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் டெஸ்ட் தொடரை இழந்தபோதும் ஓவலில் நடந்த கடைசி டெஸ்ட் போட்டியை இலங்கை அணியால் வெல்ல முடிந்து. இதனைத் தொடர்ந்து நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணியால் 2–0 என முழுமையாக கைப்பற்ற முடிந்தது.

## வெள்ளம், நலச்சரிவினால் நேபாளத்தில் 112 பேர் பலி



நேபாளத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் பலர் காணாமல்போயுள்ளனர்.

தலைநகர் காத்மண்டுவைச் சூழவிருக்கும் பள்ளத்தாக்கு பகுதிகள் வெள்ள நீரால் மூழ்கி இருப்பதோடு மக்கள் வீட்டுக் கூரைகளில் நிர்க்கதியாகியுள்ளனர். தலைநகரில் 200க்கும் அதிகமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதுவரை 3,000க்கும் அதிகமானவர்கள் மீட்கப்பட்டிருப்பதாக அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். திடீர் வெள்ளத்துடன் சேர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவுகளே அதிக உயிரிழப்புகளுக்கு காரணமாகியுள்ளது. பக்தபூர் நகரில் நிலச்சரிவில் வீடு ஒன்று இடிந்து அதில் இருந்து கர்ப்பிணிப் பெண் மற்றும் நான்கு வயது குழந்தை உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர்.

## நிர்க்கதியான இரு வீரர்களை அழைக்க விண்கலம் பயணம்



விண்வெளியில் கடந்த ஜுன் மாதம் தொடக்கம் நிர்க்கதியாகியுள்ள இரு விண்வெளி வீரர்களை அழைத்து வரும் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் கடந்த சனிக்கிழமை (28) அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இருந்து விண்வெளிக்கு ஏவப்பட்டது.

இந்த விண்கலத்தில் புட்ச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகிய இருவரும் பூமிக்கு திரும்புவதற்காக இரு இருக்கைகள் காலியாக வைக்கப்பட்டன. இதில் நாசா விண்வெளி வீரர் நிக் ஹேக் மற்றும் ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் கொர்புனொவ் புதிய விநியோகங்களை ஏடுத்துக் கொண்டு விண்வெளிக்குப் புறப்பட்டனர்.

எட்டு நாள் பயணமாக விண்வெளிக்குச் சென்ற சுனிதா மற்றும் வில்மோர் ஆகியோரின் விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தொடர்ந்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்க வேண்டி ஏற்பட்டது. இவர்கள் எதிர்வரும் பெப்ரவரியில் பூமிக்கு திரும்புவர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நான்கு நாடுகள் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் சபையில் தாய்வானை இணைத்துக் கொள்ளுமாறு மார்ஷல் தீவுகள், மேற்கு பசுபிக் தீவு நாடான பௌலு குடியரசு, பரகுவே, சுவாசிலாந்து ஆகிய நான்கு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்க விடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி தாய்வான் வெளியுறவு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## நஸ்ரல்லாவின் படுகொலையைத் தொடர்ந்தும் லெபனானில் இஸ்ரேல் இடைவிடாது தாக்குதல்

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹஸன் நஸ்ரல்லா படுகொலை செய்யப்பட்ட பின்னரும் லெபனான் மீது இஸ்ரேல் நேற்று (29) சரமாரித் தாக்குதல்களை தொடர்ந்து முன்னெடுத்ததோடு இதில் மேலும் பலர் கொல்லப் பட்டுள்ளனர்.

இஸ்ரேலை நோக்கி தாக்குதல்களை நடத்தத் தயாராக இருந்த ஏவுகணைத் தளங்கள், அயுதக் களஞ்சியங்கள், ஹிஸ்புல்லா உட்கட்டமைப்புகளை இலக்கு வைத்து விமானப் படை தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது.

மறுபுறம் செங்கடல் பகுதியில் இருந்து இஸ்ரேலை நோக்கி வந்த ரொக்கெட் குண்டு ஒன்றை கடற்படை இடைமறித்ததாகவும் லெபனானில் இருந்து வந்த மேலும் எட்டு ரொக்கெட் குண்டுகள் திறந்த வெளிப் பகுதிகளில் விழுந்ததாகவும் இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.



லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகரில் இருக்கும் ஹிஸ்புல்லா தலைமையத்தின் மீது இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய பாரிய வான் தாக்குதல் ஒன்றில் நஸ்ரல்லா கொல்லப்பட்டார்.

எனினும் இஸ்ரேலுக்கு எதிராக தொடர்ந்து போரிடுவதாக குறிப்பிட்டிருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பு நேற்றுக் காலையும் இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டுகளை வீசியது.

காசா போரை ஒட்டி சுமார் கடந்த ஓர் ஆண்டாக இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பரஸ்பர தாக்குதல்கள் இடம்பெற்று வந்த நிலையில் நஸ்ரல்லாவின் படுகொலை மோதலை தீவிரப்படுத்தி பிராந்தியம் எங்கும் போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு எதிராக பதிலடி கொடுப்பது தொடர்பில் ஈரான் எச்சரித்திருப்பதோடு ஈரானுடன் லெபனான், ஈராக் மற்றும் சிரியாவில் துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க்கில் இருந்து கடந்த சனிக்கிழமை திரும்பிய இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை இலக்கு வைக்கும் வகையில் இஸ்ரேலின் பென்கூரியன் விமானநிலையத்தின் மீது ஏவுகணை வீசியதாக யெமனின் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏவுகணையை இடைமறித்து வீழ்த்தியதாக இஸ்ரேல் கூறியது.

நஸ்ரல்லா கொல்லப்பட்டதன் மூலம் கணக்கு நேர்செய்யப்பட்டிருப்பதாக இஸ்ரேல் குறிப்பிட்டதோடு நஸ்ரல்லாவால் பாதிக்கப்பட்ட பலருக்கும் கிடைத்த நீதி அவருடைய மரணம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

நஸ்ரல்லாவின் கொலைக்கு எதிர்ப்பு வெளியிட்டிருக்கும் ஈரான் ஐ.நா. பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்ட அழைப்பு விடுத்துள்ளது. ஈரானின் ஐ.நா. தூதுவர் ஆமிர் சயீத் இரவானி எழுதி இருக்கும் கடிதத்தில், இஸ்ரேலின் தாக்குதல்களை தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதற்கும் பிராந்தியத்தை முழு அளவில் போர் ஒன்றுக்கு இழுத்துச் செல்வதை தடுப்பதற்கும் பாதுகாப்புச் சபைக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் வடகிழக்கு லெபனானில் உள்ள பக்கா பள்ளத்தாக்கில் அயின் சிறு நகரில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டதாக லெபனானின் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இடிபாடுகளில் இருந்து ஆறு சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் மற்ற ஐவரினதும் உடல்களை தேடி மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்தி குறிப்பிட்டது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல்களில் லெபனானில் 33 பேர் கொல்லப்பட்டு மேலும் 195 பேர் காயமடைந்ததாக லெபனான் சுகாதார அமைப்பு தெரிவித்தது. கடந்த வாரம் லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியது தொடக்கம் அங்கு 700க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் லெபனானுக்குள் 200,000க்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் 50,000க்கும் அதிகமானவர்கள் அண்டை நாடான சிரியாவுக்கு தப்பிச் சென்றிருப்பதாகவும் ஐ.நா. அகதிகளுக்கான நிறுவனத்தின் தலைவர் பிலிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை தெற்கு பெய்ரூட்டில் வான் தாக்குதல்கள் இடைவிடாது தொடர்ந்ததால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெட்ட வெளிகளில் இரவைக் கழித்தனர்.

## பாதுகாப்புடைய இடத்திற்கு மாற்றப்பட்டார் அலி கமனே



இஸ்ரேலின் தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்ட நிலையில் ஈரான் உயர்மட்டத் தலைவர் ஆயதொல்லா அலி கமனே பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாக ஈரானிய பாதுகாப்பு வட்டாரத்தை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய முகவர்களின் ஊடுருவல் தொடர்பில் ஈரான் அதிகாரிகள் இடையே கவலை அதிகரித்திருக்கும் நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நஸ்ரல்லாவின் படுகொலையை அடுத்து கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், 'இந்தத் தியாகியின் இரத்தத்திற்கு பதில் அளிக்கப்படும்' என்று எச்சரித்திருந்தார்.

ஏற்கனவே ஹிஸ்புல்லா அமைப்பின் வோக்கி டோக்கி மற்றும் பேஜர் உபகரணங்கள் வெடித்த சம்பவங்களை அடுத்து அனைத்து தொடர்பாடல் சாதனங்களையும் சோதனைக்கு உட்படுத்த பாரிய அளவான நடவடிக்கை ஒன்றை ஈரான் புரட்சிக் காவல் படை முன்னெடுத்துள்ளது. இந்த உபகரணங்கள் பெரும்பாலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை அல்லது சீனா மற்றும் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று ஈரான் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

## ஹிஸ்புல்லாவின் அடுத்த தலைவராகிறார் சபிதீன்?



பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹசன் நஸ்ரல்லாவுக்கு பதில் ஹிஸ்புல்லாவின் புதிய தலைவராக ஹஷிம் சபிதீன் நியமிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 32 ஆண்டுகளாக ஹிஸ்புல்லா தலைவராக செயற்பட்ட நஸ்ரல்லாவின் உறவினரான சபிதீன், பெய்ரூட் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஆரம்பத்தில் கூறப்பட்டபோதும், அவர் உயிருடன் இருப்பது பின்னர் உறுதி செய்யப்பட்டது.

நஸ்ரல்லாவுடன் உடல் அமைப்பில் ஒத்திருக்கும் சபிதீன் ஹிஸ்புல்லாவின் ஆரம்ப காலத்திலேயே அந்த அமைப்பில் இணைந்தவர்களில் ஒருவராவார். 1964 ஆம் ஆண்டு பிறந்த அவர் 1990கள் தொடக்கமே நஸ்ரல்லாவுக்கு அடுத்து ஹிஸ்புல்லாவின் தலைவராக அறியப்பட்டு வந்தார்.

அவர் 2017 இல் அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் சேர்க்கப்பட்டார். ஹிஸ்புல்லாவின் அரசியல் விவகாரத்திற்குப் பொறுப்பாகவும் அந்த அமைப்பின் ஜிஹாத் கௌன்சில் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார். அதே போன்று அவர் அமெரிக்காவால் படுகொலை செய்யப்பட்ட ஈரானிய இராணுவ ஜெனரல் கசம் சுலைமானியின் மகள் செய்னப் சுலைமானியின் மாமனார் ஆவார்.

## இஸ்ரேலிய டாங்கிகள் குவிப்பு



லெபனான் எல்லைக்கு அருகில் இஸ்ரேலிய டாங்கிகள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில் தரைவழி படை நடவடிக்கை ஒன்று பற்றி அச்சம் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் தரைவழி நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகும் வகையில் இஸ்ரேலியப் படை எல்லையைத் தாண்டி சிறு அளவான ஊடுருவலை ஏற்கனவே மேற்கொண்டு வருவதாக இரு அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏ.பி.சி. நியுஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தரைவழி நடவடிக்கை ஒன்று தொடர்பில் இஸ்ரேல் இன்னும் உறுதியான தீர்மானம் ஒன்றை எடுக்காதபோதும் அதற்கான தயார்படுத்தல்களை மேற்கொண்;டு வருவதாக அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். தரை நடவடிக்கை ஒன்று இடம்பெற்றாலும் அதன் அளவு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 30ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 142,500 மில்லியனுக்கான திறை சேரி உண்டியல்கள் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09125A038 | LKA18225D047 | LKA36425J030 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 65,000 | 67,500 | 10,000 | 142,500 |

ஏல விற்பனைத் திகதி : 2024 ஒக்டோபர் 02

தீர்ப்பனவுத் திகதி : 2024 ஒக்டோபர் 04

வழங்கப்படும் திகதி : 2024 ஒக்டோபர் 04

விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஒக்டோபர் 02 புதன்கிழமை மு.ப. 11.00

விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம் என்ற அதேவேளை மேலே குறிப்பிடப்பட்டவாறு குறைந்தபட்ச விலைக்குறிப்பீட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**கே.ஏ.யூ.எஸ்.கே.திலகரத்ன**
**பதில் பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம்

### ஊவா மாகாணம்

1. திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் ''1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் இல. 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
3. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையின் 5ஆம் பிரிவில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்த தரவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் / செயலாளர் அவர்களிடமிருந்து வாரநாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 2024-09-30ஆம் திகதி முதல் 2024-10-20ஆம் திகதி வரை 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மீளளிக்கப்படாத 5000.00 கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024-10-21ஆம் திகதி 10.00 மணித்தியாலயம் அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சகல விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2024-10-07ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு (இல.ரூ. மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக் கோரல் பிணைத் தொகை (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| எல்ல பிரதேச சபை | CLG/UP/BD/EPS/W/2024/1 | எல்ல நகரத்திலிருந்து சுற்றுலா ஹோட்டல்கள் ஊடான புகையிரத நிலையப் பாதை | 6.8 | 60 நாட்கள் | C7 மற்றும் C6 - பெருந் தெருக்கள் | 68,000.00 | 2025-01-30 | உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை. 0552222407 |

**ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**

**0552222407**
2024-09-30.

# பெறுகை அறிவித்தல்

## கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

## தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கள் கோரல் (NCB)

2024/2025ஆம் ஆண்டுகளின் பொருட்டு கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச வைத்திய பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் சேவைகள் வழங்குவதற்காக தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை முறி | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| GWUIM/GA/05/CLN/2024 | சுத்திகரிப்புச் சேவைகள் வழங்கல் | ரூபா 200,000.00 | 2025.02.03ஆம் திகதி வரை அல்லது அதற்கு மேல் |

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

1. வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
2. 2023ஆம் ஆண்டு முடிவதற்கு முன் 05 வருட காலத்தினுள் 15 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத வருடாந்த பெறுமதியைக் கொண்ட குறைந்தபட்சம் 03 சுத்திகரிப்புச் சேவை ஒப்பந்தங்களையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக (Blacklist) இருத்தல் வேண்டும்.

சகல கேள்விப் படிவங்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலத்தைக் கொண்ட இலங்கையில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றில் துணை வேந்தர், கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி அல்லது இந்தப் பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்திருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பதில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் (033-2223784 அல்லது 033 2222748/740 நீடிப்பு இலக்கம் 136) மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்படி சேவை வழங்கலுக்கு இயைபான இடத்தை 2024-10-02ஆம் திகதி முதல் 2024-10-16ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம். இது தொடர்பான கேள்விக்கு முன்னான கூட்டமொன்று (Pre-bid Meeting) 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள குழு கூட்ட அறையில் இடம்பெறும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் அனைத்து ஆர்வமுள்ள கேள்விதாரர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

சகல கேள்விப் படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இது தொடர்பில் ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-18ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் தமது நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூல வேண்டுகோளொன்றுடன் நிறுனத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் பதில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் அவர்களுக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாகக் குறிப்பிட்டு முத்திரையிட்ட கடித உறைகளில் இட்டு மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ''கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல் - 2024/2025'' எனத் தெளிவாக குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புச் சேவைகள் வழங்குதல் 2024/2025ஆம் வருடம் எனும் கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்வது முடிவடைந்ததும் அவை உடனடியாக திறக்கப்படும என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இதற்கு இயைபான மேலதிக தகவல்கள் கேள்விப் படிவங்களில் தரப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**

2024-09-30.

# கேள்விகளுக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குரித்தான பின்வரும் அலகுகளுக்கு இயைபான ஒப்பந்தங்களுக்காக உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E | F |
|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | வேலை விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் | ICTAD தரம் |
| | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் | | |
| 01 | பரந்தன் அரச விதை உற்பத்திப் பண்ணையில் வேலியை நிர்மாணித்தல் | SPD/2/5/4/19(2024) | 95,400.00 | 190,800.00 | 2025-02-05 | ரூபா 3,500.00 | C7 மற்றும் C6 |
| 02 | பொலன்னறுவை பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தில் 10ஆம் இலக்க களஞ்சியசாலையின் திருத்தவேலைகள் | SPD/2/5/4/34(2024) | 106,900.00 | 213,800.00 | 2025-02-05 | ரூபா 5,000.00 | C6 மற்றும் C5 |
| 03 | சீத்தாஎலிய முன்ஆரம்ப விதை உருளைக்கிழங்கு உற்பத்தி தாவரவியல் கட்டிடத்தொகுதிக்கு கிருமிகள் உட்புகுவதைத் தடுப்பதற்காக ஊழியர்களுக்கு பாதுகாப்பு உடைகளை அணிவதற்கான அறை மற்றும் அலுமினிய ராக்கைகளை நிர்மாணித்தல் | SPD/2/5/4/35(2024) | 171,250.00 | 342,500.00 | 2025-02-05 | ரூபா 6,000.00 | C6 மற்றும் C5 |
| 04 | அலுத்தரம பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்குரித்தான II B 03ஆம் இலக்க உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | SPD/2/5/4/38(2024) | 103,700.00 | 207,400.00 | 2025-02-05 | ரூபா 4,000.00 | C6 மற்றும் C5 |
| 05 | குண்டசாலை அரச விதை உற்பத்தி பண்ணையில் மண் பாதுகாப்பு கட்டமைப்பை நிர்மாணித்தல் | SPD/2/5/4/40(2024) | 97,725.00 | 195,450.00 | 2025-02-05 | ரூபா 3,000.00 | C7 மற்றும் C6 |

இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட கேள்விப் படிவங்களைப் பயன்படுத்தி வெவ்வேறான கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் E நிரலில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்து 2024-10-01ஆம் திகதி முதல் 2024-10-21ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

01ஆம் இலக்க கேள்வியைச் சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் 1987ஆம் ஆண்டில் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ''தலைவர், பிரதேச பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல வழங்குநர்களும் மேற்படி அட்டவணையின் D நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் வங்கிப் பிணை முறியின் ஊடாக பிணையை வைப்புச் செய்வதானால் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024-10-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதனை.**
2024-09-30
**081-2388106/122**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# பெறுகை அறிவித்தல்

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம இலங்கை

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாணம் மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024-10-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்படி முகவரியிலுள்ள நிறுவனப் பிரிவில் 2024-10-14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரர்கள் தமது வேண்டுகோள் கடிதம், தகைமைகளை நிருபிக்கக்கூடிய சாட்சிகள் மற்றும் கேள்விக் கட்டணத்தைச் செலுத்தியமைக்காக அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| ஆவணக் கோவை இலக்கம் | செயற்றிட்டம் | தகுதிகள் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி | சராசரி மதிப்பீட்டுத் தொகை ரூபா. மில் |
|---|---|---|---|---|---|
| EH/TEN/28/2024 | PROPOSED RETAINING WALL FOR REAR SIDE OF RAZAVI MEDICAL COMPLEX | C7 AND C6 | 2,000.00 | 52,000.00 | 3.47 M |
| EH/TEN/30/2024 | RENOVATION OF PSM MEDICAL QUARTERS | C5 AND C4 Electrical Installations (Low Voltage) (EI LV) - EM 4 or Above | 4,000.00 | 394,000.00 | 26.30 M |

மேலதிக விபரங்களை தயவு செய்து பணிப்பாளர், அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம எனும் முகவரியில் விசாரித்தறியலாம். தொலைபேசி இல. 011-2840233. எவ்வித அறவீடுகளும் இன்றி கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தவிசாளர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாண, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## நீர்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு உரித்தான வெள்ளப் பாதிப்பு செயற்றிட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் வல்பிட்ட விவசாய நிலையத்தின் உள்ளக வீதிக்காக சரளைக் கற்களை பெற்றுக் கொள்ளல்

**கேள்வி இலக்கம் : PRDA/WP/PRO/2024/63**

இவ் அதிகாரசபையின் கீழ்க்காணும் கொள்வனவு மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்கல்கள மேற்கொள்ளும், அங்கீ-கரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | வேலை விபரம் | அலகு | அளவு | கேள்விப்பிணை காசாக (ரு) | கேள்விப் பிணை (வங்கி/ இன்சூரன்ஸ் ரு) |
|---|---|---|---|---|---|
| 01 | Supply of Approved Soil Type I & ii for Sub Base & Shoulder works (Rate Including Loading, Pilling and Transport)–JaelaHoragolla Road,DalupitiyaKaragahamuna Road &Walpita Agricultural Center – Internal Road | m3 | 298 | 5,000.00 | 10,000.00 |
| 02 | River Sand for Road surface, Concrete and Masonry work (Rate Including Pilling &Transport) | m3 | 11 | | |
| 03 | Supply of Ready Mix Concrete Grade 25 with Transport | m3 | 16 | 5,000.00 | 10,000.00 |

**ஆய்வகத்திற்கு தேவையான Core Barrel வழங்குதல்**
**கேள்வி இல : PRADA/WP/PRO/2024/62**

| உருப்படி இல. | வேலை விபரம் | அலகு | அளவு | கேள்விப்பிணை காசாக (ரு) | கேள்விப் பிணை (வங்கி/ காப்புறுதி) ரு |
|---|---|---|---|---|---|
| 01 | 100 mm Diameter Core Bits | Nos | 65 | 30,000.00 | 60,000.00 |

**வகவத்த எஸ்போல்ட் உற்பத்தியகத்திற்கான கருங்கல் வகைகளை கொள்வனவு செய்தல்**
**கேள்வி இல : PRDA/WP/PRO/2024/64**

| உருப்படி இல. | வேலை விபரம் | அலகு | அளவு | கேள்விப்பிணை காசாக (ரு) | வங்கிப் பிணை (வங்கி/காப்புறுதி) ரு |
|---|---|---|---|---|---|
| 01 | 00 - 05 மி.மீ கருங்கல் | கியூ.மி | 1400 | 46,000.00 | 92,000.00 |
| 02 | 05 - 10 மி.மீ கருங்கல் | கியூ.மி | 800 | | |
| 03 | 10 - 20 மி.மீ கருங்கல் | கியூ.மி | 400 | | |

| தொடர் இல. | கேள்வி இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் | கேள்வி திறத்தல் |
|---|---|---|---|
| 01 | PRDA/WP/PRO/2024/63 | 2024.09.30 முதல் 2024.10.14 நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை | 2024.10.15 மு.ப. 10.30 இற்கு |
| 02 | PRDA/WP/PRO/2024/62 | 2024.09.30 முதல் 2024.10.11 நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை | 2024.10.14 மு.ப. 10.30 இற்கு |
| 03 | PRDA/WP/PRO/2024/64 | 2024.09.30 முதல் 2024.10.11 நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை | 2024.10.14 பி.ப. 2.30 இற்கு |

03. கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 1209.50 இற்கு (அதிகாரசபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, கேள்வி ஆவணத் தொகுதியை பெற்றுக் காள்ளல் வேண்டும்.

